www.gnanam.info
www.gnanam.lk

டிசம்பர் 2023

# ஞானம்

கலை இலக்கியச் சஞ்சிகை 283

விலை : ரூபா 100/=



## கவிநாயகர் விநாயகர் கந்தவனம்

பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம் !

ஒளி:24
சுடர்:07
283

# பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம்!

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவிகொள்வர்.

ஆசிரியர் குழு

ஆசிரியர், ஸ்தாபகர் : தி. ஞானசேகரன்

இணை ஆசிரியர் : ஞானம் ஞானசேகரன்

நிர்வாக ஆசிரியர் : ஞானம் பாலச்சந்திரன்

ஓவியர்: கிறிஸ்டி நல்லரெத்தினம்

தொடர்புகளுக்கு

தொ.பேசி. ☞ 0094-11-2586013
0094-77-7306506
தொ.நகல் ☞ 0094-11-2362862
இணையம் ☞ www.gnanam.info
www.gnanam.lk
தளம்.ஞானம்.இலங்கை
மின்னஞ்சல் ☞ editor@gnanam.info
editor@gnanam.lk
அஞ்சல் ☞ 3B-46th Lane, Colombo-6, Sri Lanka
வங்கி விபரம் ☞ T. Gnanasekara Iyer
Acc. No. - 009010344631
Hatton National Bank,
Wellawatha Branch.
Swift Code : HBLILKLX
(மணியோடர்மூலம் சந்தா அனுப்பு பவர்கள் வெள்ளவத்தை தபாற் கந்தோரில் மாற்றக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்)
சந்தா விபரம் ☞ Sri Lanka
ஒரு வருடம் :ரூ 1,000/=
ஆறு வருடம் :ரூ 5,000/=
ஆயுள் சந்தா :ரூ 20,000/=

| | ஒரு வருடம் |
|---|---|
| Australia (AU$) | 50 |
| Europe (€) | 40 |
| India (Indian Rs.) | 1250 |
| Malaysia (RM) | 100 |
| Canada ($) | 50 |
| UK (£) | 40 |
| Singapore (Sin. $) | 50 |
| Other (US $) | 50 |

*⊙ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகளுக்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்பானவர்கள்.*
*⊙புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், தொலைபேசி எண், முகவரி, ஆகியவற்றை வேறாக இணைத்தல்வேண்டும்.*
*⊙பிரசுரத்திற்குத் தேர்வாகும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு.*
*⊙படைப்புகள் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு மின்னஞ்சலில் அனுப்பப்படவேண்டும்.*

## இதழினுள்ளே.....



⊙ **கவிதைகள்**

மனோகரி ஜெகதீஸ்வரன் *06*
அம்பலவன் புவனேந்திரன் *11*
கரோல் பிரீமன் / என். சண்முகலிங்கம் (மொழிபெயர்ப்புக் கவிதை) *14*
செ. சுதர்சன் *21*

⊙ **சிறுகதைகள்**

ஆசி கந்தராஜா (அறிவியல் புனைகதை) *07*
செ. மகேஷ் *15*
சுதாராஜ் *23*

⊙ **கட்டுரைகள்**

க.சிவபாலு *03*
பேராசிரியர் சபா ஜெயராசா *12*
எல். வஸீம் அக்ரம் *18*
மொழிவரதன் *22*
செங்கதிரோன் த. கோபாலகிருஸ்ணன் *31*
ஆ.இரகுபதி பாலஸ்ரீதரன் *34*
கஜனி சிவராஜா *35*
ஞா.பா.

⊙ **பத்தி**

பேராசிரியர் துரை மனோகரன் *38*

⊙ **சமகால இலக்கிய நிகழ்வுகள்**

கே. பொன்னுத்துரை *40*

# ஆசிரியர் பக்கம்

## வாசிப்பை நேசிப்போம்

இன்றைய தலைமுறையினரிடம் வாசிப்புப் பழக்கம் அருகிவருகிறது என்பது பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயம். வாசிப்பதால் ஏற்படும் நன்மைகள் பற்றி உலக மகாபுருஷர்கள் என்ன கருத்துக்களைக் கொண்டிருந்தார்கள் என்பதை இன்றைய தலைமுறையினர் அறிந்த கொள்வது விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துமல்லவா!

ஒரு கோடிரூபாய் பணம் கிடைத்தால் என்ன செய்வீர்கள் என்று கேட்டபோது ஒரு நூலகம் கட்டுவேன் எனப் பதிலளித்தார் மகாத்மாகாந்தி.

ஒரு நூலகம் திறக்கப்படும்போது ஊரில் ஒரு சிறைச்சாலை மூடப்படும் என்றார் சுவாமி விவேகானந்தர்.

ஒரு நல்ல பத்தகம் நூறு நல்ல நண்பர்களுக்குச் சமம் என்றார் அப்துல் கலாம்.

தனிமையில் தள்ளப்பட்டால் என்ன செய்வீர்கள் என்று கேட்டபோது புத்தகங்களுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்துவிட்டு வருவேன் என்று பதிலளித்தாராம் ஜவகர்லால் நேரு.

எங்கே தங்க விரும்புகிறீர்கள் என்று லண்டன் தோழர்கள் கேட்டபோது நூலகத்துக்கு அருகிலுள்ள ஹோட்டல் ஒன்றில் ஒழுங்கு செய்யுங்கள் எனக்கூறியவர் டாக்டர் அம்பேத்கார்.

அறிஞர் அண்ணா புற்று நோய்க்கு அமெரிக்காவில் உள்ள மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த சமயத்தில் மருத்துவர்கள் இன்று உங்களுக்கு அறுவைச் சிகிச்சை என்றபோது, தாம் வாசித்துக் கொண்டிருந்த புத்தகத்தின் சிலபக்கங்கள் பாக்கியிருப்பதால் அதைமுடிக்கும்வரை உயிர்காக்கும் அறுவைச் சிகிச்சையை தள்ளிவைக்கச் சொன்னாராம்.

இலண்டன் நூலகத்தில் இருபது ஆண்டுகாலம் படித்து ஆய்வு செய்த கார்ல்மார்க்ஸ் தான் பின்னாளில் பொதுவுடமைத்தத்துவத்தின் தந்தையாக விளங்கினார். தான் தூக்கிலிடுவதற்கு ஒரு நிமிடம் முன்புவரை வாசித்துக் கொண்டிருந்தவர் இந்நிய விடுதலை வீரர் பகத்சிங். கிரேக்க நாட்டுச் சிந்தனையாளர் சாக்கிரட்டீசுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டு நஞ்சு தனக்குக் கொடுக்கப்படும்வரை படித்துக் கொண்டே இருந்தாராம். உடலுக்கு எப்படி உடற்பயிற்சியோ அதுபோல மனப்பயிற்சி புத்தக வாசிப்பு என்றார் சிக்மன்ட பிரைய்ட். வேறு எந்தச் சுதந்திரமும் வேண்டாம் சிறையில் புத்தக வாசிப்பை மட்டும் அனுமதிக்க வேண்டும் என்றார் நெல்சன் மண்டேலா மனிதனின் ஆகப் பெரிய கண்டுபிடிப்பு புத்தகம்தான் என்றார் ஆல்பிரட் ஐன்ஸ்டீன். என் கல்லறையில் மறக்காமல் எழுதுங்கள் இங்கே ஒரு புத்தகப்புழு உறங்கிறதென்றாராம் பெட்ரண்ட் ரஸல்.

பிறந்த நாளுக்கு என்ன வேண்டும் எனக் கேட்டபோது புத்தகங்கள் வேண்டும் என சற்றும் தயக்கமின்றி லெனின் கூறியவுடன் புத்தகங்கள் பலலட்சம் வந்து குவிந்ததாம். ஒரு குழந்தைக்கு நீங்கள் தரும் ஆகச்சிறந்த பரிசு ஒரு புத்தகம்தான் என்றார் வின்ஸ்டன் சர்ச்சில். பயங்கரமான போராட்ட ஆயுதங்கள் எவை எனக்கேட்டபோது புத்தகங்கள்தான் என்றாராம் மாட்டின்லூதர் கிங்.

பழங்காலத்து மகாபுருஷர்களை நேரில் சந்தித்து அவர்களுடன் உரையாட வேண்டுமா நூலகத்திற்குப் போங்கள் என்றார் மாசேதுங்.

இத்தனை அறிஞர்கள் சொல்லிய அந்த வாசிப்பை நாமும் நேசிப்போம்; பயன்பெறுவோம்.

○○○

அட்டைப்பட அதிதி

# 90ஆவது அகவைப்பூர்த்தியில் கவிநாயகர் விநாயகர் கந்தவனம்



**அமுது எங்கே சுவை அங்கே**
**சுவை எங்கே தமிழ் அங்கே**
**தமிழ் எங்கே நான் அங்கே**
**நான் எங்கே தமிழ் அங்கே**

எனக் கவியால் பட்டி தொட்டியெங்கும் தமிழ் முழக்கம் செய்துவந்த கவிநாயகர் சிறிது காலமாகச் சுகவீனமுற்ற நிலையில் தனது இல்லத்தில் வாழ்ந்து வருகின்றார். மேற்படி வரிகளுக்குச் சொந்தக்காரர். "கவியரங்கத்திற்கு ஒரு கந்தவனம்" என்று அடைமொழி கொடுக்கப்பட்டு அழைக்கப்பட்டவர். கவிநாயகர் பங்குபற்றாத கவியரங்குகளே இல்லை என்று சொல்லும் அளவிற்கு ஈழத்தின் நெடுந்தீவு தொடக்கம் கல்முனைவரை அவரது கவிதைகள் கோலோச்சியதோடு புலம்பெயர்ந்த பின்னர் கனடாவில் நடக்கும் தமிழர் நிகழ்வுகளில் அவர் பங்குபற்றாதவை இல்லை என்றே கூறும் அளவிற்கு கோலோச்சியவர்.

சாவகச்சேரி நுணாவில் விநாயகர் மற்றும் சின்னம்மா தம்பதியினரின் இளைய மகனாகப் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை நுணாவில் சைவப்பிரகாச வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியை சாவகச்சேரி றிபேக் கல்லூரியிலும் பின்னர் உயர் நிலைக் கல்வியை தமிழ் நாட்டில் உள்ள கிறிஸ்தவக் கல்லூரியிலும் கோவை அரசினர் கலைக்கல்லூரியிலும் பயின்று பட்டம் பெற்ற இவர், புவியியலைப் பிரதானமாகக் கொண்டவராக இருந்தாலும் தமிழ்மீது அதீதபற்றுக்கொண்டவராகவும் பாண்டித்தியம் பெற்றவராகவும் தன்னை ஒரு தமிழறிஞராகப் புடம்போட்டுக்கொண்டார்.

மாத்தளை St. Thomas College, வசாவிழான் மத்திய மகாவித்தியாலயத்திலும் ஆசிரியராகவும், முல்லைத்தீவு யோகபுரம் மகா வித்தியாலயம், மற்றும் யாழ். அளவெட்டி அருணோதயக் கல்லூரி, வசாவிளான் மத்திய கல்லூரியிலும் அதிபராகவும் கடமையாற்றிய பின்னர் சில ஆண்டுகள் நைஜீரியாவில் ஆசிரியராகவும் பணிபுரிந்த பின்னர் வாருணன் மற்றும் வாணி ஆகிய இரு பிள்ளைகளோடு கனடாவில் குடியேறி வாழ்ந்துவருகின்றார்.

கனடாவின் தேசிய கீதத்தை தமிழாக்கம் செய்து தமிழ் மாணாக்கர்களால் தமிழில் இசைக்க வழி சமைத்தவர் இவரே!

கவிநாயகர் வி. கந்தவனம் அவர்களின் வாழ்வும் வரலாறும் சங்க இலக்கிய மரபின்வழி மரபுதழுவி ஆவணப்பதிவினை வெண்பாக்களால் வடித்தெடுத்துள்ளனர் கனடா கவிஞர் கழகத்துக் கவிஞர்கள் இதனை நூலுருவாக்க எடுத்துக் கொள்ளப்பட்ட கவிஞர் கழகத்தின் முயற்சியினை எத்துணை பாராட்டியும் போதாது என்றே சொல்ல வேண்டும்.

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தவன் தமிழன், அந்தப் பெருமையுடைத்துத் தமிழ்போற்றும் நல்லுலகு. அந்தப் பெருமைக்கேற்ப கழகம் வைத்து ஆற்றுப்படுத்தி, அநுகூலந் தந்து, புலமை கற்றுத் தந்து, புதுமெருகூட்டிய பெருமகன், என்பது பெருமதிப்பிற்கும், அன்பிற்கும், நட்பிற்கும் இலக்கணமாகத் திகழும் கவிநாயகர் வி. கந்தவனம் அவர்கள். என்னை உடன்பிறப்பாகக் கருதி அன்பால் அடிமை கொண்டவர். தனது வீட்டிற்கு அழைத்து உபசரித்து தானும் மகிழ்ந்து எம்மையும் மகிழவைக்கும் கவிநாயகர் தம்பதியினரின் உபசரிப்பை நினைக்குந் தோறும் அப்பூதி அடிகளாரின் நினைவே மனத்தெழுகின்றது.



த.சிவபாலு

தமிழ் மொழியின் நிலைக்களன் கவிதை வடிவமேயாம். மொழி வளர்ச்சியில் பேச்சு, எழுத்து என்பன மிக முக்கியத்துவம் பெறுகின்றன. பேச்சாற்றல் மொழியைத் திருத்தமாகப் பேசவும், விளங்கிக்கொள்ளவும் வைக்கின்றது. எழுத்தாற்றல் தனது உள்ளக் கிடைக்கைகளை, நெஞ்சத்து எழும் உணர்வுகளை பதிவாக வெளிக்கொண்டுவர உதவும் மிகப்பெரும் கருவியாக அமைகின்றது. எந்த மொழிக்கும் இல்லாத சிறப்பைப் பெற்றது எமது தமிழ் மொழி. முத்தமிழ் என அழைக்கப்டும் சிறப்பு, உயர்வு, பண்பு, மேன்மை, செம்மை எல்லாம் எம் தமிழுக்கு உண்டு. கவிதை கட்டுதல் அல்லது செய்யுள் புனைதல் என்பது மொழி வளர்சியின் உயர்ந்த படியாகும். இதனை இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே எம் இனத்தவர்கள் கற்றுக்கொண்டு மிகத் திருத்தமாக இலக்கணத்தோடு சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் பான்மையைத் தமதாக்கிக் கொண்டவர்கள். அதன்வழி கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிய நாகரிகம் படைத்த எமது பண்டைய சமுதாயம், மிகச் சுருக்கமாகத் தமது பதிவுகளைச் செய்யுள்வழி ஆக்கி வைத்துள்ளனர். நவீன தொழில் நுட்பச்சாதனங்கள், காகிதத்தின் பயன்பாடு என்பன அதிகரித்தமையால் கவிகட்டுவதிலும் கட்டுரை எழுதுவது இலகுவாகிவிட்டது. எனினும் உணர்வுகளை வெளிப்படுத்தும் ஆற்றல் கட்டுரைகளை விட கவிதைகளுக்கே உண்டு.

இக்கவிதை மரபினைக் குறிப்பாக பாரம்பரிய செய்யுள் மரபினை மறைந்துபோக விடாது அதனைப் புலம்பெயர்ந்த பனிப்புலத்திலும் நிலைநிறுத்தவேண்டும் என அவாவி நின்றவர்களுள் கவிநாயகர் கந்தவனமும் ஒருவர். தான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகமே என மற்றவர்கள் இன்புறக்கண்டு இன்பங்கொள்ளும் மரபினர். அவர் கவிதை வகுப்புக்களைத் தொடங்கி நடத்தி வந்ததோடு தனது நீண்டகால மனச்சுமையை கவிஞர் கழகத்தை உருவாக்கி இறக்கிவைத்தவர். தங்களிடம் தேங்கிக் கிடக்கும் கவிகட்டும் மற்றும் செய்யுள் புனையும் ஆற்றல்களை தம்மோடு மறைந்துபோகவிடாது அவற்றை எதிர்காலச் சந்ததியினருக்கும் கிடைக்கும் வாய்ப்பினை நல்க வேண்டும் என்ற நோக்கோடு பல ஆண்டுகளாக இந்த நன்முயற்சியில் அயர்வின்றிச் செயற்பட்டு வந்துள்ளமைக்கு நானும் இராமாணயத்தில் சேது அணைகட்டப்பட்ட வேளை அணிலும் பங்களிப்புச் செய்தது போன்று அதில் பங்கு கொள்ள நான் கனடா எழுத்தாளர் இணையத்தின் தலைவராகச் செயற்பட்டவேளை கவிதை வகுப்புக்களை ஏற்பாடு செய்து தந்தமையை நினைத்துப் பார்க்கின்றேன்.

சமூகத்திற்கு பயன்படத்தக்க பல்வேறு பணிகளில் சமய, இலக்கிய, சமூகப் பணிகளில் தன்னை இணைத்துக் கொண்டுள்ள கவிநாயர் அவர்கள் கவிதை வகுப்புக்களையும் ஒழுங்கு முறைப்படி தவறாது நடத்திவைத்து கவிதை கற்க வந்தவர்களை ஊக்கத்தோடு பயில வழிவகுத்தவர். அவரது பணிகள் பதிவு செய்யப்படல்வேண்டும் என்னும் உயரிய நோக்கோடு கனடா கவிஞர் கழகம் மேற்கொண்டுள்ள முயற்சியினை தமிழ் கூறும் நல்லுலகம் என்றுமே பாராட்டும் என்பதில் ஐயமில்லை. கவிஞர் கழகத்து உறுப்பினர்கள் இன்றுபோல் என்றும் ‘அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு’ என்பது போன்று ஒற்றுமையாகவும் பலமாகவும் செயற்பறட்டு வருவது கருத்திற்கொள்ளற்பாலது. அகத்தியரின் நன்மாணாக்கருள் தொல்காப்பியர் போன்று மாவிலி மைந்தன் திரு. சண்முகராசா அவர்கள் அவரது பணியைப் பின்தொடர்ந்து மேற்கொண்டு கவிஞர்களை உருவாக்கிவருவது பாராட்டற்குரியது.

கவிநாயகர் அவர்களின் பணிகளை, ஆற்றலை, அவர்தம் வாழ்வியலை ஒரு நூலில் அடக்கிவிடமுடியாது. அவர் எழுதிக் குவித்த நூல்கள் பற்றி ஒரு கட்டுரைக்குள் அடக்கிவிடமுடியாது. அவர் ஆற்றிய சமயப்பணி அதற்கு மேலானது. தன்னடக்கத்தோடு தமிழ்கூறும் நல்லுலகிற்கு அவர் அற்றிய பணிகளை அளவிடமுடியாது. அவர் கவிஞர் கழகத்தோடு மட்டும் நின்றுவிடாது கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தின் உருவாக்கத்திற்கும், அதன் செயற்பாட்டிற்கும் முழுமூச்சாக உழைத்தவர் என்பதும் கருத்திற்கொள்ளற்பாலது. கனடா எழுத்தாளர் இணையத்தின் தலைவராகவும் காப்பாளராகவும் பல்வேறு வழிகளில் பங்களிப்புச் செய்துள்ளார். இலக்கியம்,

சமயம் சார்ந்த அறிஞர்களை உள்வாங்கி மகாநாடுகளையும் கருத்தரங்கங்களையும் நடத்துவதற்கும் காரணராக இருந்துவந்துள்ளார். மறைந்த அறிஞர்களான அதிபர் கனகசபாபதி, பேராசிரியர் பசுபதி, பேராசிரியர் கண்ணப்பன் போன்றோருடன் மிக நெருங்கிய தொடர்பை மிக நெருக்கமாகப் பேணி வந்தவர்.

ஆழ்கடலான் திரு.முருகவேள் பரமநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற பாராட்டு விழாவில் ''கவிநாயகர் கந்தவனம் அவர்கள் ஆத்மசோதி முத்தையா அவர்களின் வழியிலே சைவத்தையும் தமிழையும் வளர்க்க அரும்பாடு பட்டுத் தொண்டாற்றி வருகின்றார். சைவம் நலிந்தபோது சமயகுரவர்கள், ஆழ்வார்கள் அதை வளர்த்தமை போன்று எங்கள் மேன்மைக்குரிய ஐயா அவர்கள் அதனை வளர்த்து வருகின்றார். ஒரு மனிதனை அறிவதற்கு அவரின் கல்வி நிலையைப் பற்றி அறிவதன் மூலம் அவரின் தகுதிப்பாட்டை அறிந்துகொள்ள முடியும். கந்தவனம் ஐயா அவர்களுக்கு அவர்களின் கல்வித் தகைமையைச் சான்றாண்மையை நன்கு அறிந்து உலகப் பல்கலைக்கழகம் கலாநிதிப் பட்டத்தை வழங்கியுள்ளது என்றால் அவரது தகைமையைப் பற்றி நாம் கூறவேண்டிய அவசியமில்லை. இந்து சமயப் பேரவைக்குக் காப்பாளராக இருந்து தொண்டாற்றி வரும் கலாநிதி கந்தவனம் ஐயா அவர்களின் சேவையைப் பாராட்டவேண்டியது தமிழ் மக்கள் ஒவ்வொருவரதும் கடமை என்றும் குறிப்பிட்ட அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் புவியியல், பொருளியல் துறைகளில் தனது கல்வியை மேற்கொண்ட அவர் இலக்கியத்துறையிலும் பாண்டித்தியம் பெற்றார். கல்வியியல், நாடகத்துறையிலும் அவர் படித்துப்பட்டம் பெற்றார்'' எனக் குறிப்பிட்டுள்ளமை கருத்திற்கொள்ளத்தக்கது.

முனைவர் பார்வதி கந்தசாமி அவர்கள் கவிநாயருக்கு எடுக்கப்பட்ட பாராட்டு விழா மலரில் வரைந்த ஆங்கிலக் கட்டுரையிலிருந்து சிலபகுதிகள் கீழே தரப்படுகின்றன. ''கொழும்பு பல்கலைக்கழகத்தில் கல்வி டிப்ளோமா, நாடகம் மற்றும் நாடகத்துறையில் டிப்ளோமா ஆகியவற்றைப் பெற்று மூன்றாம் நிலைக் கல்வியைத் தொடர்ந்தார். அவர் ஒரு சிறந்த நாடக ஆர்வலரானார் மற்றும் அவர் G.C.E இல் நாடகம் மற்றும் நாடகம் கற்பித்த முதல் ஆசிரியரானார். தமிழ் வழிப் பள்ளிகளுக்கு உயர்தரம். இவருடைய தனிச்சிறப்பு சிறுவர் அரங்கம் ஆகும், இது குழந்தைகள் மீது தாக்கத்தை ஏற்படுத்தியது மற்றும் அவர்களில் சிலர் பிராந்திய மற்றும் இலங்கைத் தீவு அடங்கலான போட்டிகளிலும் பரிசுகளை வென்றனர்.

பல ஆண்டுகளாக கல்வி புறக்கணிக்கப்பட்ட மலையகம் மற்றும் பிற வளர்ச்சியடையாத பிரதேசங்களின் தகுதியான பல பிள்ளைகளின் வாழ்க்கையில் அவரது ஆசிரியர் வாழ்க்கை மாற்றங்களை ஏற்படுத்தியது. இலங்கையில் மாத்திரமன்றி லெசோதோவிலும் தென்னாபிரிக்க குடியரசிலும் கற்பித்தார்.

அவர் 80க்கும் மேற்பட்ட புத்தகங்கள் மற்றும் சிறு புத்தகங்களை எழுதியுள்ளார், அவற்றில் பல அவரது கவிதைகளின் தொகுப்புகளாகும். இவரது மூன்று புவியியல் நூல்கள் பாடசாலை களில் பாடப் புத்தகங்களாகப் பயன்படுத்த இலங்கைக் கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப் பட்டது. மாணவர்களிடையே மிகவும் பிரபலமான புவியியல், தமிழ் மொழி மற்றும் இலக்கியம் ஆகியவற்றில் மாணவருக்கான நூல்களையும் எழுதினார்.

அவர் இலங்கையில் இரண்டு தமிழ் எழுத்தாளர் சங்கங்களின் முக்கிய நிறுவன உறுப்பினராக இருந்தார், ஒன்று மாத்தளையிலும் மற்றொன்று யாழ்ப்பாணத்திலும். அவர் பல ஆண்டுகளாக யாழ் எழுத்தாளர்கள் சங்கத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். சாதாரண தமிழ் மக்களிடையே கவிதைகளை ஊக்குவிப்பதற்காக தமிழ் சமூகத்தால் போற்றப்பட்டவர். மக்கள் அவரை கவிஞர்களின் நாயகர் என்று அன்புடன் அழைத்தனர்.

தமிழ் மக்கள் மற்றும் அவர்களின் சொத்துக்கள் மீதான இலங்கை இராணுவத்தின் அட்டூழியங்களுக்குப் பிறகு அவர் தனது நண்பர்கள் சிலருடன் சேர்ந்து இலங்கைக்குத் திரும்ப முடியவில்லை. தெல்லிப்பளை குரும்பசிட்டியில் உள்ள தனது வீட்டையும் காணியையும் இராணுவத்தினரிடம் இழந்தார். அவர் நவம்பர் 1988இல் தென்னாப்பிரிக்கா குடியரசில் இருந்து நேராக கனடா சென்றார்.

கவிஞர் மார்ச் 1989இல் மேல் கனடா கல்லூரியில் பாதுகாப்புப் பணியாளராகச் சேர்ந்தார், 1994இல் அவர் மேல்நிலைப்

பள்ளிக்கு அஞ்சல் மேலாளராகவும் உதவி வரவேற்பாளராகவும் மாற்றப்பட்டார், அவர் 1999 வரை அந்தப் பதவியை வகித்தார். இருப்பினும், அவர் பள்ளிக்கு தன்னார்வ அடிப்படையில் தொடர்ந்து 2013வரை உதவி னார்.

கவிநாயகர் எறும்புகளைப் போன்ற சுறுசுறுப்பான உழைப்பாளி. சைவ சமயத்தின் காவலர். பல திருமுறை மாநாடுகளை ஏற்பாடு செய்து நடத்தினார். அவர் எண்பது வயதைக் கடந்தும் எழுதுகிறார், பேசுகிறார். அவர் தன்னை ஒருபோதும் வயதானவராக கருதுவதில்லை. அவரிடம் வாகனம் ஏதும் இல்லை, அதனால் கூட்டங்களில் கலந்துகொள்ள நடந்து செல்கிறார் அல்லது பொதுப் போக்குவரத்தில் செல்கிறார். குரும்பசிட்டியில் அவர் விட்டுச் சென்ற புத்தகங்களின் தொகுப்பு மற்றும் அவர் விட்டுச்சென்ற எழுத்துக்களைப் பற்றி அடிக்கடி பேசுகிறார். பெரும்பாலான முன்னணி தமிழ் வார இதழ்கள் மற்றும் பத்திரிகைகளுக்கு அவர் தொடர்ந்து எழுதுகிறார். இவரது 'ஓ கனடா' தமிழ் மொழிபெயர்ப்பு பல தமிழ் நிகழ்வுகளில் பாடப்பட்டுள்ளது. அவர் நல்ல உள்ளம் கொண்ட அறிஞர்.

தேசிய கவிதை நூலகம் (யு.எஸ்.ஏ.) ஏற்பாடு செய்திருந்த கவிதைப் போட்டியில் ஆசிரியர் விருதை வென்றவர். அவரது கவிதையான 'எ டான்சிங் ட்ரீ'(நடமாடும் மரமொன்று) இது 'அடிவானத்திற்கு அப்பால்'('A Dancing Tree' which is included in anthology of poems called 'Beyond the Horizon'). என்ற கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. தேசிய கவிதை நூலகம் அவரது சில ஆங்கிலக் கவிதை களின் ஆல்பத்தையும் 'விஷன்ஸ்' என்ற பெயரில் தயாரித்துள்ளது. அவரது இரண்டு புத்தகங்கள் ஆங்கிலத்தில் உள்ளன, அதாவது 12 சிறுகதைகள் மற்றும் நீடித்த ஒளி. கனேடிய இடைநிலைப் பள்ளிகளில், பாடத்திட்டச் சேவைகள் கனடாவால் ஆதாரப் புத்தகங்களாகப் பயன்படுத்த அவை பரிந்துரைக்கப் பட்டுள்ளன.

கவிஞர் விரிவுரைப் பயணம் மற்றும் தமிழ்க் கவிதைப் பணி என பல நாடுகளுக்குப் பயணம் செய்துள்ளார். கனடா, இங்கிலாந்து, ஜெர்மனி மற்றும் சுவிட்சர்லாந்தில் உள்ள அவரது இலக்கிய நண்பர்கள் மற்றும் கலாசார சங்கங்கள் தமிழ் மொழி மற்றும் இலக்கியத்திற்கான அவரது சிறந்த பங்களிப் பிற்காக விருதுகள் மற்றும் கௌரவப் பட்டங்களை வழங்கி கௌரவித்துள்ளனர். தமிழ் கலாசார தூதராக இருந்துள்ளார். இளம் தமிழ்க் கவிஞர்கள் சங்கத்தின் தலைவராகவும், மையக்கருவாகவும் திகழ்ந்தவர். அவர் திறந்த மனதைக் கொண்டவர் மற்றும் தனது நேரடியான தன்மையை நிலைநாட்ட தயங்கமாட்டார். அவர் உயர்ந்த நேர்மையான மனிதர் மற்றும் ஏராளமான ரசிகர்களையும் கேட்பவர்களையும் கொண்டவர்.

அவர் ஒரு பொறுப்புள்ள குடும்பத்தவராகவும் இருக்கிறார், அன்பான கணவர் மற்றும் அற்புதமான தந்தை மற்றும் அவரது பேரக்குழந்தைகளுக்கு ஒரு துணை. தமிழை அதிகம் நேசிப்பவர், செம்மொழித் தமிழின் பெருமையை உரைகள் மூலம் பரப்புகிறார். கவிஞர்களின் தமிழ் வனத்தின் சூரிய மலர் அவர்.

❍❍❍

# வேண்டும் ! வேண்டும் !

நெஞ்சிலே உதைப்போர் சாயவும் வேண்டும்  
நெல்லை விதைப்போர் வாழவும் வேண்டும்  
அஞ்சிட வதைப்போர் அடங்கவும் வேண்டும்  
ஆற்றலைச் சிதைப்போர் அகலவும் வேண்டும்  
பிஞ்சிலே பழுக்கா நிலையும் வேண்டும்  
பிரித்துப் பார்க்கா உறவும் வேண்டும்  
கெஞ்சியே வாழா வாழ்வும் வேண்டும்  
கெடுத்து அழிக்காக் குணமும் வேண்டும்

– மனோகரி ஜெகதீஸ்வரன்

அறிவியல் புனைகதை




# பலஸ்தீனியன் வீட்டுப் பூனைகள்

ஆசி கந்தராஜா

கடந்த பத்து வருடங்களாக சுந்தரம் மேட்டுக்குடிகள் வாழும் குறிச்சியொன்றில் வசிக்கிறார். அறியப்பட்ட கண்வைத்தியரான அவர், செல்வந்தர்கள் வாழும் புறநகர்ப் பகுதியில் வீடுவாங்கியது ஒன்றும் புதினமல்ல. அடுத்த வீட்டில், முப்பது ஆண்டுகளுக்கு மேலாக யூதப் பெண்மணி நயோமி குடியிருக்கிறார். விசாலமான பல அறைகள் கொண்ட, மாளிகை போன்ற அந்த வீட்டில், அவர் தனியாள். அவருக்கு வயது, அறுபதுக்குமேல் இருக்கும். ஜேர்மனியில் அடொல்வ் ஹிட்லரின் அடக்கு முறைகளுக்குத் தப்பி, இவரின் பெற்றோர் பெரும் செல்வத்துடன் சிட்னியில் வந்து குடியேறினார்களாம். இதற்குமேல் நயோமி பற்றி அந்த வீதியில் வசிப்பவர்களுக்குத் தெரியாது. அவரின் வீட்டுக்கு எரும் வந்துபோகும் சிலமனுமில்லை. எப்போவாவது ஒருநாள், ஹிப்பா தொப்பி அணிந்த ஆண்களும், தலைமுடியை மூடிமறைத்த பெண்களும் வருவார்கள். நயோமிக்கு பார்வைக் குறைபாடு இருந்தது. கண்வைத்திய கிளினிக்கில் நேரஒதுக்கீடு பெற நீண்டகாலம் எடுக்குமென்பதலால், நயோமி வைத்திய ஆலோசனை கேட்டு அவ்வப்போது சுந்தரத்திடம் வ07ருவார். வந்தாலும் உள்ளே வரமாட்டார். வெளிவாசலில் நின்றுகொள்வார்.

ஆஸ்திரேலியாவுக்குப் புலம்பெயர்ந்த ஒவ்வொரு இனக்குழுவுக்கும் பெருநகரங்களில் தனித்தனியான குறிச்சிகளுண்டு. இஸ்லாமியர்களும் மதரீதியாக சேர்ந்து வாழ்கிறார்கள். இவர்களுள் கணிசமானோர் லெபனானியர்கள், துருக்கியர்கள், பலஸ்தீனியர்கள். சிட்னியில் ஸ்ட்ராத்பீல்ட் என்னும் இடத்தில் தமிழர்களும் கூடிவாழ்ந்தார்கள். வசதிவாய்ப்புகள் பெருக, வேறு இடங்களில் கோவில் கட்டி, அதைச்சூழ வீடுவாங்கி வாழ்கிறார்கள்.

டாக்டர் சுந்தரம் பணிபுரியும் வைத்திய சாலையில், இருதய நோய் வைத்திய நிபுணராகக் கடமையேற்றார், போலஸ். அவரது முழுப் பெயர் வாய்க்குள் நுழையாது. லண்டனில் மருத்துவம் படித்து சிட்னிக்குப் புலம்பெயர்ந்த இவர், ஒரு பலஸ்தீனியர். மகப்பேறு மருத்துவரான இவரின் மனைவி, ஒரு ஆங்கிலேய வெள்ளைக்காரி. வீடு வாங்க இவர்கள் ஆயத்தமானபோது விற்பனைக்குவந்தது, நயோமியின் வீட்டுக்கு அடுத்தவீடு. போலஸ் தம்பதிகள் அந்த வீட்டை வாங்குவதற்கு சுந்தரம் காரணமானார்.

போலஸ் ஒரு பலஸ்தீனியர் என்பதை நயோமி எப்படியோ அறிந்துகொண்டார். இஸ்லாமியர்கள் செறிந்து வாழும் குறிச்சியில் வாழாமல், இவன் ஏன் இங்கு வந்தான்? என்ற வெப்பிசாரம் நயோமியின் ஒவ்வொரு நடவடிக்கையிலும் தெரிந்தது. இதிலிருந்து ஆரம்பமாகியது மாமரப் பிரச்சனை.

சுந்தரத்தை ஒருநாள் கடைவீதியில் கண்ட நயோமி, யார்யார் எந்தெந்த இடங்களில் வாழ்வதென்ற விவஸ்தையே இல்லாமல் போச்சு. எனது பெற்றோர் விலையுயர்ந்த குறிச்சியில் வீடு வாங்கியதற்கும் அர்த்தமில்லாமல் போச்சு, என போலஸ் அடுத்த வீட்டுக்குக் குடிவந்ததை நேரடியாகக் குறிப்பிடாமல், பொதுவாக கொமன்ட் அடித்தார். இவர்களிடையே இந்தளவுக்கு இன வெறுப்பு இருப்பதை சுந்தரம் இதற்கு முன்னர் அறிந்திருக்கவில்லை. கண் வைத்தியத்துக்கு அப்பால் அவருக்குத் தெரிந்தது, வீட்டுத்தோட்ட விவசாயம் மட்டுமே.



அதனால், அன்றைய இரவுச் சாப்பாட்டின் பின்னர் யூத, பலஸ்தீன முரன்பாடுபற்றி, சிட்னி பாடசாலையொன்றின் வரலாற்று ஆசிரியரான மனைவியிடம் கேட்டார்.

இடியப்பச் சிக்கலான இந்த விஷயத்தை, சுந்தரத்துக்குப் புரியும் வகையில் மனதுக்குள் கோவையாக்கிக்கொண்டு, மனைவி சொல்லத் துவங்கினார்.

*1948-ல்,* இரண்டாவது உலகயுத்தம் முடிவடைந்த காலமது!

அதுவரை பிரித்தானியர்களின் ஆளுகையின் கீழிருந்த பலஸ்தீனப் பிரதேசத்தில், யூதர்களுக்கும் அரபுக்களுக்கும் தனித்தனி நாடுகள் உருவாக்கப்பட வேண்டுமென ஐக்கிய நாடுகள் சபையில் தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய உருவானதே இஸ்ரேல்!

அப்படியானால், அரபுக்களின் தேசம்?

ஐநாசபையில் அங்கம்வகித்த அரபு நாடுகள், முழு பலஸ்தீனப் பிரதேசமும் எங்களுக்கு வேண்டும், அது அரேபியர்களுக்கு மட்டுமே உரியது, என வாதிட்டார்கள். இருப்பினும், சபையில் விடப்பட்ட வாக்கெடுப்பு முடிவின் பிரகாரம், யூதர்களுக்கான நாடு ஒன்று, உருவாக்கப்பட்டது.

ஐநாவின் இந்த முடிவையும் அமுலாக்கத்தையும் தடுத்து நிறுத்துவோம் என்று அரபு நாடுகள் போர்க்கொடி தூக்கியபோதிலும், அவர்களால் இஸ்ரேல், தனி நாடாவதைத் தடுக்க முடியவில்லை.

ஐநாவில் அரபுநாடுகள் எதிர்த்திராவிட்டால், பலஸ்தீனம் என்னும் சுதந்திரநாடு அப்போது உருவாகியிருக்குமா?

ஆம், அதுதான் உண்மை. அப்படியானதொரு சுதந்திர நாடுக்காகத்தான் இப்பொழுது சண்டை பிடிக்கிறார்கள். அப்போதே அரபுநாடுகள் ஐநாவில் ஒத்துக்கொண்டிருந்தால், பலஸ்தீன் என்னும் நாடு *1948*-ம் ஆண்டிலேயே உருவாகியிருக்கும்.

அடடே, இது நம்மநாட்டுக் கதைமாதிரி இருக்கே. தருவதை வேண்டாமென முதலில் மறுத்துவிட்டுப் பின்னர் அதைப் பெறுவற்குப் போராடுவதும் போர்புரிவதும், என இலங்கைத் தமிழர்களை மனதில் வைத்து கொமன்ட் அடித்தார் சுந்தரம்.

மேசைமேலிருந்த நிலக்கடலையை எடுத்துக் கொறித்தபடி சற்று நேரம் அமைதி காத்த மனைவி, தொடர்ந்தார். எழுபது சதவிகிதத்துக்கு அதிகமான யூதர்கள் வாழும் தற்போதைய இஸ்ரேலில், இருபது சதவிகித இஸ்லாமியர்களும் வாழ்ந்துவருகிறார்கள். அங்கிருக்கும் இஸ்லாமியர்களை யூதர்கள் இரண்டாம் தரக் குடிமக்களாக நடத்துவதால், மத்திய கிழக்கிலுள்ள இஸ்லாமிய நாடுகள் பலவும் இஸ்ரேலுக்கு எதிராக நிற்கின்றன.

அப்போ, புனித பூமியான ஜெருசலேம் யாருடையது? சுந்தரத்துக்கு எதிலும் எப்போதும் அவசரம். அங்கொன்றும் இங்கொன்றுமாக வெள்ளாட்டுக்கடி கடிப்பார்.



மத்திய கிழக்கில் நடந்த போரொன்றில், மேற்கு ஜெருசலேமைத் தன்வசம் வைத்திருந்த இஸ்ரேல், ஜோர்டானிடமிருந்து கிழக்கு ஜெருசலேம் பகுதியையும் கைப்பற்றி, முழு ஜெருசலேம் நகரையும் தனது தலைநகராகப் பிரகடனப் படுத்திக்கொண்டது.

ஓஹோ, உசாரான நாடுதான்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த பலஸ்தீனியர்கள், பலஸ்தீனம் தனி நாடானால், ஜெருசலேம்தான் தங்கள் தலைநகர் என்றும் கிழக்கு ஜெருசலேமில் அமைந்திருக்கும் அல்-அக்சா மசூதிதான் மெக்கா, மதீனாவுக்குப் பிறகு, தமது மூன்றாவது பெரிய புனிதத்தலம் என்றும் அறிவித்தார்கள்.

மனைவியின் உரையாடல் தொடர "ம்'' சேர்த்தார் சுந்தரம்.

இந்த அல்-அக்சா மசூதியைச் சுற்றியிருக்கும் "வெஸ்ட் வால்'' என்ற மேற்குச் சுவரை, யூதர்கள் புனிதத்தலமாகக் கருதுகிறார்கள். இதனால் அடிக்கடி இங்கு மோதல்கள் வெடிக்கும்.

ஓ..!

ஜெருசலேமை மீண்டும் வென்றெடுக்க நினைக்கும் பலஸ்தீன ஹமாஸ் படை, இஸ்ரேலுக்கு எதிராகப் பல ஆண்டுகளாக ஈரானின் ஆதரவுடன் தாக்குதல் நடத்திவருகிறது. இரு தரப்பும் நீண்ட காலமாக மோதி வருவதால், அங்கு குண்டு வெடிப்புகளும், துப்பாக்கிச் சூடுகளும் வழக்கமாகிவிட்டன. இதன் தாக்கம்தான் வெளிநாடுகளில் வாழும் யூத, பலஸ்தீனிய சமூகத்தினரின் முறுகல்கள் என, ஒரு வரலாற்றுப் பாடமே நடத்தி முடித்தார் சுந்தரத்தின் மனைவி.

காதுவழியாக ஒரு விஷயத்தைக் கேட்டால், அதுபற்றி இணையத்தில் ஆராய்வது சுந்தரத்தின் சுபாவம். அடுத்தநாள் வைத்தியசாலைக் கன்ரீனில் எதேச்சையாகப் போலஸ்ஸை சந்தித்தபோது, யூதர்களுக்கு இஸ்ரேலைப் பிரித்துக்கொடுப்பதற்கு முன்னரே, மோசஸ் காலத்தில் யூதர்கள் அங்கு வாழ்ந்ததாக இணையம் சொல்கிறதே, என போலஸ்ஸை ஆழம்பார்த்தார் சுந்தரம்.

மோசஸ் காலத்திலே காசாப்பகுதியில் யூதர்கள் இருந்திருக்கலாம். ஆனால் ரோமானிய ஆக்கிரமிப்பைத் தொடர்ந்தும் வசதி வாய்ப்பை நாடியும், எப்போதோ அவர்கள் அமெரிக்காவுக்கும் ஐரோப்பாவிற்கும் குடி பெயர்ந்துவிட, எஞ்சியிருந்தவர்கள் அரபுகள் மட்டுமே. ஹிட்லரின் கொடுமைகளுக்கு அஞ்சி மீண்டும் யூதர்கள் திரும்பி வந்து அந்த நிலப்பரப்பு எங்களுக்குச் சொந்தம் என்றால் அதில் என்ன நியாயம்? என்று சுந்தரத்துக்கு ஏற்றவகையில் பதில் சொன்ன போலஸ், அதுபற்றி மேலும் பேச விரும்பாதவராக அங்கிருந்து அகன்றார்.

சிட்னியில் அது கோடை காலம்!

மாங்காய்கள் முத்திப் பழுக்கத் துவங்கின. ஒரு சனிக்கிழமை காலை சில மாங்காய்கள் சகிதம் நயோமி வந்து சுந்தரத்தின் கதவைத் தட்டினார். அவரது கையிலிருந்த மாங்காய்கள் குறண்டிச் சிறுத்து, கரடுமுரடான, தடித்த தோலுடன் இருந்தன.

பக்கத்து வீட்டுப் பலஸ்தீனியனின் பூனைகள் செய்த கைங்கரியத்தைப்பார். நல்ல இனிப்பான பெரிய மாங்காய்கள் காய்த்த என் மாமரம், இந்த வருடம் இதைத்தான் காய்த்திருக்கிறது, நீயேபார், வாயில் வைக்கமுடியாத புளிப்பு, எனத் தான் கொண்டுவந்த மாங்காய்களை சுந்தரத்தின் முகத்துக்கு நேரே நீட்டினார். சுந்தரம் வீட்டுத்தோட்டத்தில் ஆர்வமுடையவர் என்பதும் பக்கத்துவீட்டு போலஸ் அவருடன் பணிபுரிபவர் என்பதுமே இந்த முறைப்பாட்டுக்குக் காரணம்.

போலஸ்ஸின் வெள்ளைக்கார மனைவி செல்லப் பிராணிகளை நேசிப்பவர். அவருக்கு வீட்டில் நாய் வளர்க்க விருப்பம். இஸ்லாமியரான கணவருக்கோ நாய் ஆகாது. நாய், பன்றி என்பன அழுக்கான மிருகங்கள் என்கிறது குரான். ஆனால் பூனை அவர்களுக்குத் தூய்மையான, புனிதமான மிருகம். இதனால், நாய்க்கும் சேர்த்து வெவ்வேறு சைஸில் ஐந்து பூனைகளை வளர்த்தார். இவை குட்டிபோடும் சமயங்களில் இந்த எண்ணிக்கை பெருகும். போலஸ்ஸின் மனைவியின் கைகளில் பூனைகள் விறாண்டிய காயம் எப்போதும் இருக்கும். பூனைகளுடன்தான் அவர் தூங்குவதாக, போலஸ் சொல்லிச் சிரிப்பான்.

பூனைக்கும் மாமரம் காய்ப்பதற்கும் என்ன தொடர்பு? மூளையைக் குழப்பி யோசித்தபடி, நயோமியின் முகத்தைப் பார்த்தபடி நின்றார் சுந்தரம்.

எதற்கும் என்னுடன் வா, எனச் சுந்தரத்தைத் தன் பின்வளவுக்கு அழைத்துச் சென்றார். அங்கு

அவர் வாழ்ந்த பத்துவருட காலத்தில் அன்றுதான் நயோமியின் பின்வளவுக்கு முதல் முறையாகச் சென்றிருக்கிறார். மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் வாங்கிய வீடுவளவென்பதால் பின்வளவு விசாலமாக இருந்தது. அங்கு உயர்ந்த சாதிப் புல்லு பதிக்கப்பட்டிருந்தது. சொட்டு நீர்ப்பாசனத்தின் கீழே பூமரங்களும் பழமரங்களும் செழிப்பாக வளர்ந்து நின்றன. போலஸ்ஸின் வீட்டுப்பக்க வேலியருகே ஒரு மாமரம் கிளைபரப்பி நின்றது. அதை நட்டு பத்து வருடங்கள் இருக்கலாம். மண்ணைத் தொட்டபடி இருந்த அதன் கிளைக்கூடலின் கீழ்ப்பகுதியில், குறண்டிய மாங்காய்கள் பெரும் எண்ணிக்கையில் பல்லிளித்தன. கிளைக்கூடலின் உச்சியில் மாத்திரம் உருண்டு திரண்ட சில மாங்காய்கள் தொங்கின.

சுந்தரத்துக்கு விஷயம் விளங்கிவிட்டது. இது பூனையால் வந்ததல்ல என சுந்தரம் வாக்கியத்தை முடிக்கமுன்னரே மறித்து, என்னுடன் வா, எனச் சுந்தரத்தை மாமரத்தடிக்கு கூட்டிக்கொண்டு போனார். மாமரக் கிளைக்கூடலின் கீழே படுத்திருந்த பூனைகள் ஆளரவம் கேட்டவுடன் வேலிபாய்ந்து போலஸ் வளவுக்குள் ஓடித் தப்பின.

குனிந்து கீழேபார், உன் நண்பன் வீட்டுப் பூனைகளின் வேலையை, எனக் கத்தினார் நயோமி. சுந்தரத்துக்கு முள்ளந்தண்டுப் பிரச்சனை. குனிவது கஷ்டம். முழங்காலை நிலத்தில் குத்திக் குனிந்து மாமரத்தின் கிளைக்கூடலின் கீழே பார்த்தார். ஒருவித துர்நாற்றம் வீசியது. நிரந்தர சொட்டு நீர்ப்பாசனம் காரணமாக அந்த இடம் குளிர்மையாக இருந்தது.

கோடை வெயிலுக்கு குளிர்மையை நாடித்தான் பூனைகள் வருகின்றன எனச் சுந்தரம் சொன்னதை காதில் வாங்காத நயோமி, மாமரக் கூடலின் கீழேயுள்ள மண்ணை முள்ளுவிறாண்டியால் கிளறினார். மணம் தாங்கமுடியவில்லை. விட்டைவிட்டையாக பூனை மலம் மண்ணுக்கு வெளியேவந்தது. சும்மா சொல்லப்படாது. கடையில் விற்கும் பூனைகளுக்கான சாப்பாட்டை வயிறு நிரம்பச் சாப்பிட்டுவிட்டு மாமரத்துக்கு கீழிருந்த மண்ணை விறாண்டி தாராளமாக மலம் கழித்திருக்கின்றன. அவைதான் என்ன செய்யும்? போலஸ் வீட்டுப் பின்வளவு முழுவதும் செங்கற்கள் பதித்திருக்கிறார்கள்!

ரின் உணவுகளைச் சாப்பிடும் பூனைமலத்தில் வேண்டப்படாத மூலகங்கள் இருக்கலாம் எனவும் அதுவே மாமரத்தின் இயல்பை மாற்றிவிட்டதாகவும் யாரோ நயோமிக்கு ஓதியிருக்கிறார்கள். அதை நம்பி போலஸ் மீது நகரசபையில் புகார் அளிதிருப்பதும் நயோமியின் கதைகள் மூலம் தெரிந்தது.

சுந்தரம் சற்று நிதானித்து, விஷயத்தை விளக்கத் துவங்கினார்.

மிஸ்ஸிஸ் நயோமி, உங்கள் மாமரம் ஒரு ஒட்டுக்கண்டு. அதாவது இரண்டு மாமரங்களின் நல்ல இயல்புகளை ஒன்றுசேர்த்த ஒரு மரம்.

சுந்தரம் என்ன சொல்ல வருகிறார்? இதுக்கும் பூனைகள் மலம் கழிப்பதற்கும் என்ன சம்மந்தம்? என்ற பாவனையில் இமைகளைச் சுருக்கினார் நயோமி.

காடுகளில் வளரும் நல்ல வேர்த்தொகுதி கொண்ட மாமர ஒட்டுக்கட்டையில், இனிப்பான பழம் தரும் மாமரத்தின் ஒட்டுத்தண்டை ஒட்டியிருக்கிறார்கள். இதனால் ஒட்டுத் தண்டிலிருந்து வளரும் கிளைகளில் மட்டும் இனிப்பான மாங்காய் காய்க்கும். ஒட்டுச் சந்திப்புக்கு கீழே, நிலத்துக்கு மேலேயுள்ள ஒட்டுக் கட்டையில் வளரும் கிளைகளில் காட்டு மாமரத்தின் இயல்புப்படி குறண்டல் காய்களே காய்க்கும். ஆனால் அதற்கு நல்ல வேர்த்தொகுதி இருக்கும். உங்கள் மாமரக் கூடலின் கீழ்ப்பகுதியில் குறண்டல் காய்களும் மேலே கொழுத்த பெரிய காய்களும் காய்த்திருப்பதற்கு இதுதான் காரணம்.

இதுக்கு என்னசெய்ய வேணும் எனப் பணிந்து வந்தார் நயோமி.

ஒட்டுக் கன்றுகளில் ஒட்டுச்சந்திப்புக்கு கீழேயுள்ள ஒட்டுக்கட்டையில் கிளைகள் வளர்ந்தால் அதனை வெட்டி அகற்றிவிட வேண்டும். இது எல்லா மரங்களுக்கும் பொருந்தும்.

முந்தி இப்படியில்லையே, இந்தவருடம் மட்டும் ஏன் இப்படி? என நியாயமானதொரு கேள்வியை முன்வைத்தார் நயோமி.

நீங்கள் நினைப்பதுபோலல்லாமல் பூனை மலமும் தாவரங்களுக்கு நல்ல சேதனப் பசளைதான் என்ற சுந்தரத்தின் மீது ஏளனப் பார்வையொன்றைப் படரவிட்டார் நயோமி.

கடந்த காலங்களிலும் ஒட்டுக்கட்டையில் அரும்புகள் தோன்றி அவை சிறிய கிளைகளாக

வளர்ந்திருக்கும். அதை நீங்கள் வெட்டி அகற்றியிருக்க வேண்டும். இந்த வருடம் முழுவதும், ஐந்து பூனைகளும் மாமரத்தடியில் தாராளமாகக் கழித்த மலத்தோடு, நாள் முழுவதும் சொட்டும் நீரும் சேர, காட்டுமாமர ஒட்டுக்கட்டை வீரியமாக கிளைவிட்டுப் பூத்துக் காய்த்திருக்கு.

இதேமாதிரி நல்ல பழங்கள் தரும் ஒட்டுத்தண்டின் கிளைகளும் காய்த்திருக்கலாமே?

காட்டு மரங்கள் இயல்பாகவே வீரியமாக வளர்வன. அவற்றின் கிளைகளின் வளர்ச்சி ஒட்டுத்தண்டின் வளர்ச்சியை அமத்தித் தடுத்துவிடும் என்றவர், சிறிய வாளால் ஒட்டுக்கட்டையிலுள்ள கிளைகளை அரிந்தார் சுந்தரம். மாமரத்தின் அடிப்பகுதி காற்றோட்டமான வெளியாகியது!

சரி, உன்னை நம்பிறன். எதற்கும் பூனைகளைக் கட்டி வளர்க்கச்சொல் உன் நண்பனை, என்றார் நயோமி.

ஆடு, மாடு, நாய்களைக் கட்டி வளர்க்கலாம். பூனைகளை?

❍❍❍

---

# கரம்கொடு வரமாய்.!

கூவுகின்ற குயில்களின் குரலினில் தோய்ந்த
குமுறலின் குறைதீர்த்திட ஞானமில்லை
குறுகிப் போகுகின்ற முதுசங்களுக்கெனவெம்
கூக்குரல்கள் இன்னும் தீர்ந்திடவில்லை

காவுகொடுத்துவிட்டுக் கதறியழுத காட்சிகள்
கண்களைவிட்டுக் கலைந்திடவே யில்லை
கன்றிய வடுக்களில் கரிசனம் காட்டியே
காதுகொடுத்து எவரும் கேட்கவரவில்லை

மாவும் பலாவும் மனைகளைச் சூழ்ந்தே
மகிழ்ந்திருந்த உறவுகள் இன்றிங்கில்லை
மண்மீட்புச் சமரில் மாண்டவர் போகவே
மக்கிய வாழ்வினை மீட்கயாருமில்லை

நோவும் வலியிலும் நொடிந்திட்ட மனங்களின்
நோய்தீர்த்திடும் நோக்க மெவர்க்குமில்லை
நோற்றிடும் நோன்பினில் நெய்திட்ட வரங்கள்
நொய்மையாய் வாழ்வை நீட்டவுமில்லை

தூவும் சாரலாய்த் தொடருகின்ற வன்மங்கள்
தொடர் கதையாவது நின்றுவிடவில்லை
தூரந்திடும் வாழ்வை தொலைத்திடாவண்ணம்
தோன்றிடும் தடையை தகர்க்கவகையில்லை

யாவும் நிறைவாய் யாவர்க்கும் கிடைத்திட
யௌவன உதவியில் ஜனித்ததேசமில்லை
யாழும் குழலும் யதிகளுடனிணைந்தே
யாத்திடும் பாக்கள் பூத்திடவழியில்லை

ஆவும்கன்றுகளும் அணிவகுத்ததுபோலவே
அத்தனை செல்வமும் மீளவகையில்லை
நாவும் வரண்டு நலங்களும் கெட்டதனால்
நாட்டினில் எதிலும் நம்பிக்கையில்லை

பாவும் கலைகளும் பண்டைத்தமிழ்மொழியும்
பாலையாய் மாறிடாது பார்ப்பவரில்லை
பாழாய்ப் போகும் பண்பாட்டு எச்சத்தைப்
பசைபோட்டு ஒட்டி பற்றிப்பிடிப்பாரில்லை

தாவும் அலையாய் தடையங்களை அழித்தும்
தகிப்பில்நீளும் தவங்கள் நிற்கவில்லை
தாயக உணர்வின் தழுவல்களைத் தடுத்திட
தகித்திடும் மனங்களைத் தேற்றுவாரில்லை

சாவும்வந்து சரிந்திடுகின்ற வேளையிலும்
சஞ்சலங்கள் எதுவும் தீர்ந்திடவுமில்லை
சத்தியம் மரிக்கின்ற சகத்தினில் யாவும்
சாத்தியப்படுமோ நம்பிக்கையுமில்லை

மேவும் போதைவஸ்திலிருந்து
மீளும்வகையில்
மெனக்கெடும் தலைமை வந்திடவில்லை
மிலேச்சத்தனமாய் மிரட்டும் குரல்களையினி
மிதித்திட ஒற்றுமை ஒன்றேயெல்லை

**–அம்பலவன் புவனேந்திரன், யேர்மனி**

# சமகாலக் கலை, இலக்கியமும் புதிய நேர்மையும்



பேராசிரியர்
சபா.ஜெயராசா

சமகால இலக்கியப் பரப்பில் புதிதாகத் தோற்றம் பெற்ற ஓர் இயக்கமாக 'புதிய நேர்மை' (New sincerity) மேற்கிளம்பியுள்ளது. அதன் எழுகோலம் மெய்யியல், அழகியல், இலக்கியம், கலைகள், திறனாய்வு கல்வியியல் முதலாம் பல்வேறு துறைகளில் நீட்சி கொண்டுள்ளது.

பின்னைய புதுமையியலின் (Post Modernism) முரணிகைப்பிறழ்வை (Irony) அந்த இயக்கம் வெளிப்படுத்தியது. திறனாய்வு செய்தது. கலை இலக்கியம் வெளிப்படுத்தும் நலவெறுப்பியல் (Cynicism) ஐயுறவியல், ஆகியவற்றை நிராகரித்து, நலன்தருவியலை (Optimism) வலியுறுத்தியது.

கலை இலக்கியங்களிற் காணப்படும் நேர்மை இழப்புக்களை உதறித்தள்ளும் இயக்கமாக 1990ஆம் ஆண்டிலிருந்து அது எழுச்சி கொள்ளத் தொடங்கியது. நேர்மை, நம்பகத் தன்மை பிறர்மனக் கோலங்களோடு ஒத்துணர்வு கொள்ளல், போலித்தனமற்ற நேரியம்பல், செழுங்கவிப்பு (Passion) முதலியவற்றுடன் கலை இலக்கியம் உறவாடவேண்டும் என்ற நோக்குடன் அந்த இயக்கம் நிகழ்பரவலை மேற்கொண்டது.

சமூக அவலங்களை மறுதலிக்கும் எதிர்ப் பண்பாட்டு இயக்கமாகவும், இசை வடிவமாகவும் 'பங்' (Punk) என்பது அமெரிக்காவில் ஏற்கனவே தோற்றம் பெற்றுவிட்டது. எதிர்ப்பைக்காட்டும் பலத்த ஒலிகளை எழுப்புதல், அதிர்வு மிக்க இசைக்கோலங்களை உருவாக்கு தல் கோபச்சுவையை வருவிக்கும் கடுசொற்களைப் பயன்படுத்துதல், ஆத்திரத்தைத் தூண்டும் கதைகளை இசைவழியாகக் கையளித்தல் முதலாம் பண்புகள் பங் இசையிலே இடம் பெற்றன.

பங் இசை பல நிலைகளில் சமூகத்திலே தாக்கங்களை ஏற்படுத்த முனைந்தது. சமூக நிறுவனங்களுக்கும் நியமங்களுக்கும் ஒழுங்கு முறை களுக்கும் எதிரான சிந்தனைக்கு செறிவேற்றம் செய்தது. அரசு, சட்ட ஏற்பாடு, பொலிஸ் ஆகியவற்றிற்கு எதிரான மனக் கோலத்தை வெளிப்படுத்தியது.

இடதுசாரிக் கருத்தியல், இசைவுடன் 'பங்' தொழிற்பட்டது. கொடுமைக்கும் பொய்மைக்கும் எதிராக இசை அளிக்கையின் நடுவே குரல் எழுப்பப்பட்டது. பங்கின் ஒரு பிரிவினர் மாமிச உணவை நிராகரித்து தாவர உணவையே உண்டனர்.

அதிகாரத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் வழமைக்கு மாறான ஆடைகளை அணிந்தனர். தலைமுடிக்கு மாறுபாடான நிற மூட்டலை மேற்கொண்டனர். நெகிழ்ந்த ஆடைகளை அணிந்தனர்.

பங் இசையிலிருந்து மாறுபட்டவகையில் புதிய நேர்மை இயக்கத்தினரது செயற்பாடுகள் மேலெழுந்தன. இரு சாராரிடத்தும் புரட்சிக்குரல் எழுகோலம் பெற்றிருந்தாலும் சமூக மாற்றத் துக்கான உறுதியான கருத்தியல் தளம் காணப் படவில்லை. இலட்சியவாதம் தழுவியதாகவே அவர்களின் சமூக நோக்கு அமைந்திருந்தது.

'புதிய நேர்மை' என்ற கருத்து வடிவம் டேவிட் பொஸ்டர் வலஸ் (1962-2008) என்பவரால் பிரபலமாக்கப்பட்டது. ஆங்கிலப் பேராசிரியரான அவரது எழுத்துக்கள், பதிய நேர்மையைப் பலகோணங்களில் வெளிப்படுத்தின. 'முடிவிலாவிளையாட்டு' என்ற அவரது நாவல் புகழ்மிக்க படைப்பாக அடை யாளப்படுத்தப்படுகிறது.

அவரது ஆக்கங்களில் 'மீப்பு துமையியல்' சிந்தனைகளும் உட்புகுந்து இருந்தன. புதுமையியல், பின்னைய புதுமையியல் ஆகியவற்றின் அடுத்த கட்ட வளர்ச்சியாக அமைவது, 'மீப் புதுமையியல்'. இருபத்து ஓராம் நூற் றாண்டின் தொடக்கத்திலிருந்து அது ஒரு கலை இலக்கியக் கோட்பாடாகவும் பண்பாட்டு விளக்கக் கோட்பாடாகவும்

மேலெழுந்துள்ளது. மீ(Meta) என்பது கடந்த நிலையைக் குறிக்கும் முன்னோட்டாகும்.

புதிய நேர்மையை வலியுறுத்தும் வேளை, தொலைக்காட்சியின் மலினமான நிகழ்ச்சி களைப் பார்த்தலைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்பதை வலெஸ் தீவிர நிலையில் வலியுறுத்துகின்றார். மன முறிவையும் கவலை யையும் எரிச்சலையும் அருவெருப்பையும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் ஏற்படுத்துகின்றன. அமெரிக்கப் பண்பாட்டின் அவலத்துக்கு மேலும் பலம் கொடுத்து பரிதவிப்புக்கு உள்ளாக்குகின்றன. பயமூட்டும் விதத்தில் பிரச்சினைகளின் இயல்பைச் சித்திரிக்கின்றன. அத்தகைய பண்பாட்டுச்சூழலில் 'புதிய நேர்மை'' முக்கியமான எழுபொருளாகின்றது.

தமது எழுத்தாக்கம் வாயிலாக புதிய நேர்மை இயக்கத்திற்கு வலுவூட்டியவர்களுள் ஜொனாதன் பிரான்சன் (1956-) தனித்துவ மானவர். அவர் எழுதிய 'திகழ் திருத்தங்கள்' (The Corrections) என்ற படைப்பு சிறந்த எழுத்தாளர் வரிசைக்கு அவரை உயர்த்தியது. அங்கதச் சுவைமிக்க குடும்ப நாடகமாகி அது பல்வேறு குறுக்குக்கருத்துக்கு உட் படுத்தப்பட்டது. அமெரிக்க குடும்ப வாழ்க்கைப் பின்புலத்தில் அவரின் 'புதிய நேர்மை' முகிழ்ப்பு உருவாக்கம் பெற்றது.

அவர் எழுதிய 'விடுதலை' 'குறுக்கு வீதி' முதலாம் நாவல்கள் அமெரிக்கப்பண்பாட்டின் அவல நிலையை அழகியற் பகுப்பாய்வுக்கு உட்படுத்தியுள்ளன.

அமெரிக்க வாழ்க்கையில் இடம்பெறும் எலத்திரன் பண்பாடு நடப்பு நிலைவரங்களையும் நம்பகரமான பொருட்களையும் நேர்நிலை வாழ்வையும் செயலிழக்கச் செய்தலைத் தமது எழுத்தாக்கங்கள் வாயிலாக வெளிப்படுத்தினார். அமெரிக்கா தன்னைத்தானே சிதைத்துக் கொள்வதைத் தடுக்க, புதிய நேர்மையைக் கட்டியெழுப்பும் தேவை வலியுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறது.

அவரது நாவல்கள் அமெரிக்கப்பண்பாட்டின் எழு கோலங்களை ஒவ்வொரு விதமாகச் சித்திரிப்பன. விற்பனை நிலையில் இலட்சம் பிரதிகளைக்கடந்து சென்றுள்ளன. புனை கதைகள் வாயிலாக மட்டுமன்றி புனைகதைசாரா எழுத்துக்கள் வாயிலாகவும் புதிய நேர்மை இயக்கத்தை முன்னெடுத்தார். கட்டுரை இலக்கி யத்தில் தனித்துவம் பதித்தார். விற்பனைக்காக அவர் தமது எழுத்துக்களை வர்த்தகச்சுவைக்கு உட்படுத்தி மலினப்படுத்த முயலவில்லை. மறுபுறம், விற்பனை நோக்குடைய எழுத்தாளர் என்ற திறனாய்வுக்கும் உட்படுத்தப்பட்டார்.

வாசிப்புப் பெருக்கத் தோடு இணைந்த ஒரு தோற்றப்பாடு 'நாவல் வாசிப்பு'' அமெரிக்க அங்காடி மற்றும் உலக இலக்கிய அங்காடியில் நாவல் என்பது இலாபம் தரும் விற்பனைப் பண்டமாயிற்று. வாசிப்பு பண்பாட்டின் எழுச்சியும் உலகில் நிகழ்ந்து வரும் அறிவின் எல்லை கடந்த வளர்ச்சியும் புனைகதைசாரா எழுத்து வடிவங்களின் பெரும் பெருக்கத்துக்கு சென்றன. கட்டுரை இலக்கியம் பெருக்கெடுத்து வளர்ச்சி கொள்ளத் தொடங்கியது. எழுதுவோர் எண்ணிக்கையும் வாசிப்போர் எண்ணிக்கையும் பிரவாகம் எடுத்தன.

ஜொனாதன் பிரான்சன் நாவல் இலக்கி யத்தில் தடம் பதித்தமைபோன்று கட்டுரை இலக்கிய ஆக்கத்திலும் தமது ஆற்றலை நிறுவினார். '' பூமியின் முடிவின் முடிவு' என்ற தொகுப்பில் இடம்பெற்ற கட்டுரைகள், மனம், மனத்தோடு போராடும் மோதல் சுவாலைகளை வெளிப்படுத்தின. இருபத்து ஓராம் நூற் றாண்டின் எழுபொருட்கள் அலசலுக்கு உட்படுத் தப்பட்டன. தூண்டலை உருவாக்கும் அறிவுத் தேவையை வெளிப்படுத்தின. புதிய நேர்மை இயக்கத்துக்குரிய மொழிப்பரவலோடு கட்டுரை கள் அமைந்தன.

எழுத்தாளர்களின் வினைப்பாடுகள் மீது வினா எழுப்பும' 'எழுத்து மெய்யில்' (Philosophy of Writing) என்ற புலமைத்துறையிலும் அவர் ஈடுபாடுகொண்டார்.

''நீங்கள் வடிவமைக்கும் பாத்திரங்கள் உங்கள் கட்டுப்பாட்டை மீறிச் செயற்படத் தொடங்கு கின்றனவா?''

''நீங்கள் மேற்கொள்ளும் புனைவுகள் உங்கள் தன்வரலாற்றின் பரவலாக முகிழ்ப்புக் கொள்கின்றனவா?'' என்றவாறான வினாக்கள் அவரால் எழுப்பப்பட்டுள்ளன.

புதிய நேர்மை இயக்க முன்னெடுப்பில், சூழல் அழிப்பும், சூழல்மாசுபடலும் உள்ளடக்கப் பட்டன. மனிதரின் பொறுப்பற்ற செயல் களாலும் எதிர்க்கோலம் கொண்ட உலக நோக்கினாலும் சூழல் தொடர்பான அவலங்கள் நிகழ்த்தப்படுதலை கலைப்படைப்புகள் வழியாக வெளிக்கொண்டுவந்தார்.

புதிய நேர்மை இயக்கத்தை இசைப்பா, கவிதை மற்றும் இசை நிகழ்ச்சி வடிவங்களில் முன்னெடுத்தவர் டேவட் கரிக் பேர்மன் (1967-2019). அமெரிக்கச் சூழலில் போதைப் பொருள் நுகர்ச்சி கட்டுக்கு அடங்காமல் பரவிக் கொண்டிருந்தது. அவற்றின் ஏற்றம் அவரிடத்தும் நிகழ்ந்து. உடல் உள்ள நிலைகளில் பல்வேறு எதிர்த்தாக்கங்களை அனுபவித்தார். பதகளிப்பு, சோர்வு, மனஅழுத்தம் முதலாம் எதிர்வினைகளை அனுபவித்தார்.

உரிய சீர்மியத்தால் அவர் மீண்டெழுந்தார். யுடாயிசம் என்ற சமய ஈடுபாடு அவருக்குச் சுகத்தைக் கொடுத்தது. கூட்டு வாழ்க்கை, இங்கிதமாக இடம்பெற்ற சமய ஒழுக்கங்கள், சட்ட திட்டங்கள், விழுமியங்கள் முதலியவற்றை உள்ளடக்கிய யுடாயிசம் அவரை ஆற்றுப் படுத்தியது.

மீள் வாழ்வோடு அவர் புதிய நேர்மையைத் துலக்கும் கலைப்பணியை மேற்கொண்டார். போதைப்பொருள் அனுபவம், நிதி நெருக்கடி, இசைக்குழுவை விட்டு நீங்கியமை அவரின் கலையாக்கங்களில் செல்வாக்கை நிகழ்த்தின. அபத்தம், துன்பம், நாளாந்த அவலங்கள், அமெரிக்கப் பண்பாடு, நியூயோர்க் நகரம் முதலியவற்றை அவர் தமது கலைச் சட்டகத் துக்குள் கொண்டுவந்தார். நடைமுறை வாழ்வோடு புதிய நேர்மை தொடர்புபட்டு நின்றது.

புதிய நேர்மை இயக்கம் பெண்கலைஞர்களின் செயல் வீச்சுகளினாலும் முன்னெடுக்கப்பட்டது. அவ்வகையினரால் சிறப்பிடம் பெற்றவர்களுள் ஒருவர் மிரண்டா யூலி (1974-). எழுத்தாளர் நடிகர், திரைப்படக் கதை எழுதுனர் என்ற பல்வேறு பணிகளில் ஈடுபட்டவர். தனக்குரிய திடமான முயற்சியின் வழி மேலுயந்தவர். தேநீர்க்கடையிலும் ஊழியராகப்பணிபுரிந்தவர். விடாமுயற்சியினால் திரைப்படத்துறையில் ஏற்றம் பெற்றவர்

புதிய நேர்மை இயக்கம், தீவிரப் பெண்ணியம் (RIOT GRRL) ஆகிய இரண்டிலும் அவர் தடம்பதித்தார். தீவிர பெண் இயக்கத்தினர் பெண் என்பதை 'GRRL' என்றே எழுதினர். எழுத்தாலும் ஒலிப்பாலும் தீவிரம் வெளிப்படுத்தப்பட்டது.

திரைப்படம் ஓவியம், சிற்பம் முதலியவற்றில் இடம்பெறும் தூய்மை இழப்பை அவர் குறிப்பிட்டு மீட்புக்குரிய வழிமுறையாக புதிய நேர்மையைக் கண்டார். இலக்கிய வழியாக முன் வைக்கப்படும் நவவீழ்வியம் (PRESSIMISM) என்பது கைவிடப்படவேண்டும் என்ற உறுதியை முன் னெடுத்தார். எத்தகைய கலைப்படைப்பும் நவஎழுவியத்தோடு உறவாடி, மக்கள் வாழ்வுக்கு வளமூட்ட வேண்டும் என்பதில் அக்கறை கொண்டார்.


சமூக இருப்பின் அவலம் புதிய சிந்தனைகளுக்கு விளைநிலமாகின்றது. இலட்சியப்பாங்கான குமுறலாகவே புதிய நேர்மை அமைந்தது. அவலம் நிறைந்த சமூக அமைப்பை மாற்றி அமைப்பதற்குரிய நடப்பியல் வலுவற்ற இலட்சியவாத ஊறலோடு அவர்கள் இயங்கினர்.

○○○

## கிறிஸ்மஸ் காலையில் நான்

**(என் மகள் மார் கொயனா, மெஸ்சீரி இருவரும்)**

கிறிஸ்மஸ் காலையில் நான்
எல்லோர்க்கும் முன்னதாய்
எழுந்தேன்
அம்மணமாகவே
மரப்பலகை தாண்டி
அம்மம்மா முன் அறைக்கு
ஓடினேன்
அங்கே
என் சென்ற வருட
கந்தல் பொம்மைக்கு
புதிய பொத்தானை
பொத்திடும் காட்சி கண்டேன்.



**– கரோல் பிரீமன்**

தமிழில் : **என். சண்முகலிங்கன்**

**கரோல் பிரீமன் (Carol Freeman,1941)**
**– அமெரிக்க கறுப்புக் கவிஞர்**
**ஒக்லண்ட் சிற்றி கல்லூரி, கலிபோர்னியா பல்கலைக்கழகங்களில் கல்வி கற்றவர்**
**Poems of Christmas, Black Fair, 3000 Years of Black Poetry போன்ற தொகுதிகளில் இவரது கவிதைகள் இடம்பெற்றுள்ளன.**

## சிறுகதை



# குப்பை



**செ.மகேஷ்**

மக்கள் நடமாடும் நீண்ட நெடும்பாதை. அதன் ஓரமாகக் கூடி நின்று, அங்கே சிதறிக்கிடந்த குப்பைக் குவியலுக்குள் எதனையோ முகர்ந்து தேடும் சில நாய்கள்.

அவை தமக்குள் உறுமிக்குரைத்து ஒன்றோடொன்று மோதி தமது வாய்க்குள் அகப்பட்டதை இழுத்துச் சென்று ஆங்காங்கே நின்று உண்பதிலே ஆர்வமாக இருந்தன.

அங்கே நிகழ்பவற்றைக்கண்டு பாதையிலே நடமாடுவோர் முகஞ்சுழித்து பரவிய நாற்றத்தைச் சுவாசிக்க மனம் வெறுத்து மூக்கைப்பிடித்தபடி நடந்து பாதையைக்கடந்து செல்வது தெரிகிறது.

அப்பிரதேசத்தில் உள்ளோர் தமது வீடுகளில் மனம் விரும்பி உண்பதும் உபயோகித்ததும் போக எஞ்சியவற்றை இங்கே கொட்டிச்சேர்த்த குப்பைக் குவியலே இது. தமது தேவைக்கு எடுத்தவை போக எஞ்சியதை வீசி எறிந்து தமது இறுதிக்கடமையை முடித்துக் கொண்டதாகவே அவர்கள் எண்ணினர்.

கடதாசிகளும் பொலித்தின் பைகளும் தாம் ஏந்திவந்த பொருட்களோடு சிதைந்து சீர் குலைந்து சிந்திக் கிடந்தன

காகங்கள் அந்தக் குப்பைமேட்டில் குந்தி எழுந்து கரைந்து பறந்தன.

அவிழ்படாது வீசப் பட்ட உருண்டு கிடந்த உரப்பை மூடைகளின் வெளிப்புறமெங்கும் கசிந்து பரவிய இரத்தக் கோலங்கள். அதன் உள்ளே இருந்து நாற்ற மெழுப்பும் கழிவுப் பொருளைக் கோடி காட்டின.

இத்தனைக்கும் மத்தியில் அழகாக அச்சிட்டுப் படமிட்டு "இங்கே குப்பை போடாதீர்கள்" என்ற அறிவித்தற்பலகை. அதைச் சூழ்ந்து குவியும் குப்பைகள்!

கற்றவர்கள் வாழும் பிரதேசம்..இங்கே எழுத வாசிக்கத் தெரிந்தோர் தொண்ணூற்று ஒன்பது வீதம் என அறிக்கைகள் சொல்லுகின்றன.

அந்த அறிவித்தற் பலகையில் அமர்ந்து கரையும் இரண்டு காகங்கள்.

பலகையில் உள்ளவற்றைப்பார்த்து வாசித்து மனம் இரங்க மறுக்கும் மனிதர்களைத் திட்டித் தீர்க்கின்றனவோ!



3 ஆம் பரிசு

ஞானம்
கலை இலக்கியச் சஞ்சிகை

அமரர் செம்பியன் செல்வன் ஞாபகார்த்த
சிறுகதைப் போட்டி 2023



புதுத்தேர்வாகிய நகரசபைத் தலைவரின் நடவடிக்கைகளில் முன்னிலைப்படுத்தப்பட்ட ' நகரத்தைச் சுத்தமாக வைத்திருப்போம்' 'அழகிய நகரத்தை உருவாக்குவோம்' போன்ற வார்த்தைகள் செயல் வடிவம் பெறுமுன்னரே பதவி இறக்கப்பட்ட தலைவரின் பரிதாபம். நகரின் சுத்திகரிப்பு வேலையில் தடைகளை ஏற்படுத்தியிருந்தன.. அடுத்து வருபவரும் இன்னமும் எத்தனை நாளைக்கோ?

அந்த நகர மக்களின் தினசரி பாவனைக் குகந்த பாதையோரத்தில் நாற்றமெழுப்பும் குப்பை கூழங்கள்! அவை அந்தச் சுற்றுச் சூழலுக்குச் சுகாதாரக்கேடுளை விளைவித்துக் குவித்துக் கிடந்தன.

அயலில் வசிக்கும் சுப்பையா அண்ணரும் மனைவியும் தமது இரு பிள்ளைகளுடனும் அந்தப்பாதையால் கோயிலுக்குப் போகிறார்கள். காலையிலேயே குளித்து முழுகி சுத்தமான ஆடைகளோடு அவர்களின் பயணம் அழகாகவே இருக்கிறது.

அவர்கள் தம்மீது பூசித் தெளித்துப் பொட்டிட்டு வந்த வாசனைத் திரவியங்களையும் மீறி அப்பாதையைக்கடக்கும்போது எழும் நாற்றத்தை சுவாசிக்க அவர்கள் சிரமப்பட்டார்கள்.

அந்த இடத்தை முந்திக் கடக்கப் பாய்ந்த பாலசிங்கத்தார் " இந்த நகர சபையும் அதன் சுகாதார சேவையும்!" என்று முணு முணுத்தபடி மூக்கைப்பிடித்துக் கொண்டார்.

சுப்பையா அண்ணர் என்ன நினைத்தாரோ "நாங்க இங்க குப்பை போடிறதில்லை அங்க இங்க யெண்டு இருக்கிற சனந்தான் இங்கை கொண்டுவந்து இதில குப்பைகளைப் போடுதுகள் அறிவு கெட்ட சனம்!" என்றார், சற்றே ஆத்திரத் தோடு.

மௌனமாக அவ்விடத்தை எதிர்ப் புறமாகக் கடந்த சின்னத்தம்பியருக்குச் சற்றே மன உறுத்தல்தான்.

அவர் இப்பொழுது தனது வீட்டிற்கு வந்துவிட்டார்.

அந்த நாற்றக்குப்பையைக்கடந்து வந்த போது பாதையில் நடந்தோர் சொன்ன வார்த்தைகளிற் சில அவரின் செயல்களையும் நினைவூட்டி உள்ளத்தை வருத்தின.

தாம் செய்வதெல்லாம் பொதுவாகவே தவறென்று உணர்ந்தாலும் அவற்றைத் திருத்திக் கொள்வது கடினமானதாகவே இருக்கிறது. சந்தர்ப் சூழ்நிலைகள் அவரைத் திருந்த விடுவதாக இல்லை.

தனது வீட்டுக்கு அயலில் ஒரு கூப்பிடு தூரத்தில் குவியும் அந்தக் குப்பைகளோடு தனது வீட்டுக் குப்பைகளையும் கொட்டிக்கழிப்பதில் தவறில்லை என்பதே அவரது மனச்சாட்சியின் நியாயம்!

அதிலே குவிந்து கிடந்த நீதி நியாயங்களை கிளறிப்பார்க்க அவருக்கு மனமில்லை.

தாம் செய்பவற்றிற்கு நியாயம் கற்பிப் பதிலேயே மனம் இலயிக்கிறது.



குற்றவாளிகளைத் தப்பவைக்கத் துணியும் வழக்கறிஞர்போல ஓர் உற்சாகம்.

அந்தப் பாதையிலே போவோர் வருவோர் எல்லோரும் அந்தக் குப்பைக் குவியல்பற்றி உரையாடும் போதெல்லாம் நகரசபையை விமர்சிக்கத்தவறுவதில்லை.

ஒரு சிலர் அப்பிரதேச மக்களின் சுகாதார ஒழுக்கம் சார்ந்த அக்கறையின்மை பற்றி அலட்டிக் கொள்வதுண்டு.

'டெங்கு' 'சிக்கின்குனியா' போன்ற நோய்ப் பரவல்கள் பற்றியெல்லாம் பேசுவோர் மத்தியில் நாறும் குப்பைக்குவியல், நுளம்புப் பெருக்கம்' பற்றியெல்லாம் நியாயப் பிரதிவாதங்களும் பட்டிமன்றங்களும் நடைபெறுவதுண்டு.

குப்பைகளைக் கூட்டிப் பெருக்கித் தீயிட்டு எரிப்பதும் குழிகளிலிட்டு மூடுவதும் பொலித்தீன் பிளாஸ்ரிக் பொருட்களைச் சேகரித்து அவற்றை உரிய சுகாதாரப் பிரிவினர் ஊடாகச் சேர்க்க வேண்டிய இடங்களுக்கு அகற்றும் நடை முறைகள் இருப்பதும் அவருக்குத் தெரியாம லில்லை.

வீடும் அதன் சுற்றுச் சூழலும் சுத்தமாக இருப்பதற்காக மக்கள் நடமாடும் வீதிகளையும் அவற்றின் ஓரங்களையும் அசுத்தப்படுத்துவது நியாயமில்லைத்தான்.

பலவேளைகளில் அவை தவறு என எண்ணினாலும் அவரிடமிருந்த சோம்பலும் அசட்டையும் குப்பைகளை சுகாதார முறைகளைப் பேணி அகற்றுவதில் ஆர்வம் காட்ட விடுவதில்லை.

அசுத்தம் பெருகினால் ஈக்களும் நுளம்பும் அவ்விடத்தை ஆட்சி செய்து, தொற்றும் நோய்நொடிகள், பெருகக் காரணமாகிவிடுகிறது.

சின்னத்தம்பியருக்குத் தாம் செய்பவை தவறு என்ற மன உறுத்தல்!

கதிரையில் அமர்ந்திருந்தாலும் நிம்மதி சூழவில்லை.

வீட்டுக்கு வெளியே காகங்கள் கரையும் சத்தம் அவரின் காதில் மோதியது.

வீட்டின் வாசலுக்கு எழும்பிவந்தவர், கிணற்றடிப்பக்கமாகக் கூடிக்கரைந்த காகங் களால் ஈர்க்கப்பட்டு அவ்விடத்தைத் திரும்பிப் பார்த்தார்.

கிணற்றின் வாளிக் கயிற்றைக் கம்பியில் கொளுவி நீர் அள்ள வசதியாகச் சட்டம் இணைக்கப்பட்ட தூண்கள் இரண்டு! அவை இப்பொழுது பயன்பாட்டில் இல்லை.

மின்சாரத்தில் இயங்கும் நீரிறைக்கும் மோட்டார் பூட்டிய பின்னர் இப்பொழுது கப்பிக்கும் வாளிக்கம் தேவை ஏற்படவில்லை.

வெறுமையாகிப்போன அந்தச்சட்டத்தில் இரண்டு காகங்கள்!

அதிலொன்று தனது சொண்டினால் கௌவி வந்த ஏதோ ஒரு பொருளை கால்களால் மிதித்துக் கொத்தி தின்ன முயன்றது.

அதனைக்கண்ட சின்னத்தம்பியரின் மனைவி விசாலாட்சி 'அங்க பாருங்கோ! அங்க பாருங்கோ! அந்தக்காகங்களைக் கலையுங்கோ! கோழிக் குடலோ? ஆட்டுக் குடலோ?தெரியயில்லை. ஓடுங்கோ! ஓடுங்கோ! கலையுங்கோ! கலையுங்கோ! எனக் கூச்சலிட்டாள்.

அவள் கூவிக் கூச்சலிடும் சத்தம் கேட்டு காகங்கள் அமர்ந்திருந்த சட்டத்தைத் திரும்பிப்பார்த்த சின்னத்தம்பி, எழுந்து பறந்த காகத்தின் கால்களிலிருந்து கிணற்றுக்குள் விழும் பொருளைக்கவனித்தார்.

அது கோழியை இறைச்சிக்காக வெட்டித் தேர்ந்த பின்னர் வீசுவதற்காக எஞ்சும் கோழியின் குடலின் பாகம்

காகங்கள் அங்குமிங்குமாகப்பறந்தன.

கிணற்றினுள்ளே விழுந்தது என்ன? ஓடிவந்த வேகத்தில கிணற்றினுள்ளே எட்டிப்பார்த்த சின்னத்தம்பியரின் உள்ளம் சஞ்சலப்பட்டது.

அண்மையிலேதான் கூலியாட்களைத் தேடிப்பிடித்து ஐம்பதாயிரம் ரூபாய் கூலி கொடுத்து அந்தக் கிணற்றின் நீரை இறைத்துச் சுத்தம் செய்திருந்தார்.

மீண்டும் கிணறு இறைக்கத்தான் வேணும்

நேற்று அவர் சாப்பிட்ட சுத்தமான கோழிக்கறி அவர்நாவில் இப்பொழுது கசந்தது.

நேற்றுக் குப்பையில் வீசிய அந்தக் கோழியை உரித்த செட்டைகளோடு கூடிச்சேர்த்த குடற்பாகம் இன்று அவரின் கிணற்றினுள்ளே!!!

நீர் அசுத்தமாகி!

மனம் உண்மையை ஊருக்குச் சொல்லத் தயங்கியது.

❍❍❍

# மஹ்மூட் தர்விஸ் கவிதைவெளி
# - மீள் நினைவூட்டல் பதிவுகள்

ஒரு தனி மனித சக்தியின் முழு வீச்சும் எத்துணை பாரதூரமானது என்பதற்கு சான்றாக நிற்பவர், மஹ்மூட் தர்விஸ். கவிதை உலகின் தவிர்க்க முடியாததும் இன்றியமையாததுமான ஒரு கவிஞன் என்றால் மஹ்முட் தர்விஸ் என்பதில் இரு வேறு கருத்துக்கள் வர இடமில்லை என்பதே யதார்த்தம். அவ்வாறான ஒரு கவிஞனை சர்வதேச கவிதைகள் தினத்தில் நாம் மீள் வாசிப்பது மகிழ்ச்சிக்குரியதாக குறிப்பிடவேண்டும்.

1941இல் லெபனானுக்கு அண்மியதான அல்-பிர்வா எனும் பலஸ்தீனிய குக்கிராமம் ஒன்றில் பிறந்தவர் தர்வீஸ். 1948இல் யூத ஆயுததாரிகளின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்டு இவரது குடும்பமும் லெபனானுக்கு தப்பி ஒடியது. இவர் 1971இல் இஸ்ரேலை விட்டு வெளியேறி கெய்ரோவில் வாழ்ந்தார். 1972ஆம் ஆண்டு முதல் இவர் பெய்ரூத்தில் வாழ்ந்து வந்தார். மீண்டும் இவரது குடும்பத்தினர் தமது கிராமத்திற்கு அண்மிய கிராமமொன்றிற்கு இரகசியமாக இடம்பெயர்ந்து வாழ்ந்தனர். எனினும் இஸ்ரேலிய இராணுவ சட்டத்தின்படி அவ்வாறு திரும்பியவர்கள் உள்நாட்டு அகதிகள் எனக் கருதப்பட்டதுடன் அவர்களின் ஆதனங்கள் மீதான உரிமைகள் மறுக்கப்பட்ட இரண்டாம்பட்சப் பிரசைகளாகக் கருதப்பட்டு வந்தனர்.

இவ்வாறான ஒரு நிலையில் இஸ்ரேலியர்களின் அரச ஆக்கிரமிப்பை எதிர்த்து தன்னையும் தனது சமூகத்தினதும் உரிமைகளை வென்றெடுக்கும் ஒரு கவிதைப் போரினை மேற்கெண்டவர். தனது இருப்பு இழக்கப்படுவது குறித்துப் போராடிய வரலாற்று மனிதர், இவர். தனது சிறுவயது இடப்பெயர்வு கால கட்டத்திலிருந்தே இவரது வாழ்வில் புரட்சிகர சிந்தனைகள் கிளர்ந்தன.

மிக இளம் வயதிலே அவர் கண்முன் நிகழ்ந்த பலஸ்தீனத் துயர நிகழ்வுகளை எதிர்க்கும் வலுவை தனது பேனா முனையால் வார்த்தெடுத்தார். தர்வீஸ் அவர்களது கவிதைகள் சாதாரண ஒரு அடையாளமாகவன்றி அது ஒரு சமூகத்தின் அல்லது பூர்வீக மண்ணுக்கான போராட்ட மக்களது உணர்வுகளுக்கு அத்திபாரமாக முகிழ்ந்தன.

மகா இஸ்ரேலிய அரச ஆக்கிரமிப்பாளர்களை இவரது கவிதை வரிகள் கதிகலங்க வைத்தன. அது மட்டுமின்றி நாளுக்கு நாள் இஸ்ரேலியப் படைகள் அஞ்சித்திரும்பும் சிந்தனைப்பிரளயமாக இவரது கவிதை வீச்சுக்கள் அமைந்தன. பலஸ்தீன மக்களது பூர்வீகம், இருப்பு, சுதந்திரம் போன்றன வற்றின் குறியீட்டு அடையாளமாக இவரது கவிதைகள் சவால்விட்டன. மஹ்மூட் தர்விஸ் அவர்களின் பத்தொன்பதாவது வயதில் இவரது முதலாவது கவிதைத் தொகுதியாக 'சிறகிழந்த பறவைகள்" வெளிவந்தது. அதனைத் தொடர்ந்து பல்வேறு கவிதைப் பிரதிகள் பல வெளிவந்திருக்கின்றன. 'ஒலிவ் இலைகள், பலஸ்தீனக் காதலன், இரவின் முடிவு, கலிலீயில் பறவைகள் மடிகின்றன, நான் உன்னைக் காதலிக்கிறேன். நான் உன்னை காதலிக்கவில்லை. ஏழாவது தாக்குதல், திருமணங்கள் ஆகிய பல தொகுதிகளை வரைந்துள்ளார்.

இவரது கவிதைகளும் உரைநடை ஆக்கங்களும் 40 ஆண்டுகாலம் பலஸ்தீனிய மக்களை கட்டிப்போட்டிருந்தது. தர்விஸ் அரபுலகின் நிகரற்ற கதாநாயகனாவே கருதப்பட்டார். அரபுலகிற்கு அப்பாலும் இவரது தாக்கம் விரவிக் காணப்பட்டது என்று ஒரு ஆய்வாளர் குறிப்பிடுகிறார்.

இவர் இஸ்ர வேலின் கம்யுனிஸ்ட் கட்சியின் உறுப்பினராக இருந்ததுடன், அதற்காக பலதடவை கைது செய்யப்பட்டுள்ளார். 1970இல் மாஸ்கோ பல்கலைக்கழகத்தில் ஒராண்டு கல்வியின் பின் இஸ்ரவெலுக்கு திரும்பாமல் எகிப்துக்கும், பின்னர் லெபனானுக்கும் சென்று வாழ்ந்தார். லெபனனில் தான் இவருக்கு பலஸ்தீனிய விடுதலை இயக்கத்தின்



**எல். வஸீம் அக்ரம்**

தொடர்பு ஏற்பட்டது. 1973இல் சேர்ந்ததார். ஆரம்பகால அரசியலில் ஆக்கிரமிப்பிற்கெதிரான கவிஞராகத் திகழ்ந்தார்.

இவர் பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் நிறைவேற்று உறுப்பினராகத் தெரிவு செய்யப் பட்டார். எனினும் 1993இல், ஒஸ்லோ சமாதான ஒப்பந்தத்தினை யசிர் அரபாத் கையொப்பமிட்டவுடன் தனது கட்சிப் பதவிலிருந்து இராஜினமா செய்தார். பலஸ்தீனியர்களின் உண்மையான சுதந்திரத்தினையும், இஸ்ரவேலர் களின் ஆக்கிரமிப்பினையும் முடிவுக்கு கொண்டு வரும் அடிப்படையில் நாங்கள் உண்மையான சமாதானத்தினை அடைவதற்கான வாக்குறுதியை இந்த ஒப்பந்தம் வழங்காது என்பதை நான் புரிந்துகொண்டேன் என இவர் குறிப்பிட்டார். ஒஸ்லோ ஒப்பந்த அனுகூலங்களை வெளிப்படையாக சுட்டிக்காட்டவும் இவர் தவறவில்லை.

''எல்லா அராபியர்களையும் உலகத்திலுள்ள எல்லா நேர்மையான மக்களையும் வருத்தும் பலஸ்தீனிய காயத்தின் கவிஞராக மட்டு மல்லாது இவர் ஒரு கவிஞர் திலகம்'' என எகிப்திய பிரபல இரு மொழிக் கவிஞர் (அரபு – ஆங்கிலம்), அஹமட் புவாட் நையிம் குறிப்பிட்டமையும், பிரெஞ்ச் வெளிவிவகார அமைச்சர் ''மஹ்மூட் தர்வீஸ் முழு மக்களதும் நிலத்துடனான இணைப்பினை, அவர்களது சமாதானத்திற்கான அவாவினை எவ்வாறு வெளிப்படுத்துவது என்பதனை தெரிந்து இருந்தார். அவரது சக சீவியத்துக்கான அழைப்பு விடுக்கும் செய்தி எதிரொலிக்கும் இறுதியில் கேட்கப்படும்'' என்கிற செய்தி இவரது மரணத்துடன் உலகெங்கும் ஒலித்தது.

இவருடைய பல கவிதைகள் தமிழில் பலரால் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. பலஸ்தீனக் கவிதைகள் என்ற தொகுப்பு நூலில் இவருடைய கவிதைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இதனை பேராசிரியர் எம்.ஏ. நு்.மான் 1981இல் தந்திருந்தார். இந் நூலில் தர்வீஸின் கவிதைகளோடு சேர்த்து பல பலஸ்தீனக் கவிஞர்களுடைய கவிதைகளும் மொழிபெயர்க்கப்பட்டிருந்தன.

எஸ்.வி.ராஜதுரை, வ.கீதா மொழிபெயர்த்து தொகுத்த 'மண்ணும் சொல்லும் மூன்றாம் உலகக் கவிதைகள்" என்னும் நூலிலும் இவருடைய கவிதைகள் இடம் பெற்றிருக்கின்றன.

உயிர்மை பதிப்பகத்தினுடைய 'நான் மடிந்து போவதைக் காணவே அவர்கள் விரும்புவர்" என்ற நூலில் தர்விஸினுடைய கவிதைகள் மட்டுமே மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. மஹ்மூட் தர்விஸ் கவிதைகள் என்ற பேராசிரியர் எம்.ஏ. நு்.மானின் நூலினை வாசிக்கும் போது இவரின் கவிதையின் அரசியல், சமூக இருப்பின் ஒலி, போராட்ட வலி, ஆத்ம எண்ணம் என்பன துலாம்பரமாக தெரியும்.

பலஸ்தீனக் கவிதைகள் தமிழில் வெளிவந்த பின்னரே ஈழத்தில் போர்க்கால கவிதைகளின் வீச்சு வளர்ந்தது என்று ஒரு சிலர் கருதுவது முண்டு.

இந்த அடிப்படையில் பலஸ்தீனக் கவிஞர் தர்விஸின் சில கவிதைகளை இங்கு பதிவிடுகிறோம்.

## உயிர்த் தியாகிகள் தூங்கச் செல்லும்போது

**உயிர் தியாகிகள் தூங்கச் செல்லும்போது**
**கூலிக்கு மாரடிப்போரிடமிருந்து அவர்களைப்**
**பாதுகாப்பதற்காக**
**நான் விழித்திருக்கிறேன்**

**நான் அவர்களுக்குச் சொல்கிறேன்:**
**நீங்கள் ஒரு புதிய நாட்டில் விழித்தெழுவீர்கள்**
**என்று நம்புகின்றேன்**
**அங்கு முகில்களும், மரங்களும், கானலும்,**
**நீரும் இருக்கும்**

**நம்பமுடியாத நிகழ்விலிருந்து,**
**படுகொலைகளின் உபரி மதிப்பிலிருந்து**
**அவர்கள் பாதுகாப்பாய் இருப்பதையிட்டு**
**நான் அவர்களைப் பாராட்டுகிறேன்**

**நான் காலத்தைத் திருடுகிறேன்**
**ஆகவே அவர்கள் என்னைக் காலத்திலிருந்து**
**இழுத்தெடுக்க முடியும்**
**நாம் எல்லோரும் உயிர்த்தியாகிகளா?**

**நான் குசுகுசுக்கிறேன்: நண்பர்களே,**
**ஒரு சுவரைத் துணிக்கொடி கட்டுவதற்கு**
**விட்டுவையுங்கள்,**
**ஒரு இரவைப் பாடுவதற்கு விட்டுவையுங்கள்**
**நீங்கள் விரும்பும் இடத்தில் உங்கள்**
**பெயர்களைத் தொங்கவிடுவேன்,**
**ஆகவே சற்றுத் தூங்குங்கள்**
**புளித் திராட்சையின் ஏணிப்படியில் தூங்குங்கள்**

உங்கள் காவலரின் குத்துவாளிலிருந்து
நான் உங்கள் கனவுகளைப் பாதுகாப்பேன்
தீர்க்கதரிசிகளுக்கு எதிரான புத்தகத்தின்
சதியிலிருந்து
நான் உங்ளைப் பாதுகாப்பேன்

இன்றிரவு தூங்கச் செல்கையில்
பாடல் இல்லாதவர்களின் பாடலாய் இருங்கள்

நான் உங்களுக்குச் சொல்கிறேன்:
நீங்கள் ஒரு புதிய தேசத்தில் விழித்தெழுவீர்கள்
என்று நம்புகின்றேன்
ஆனால், அதை ஒரு பாய்ந்து செல்லும் பெண்
குதிரையின்மீது வையுங்கள்

நான் குசுகுசுக்கிறேன்: நண்பர்களே,
நீங்கள் எம்மைப்போல் ஒருபோதும்
இனந்தெரியாத
தூக்குமேடையின்
சுருக்குக் கயிறாக இருக்கமாட்டீர்கள்.

❖ ❖ ❖

## மனிதனைப் பற்றி

அவனது வாயில் துணிகளை அடைத்தனர்
கைகளைப் பிணைத்து
மரணப் பாறையுடன் இறுகக் கட்டினர்
பின்னர் கூறினர்
நீ ஒரு கொலைகாரன் என்று

அவனது உணவையும் உடைகளையும்
கொடிகளையும் கவர்ந்து சென்றனர்
மரண கூடத்தினுள் அவனை வீசி எறிந்தனர்
பின்னர் கூறினர்
நீ ஒரு திருடன் என்று

அவன் எல்லாத் துறைமுகங்களில் இருந்தும்
துரத்தப்பட்டான்
அவனது அன்புக்குரியவளையும்
அவர்கள் தூக்கிச் சென்றனர்
பின்னர் கூறினர்
நீ ஒரு அகதி என்று

தீப்பொறி கனலும் விழிகளும்
இரத்தம் படிந்த கரங்களும் உடையவனே
இரவு குறுகியது
சிறைச்சாலைகள்
என்றென்றைக்கும் எஞ்சியிரா
சங்கிலிக் கணுக்களும் எஞ்சியிரா
நீரோ இறந்துவிட்டான்
ரோம் இன்னும் இறக்கவில்லை
அவள் தன் கண்களாலேயே இன்றும்
போரிடுகிறாள்
காய்ந்து போன ஒரு கோதுமைக் கதிரின்
விதைகள்
கோடிக்கணக்கில் பசிய கதிர்களால்
சமவெளியை நிரப்பவே செய்யும்.

❖ ❖ ❖

## தாய்நாடு

ஈச்சைமரத்தின் பாளைகளில் என்னைத்
தொங்கவிடு
என்னைத் தூக்கிலிடு,
நான் ஈச்சையை வஞ்சிக்கமாட்டேன்

இந்த நாடு எனது
நீண்ட காலத்துக்கு முன்பு நல்ல, கெட்ட
மனநிலைகளில்
நான் ஒட்டகங்களில் பால் கறந்திருக்கின்றேன்

என் தாய்நாடு வீரப்பழங்கதைகளின் ஒரு
பொதியல்ல
அது ஒரு நினைவோ, இளம்பிறைகளின் ஒரு
வயலோ அல்ல

எனது தாய்நாடு ஒரு கதையோ அல்லது கீதமோ
அல்ல
ஏதோ மல்லிகைச் செடியின் கிளையில் விழும்
வெளிச்சமும் அல்ல

எனது தாய்நாடு, நாடு கடத்தப்பட்டவனின் கோபம்
முத்தமும் அரவணைப்பும் வேண்டும் ஒரு
குழந்தை.

ஒரு சிறைக்கூடத்தில் அடைக்கப்பட்ட காற்று
தன் மகன்களுக்கும் தன் வயலுக்குமாகத்
துக்கம் அனுஷ்டிக்கும் ஒரு கிழவன்

இந்த நாடு என் எலும்புகளைப் போர்த்தியிருக்கும்
தோல்
என் இதயம் ஒரு தேனீபோல் அதன் புற்களுக்கு
மேலால் பறக்கிறது
ஈச்சைமரத்தின் பாளைகளில் என்னைத்
தொங்கவிடு
என்னைத் தூக்கிலிடு
நான் ஈச்சையை வஞ்சிக்கமாட்டேன்.

❖ ❖ ❖

**நான் அங்கு பிறந்தேன்**

**நான் அங்குதான் பிறந்தேன்**
**எனக்கு நினைவுகள் உள்ளன**
**மனிதர்கள் போலவே நான் பிறந்தேன்**
**எனக்கு ஒரு தாய் இருக்கிறாள்**
**பல ஜன்னல்கள் உள்ள ஒரு வீடும் உண்டு**
**சகோதரர்களும் நண்பர்களும் உள்ளனர்**
**இதயமற்ற ஜன்னலுடன் ஒரு சிறைக்கூடமும் உள்ளது**
**நீர்ப்பறவை எழுப்பிய அலை எனதுதான்**
**எனக்கென்று சொந்தப்பார்வை உண்டு**
**ஒரு மேலதிக புல் இதழும் உண்டு**
**உலகின் தொலைதூரச் சந்திரன் எனதுதான்**
**பறவைக் கூட்டங்களும்**
**அழிவற்ற ஒலிவ் மரமும் எனதுதான்**
**வாள்களுக்கு முன்பு நான் இந்த மண்ணில் நடந்தேன்**
**அதன் வாழும் உடலை ஒரு துயர மேசையாக்கினேன்**

**நான் அங்குதான் பிறந்தேன்**
**வானம் தன் தாய்க்காக அழுதபோது**
**நான் வானத்தை அதன் தாயாக மாற்றினேன்.**
**திரும்பிவரும் மேகம் என்னைத் தெரிந்துகொள்வதற்காக**

# நில இரங்கற் பத்து

**– செ. சுதர்சன் –**

---

வயல் நிலத்திலே படை தரித்தனர்!
வாழ் புலத்திலே பகை விரித்தனர்!
அயல் விரட்டியே பொருள் சுருட்டியே
ஆரும் அற்றவூர் அதைப் புரட்டினர்!

நின்று ஓங்கிடும் பனை பறித்தனர்!
நீளநீளமாய் அதைத் தறித்தனர்!
அன்று கம்பிமுள் கொண்டு கட்டியே
அன்னை மண்ணில் எம் கால் மறித்தனர்!

பள்ளி மீதிலும் கொள்ளி வைத்தனர்!
பாதை எங்குமே கண்ணி வைத்தனர்!
அள்ளி முத்தமே இட்ட மண்ணதை
அரசு மண் எனச் சொல்லி வைத்தனர்!

வீதி எங்குமெம் வாழ்வு நின்றது!
விண்ணை எம் குரல் இடித்து நின்றது!
பேதி உண்டதோர் வாழ்வு தந்த பேய்
பெற்ற எம் நிலம் உண்டு நின்றது!

பச்சை ஆயிரம் பயிர் வளர்ந்ததாம்!
பாடும் ஆயிரம் கொடி மலர்ந்ததாம்!
கச்சை கட்டியே களை பிடுங்கியே
காதலித்த எம் நிலம் தொலைந்ததாம்!

சுட்ட பனம்பழச் சுவையும் கிட்டுமா?
சுண்டங் கத்தரிக் கறியும் கிட்டுமா?
வட்ட வட்டமாய் கூடி உண்டிடும்
வாழ்வு தந்த மண் இன்று கிட்டுமா?

கூழ் குடித்த எம் குந்திருக்குமா?
குஞ்சி றால் நிறை குழம்பிருக்குமா?
ஆழ் கிணற்றிலே அள்ளும் நீரையே
அமுதம் என்ற வாய் அங்கிருக்குமா?

பச்சை காய்கறித் தோட்டம் என்னவோ?
பாவற் கொடியொடும் பயிற்றை என்னவோ?
வைச்ச பாத்தியில் வாளை உருவியே
வயிறு கலக்கிய வெருளி என்னவோ?

மட்டை அள்ளிய மனைகள் உள்ளதோ?
மாடு மேய்த்த மண் மடிகள் உள்ளதோ?
கட்டை போகுமுன் கண்கள் மூடுமுன்
காண எண்ணிய காட்சி உள்ளதோ?

காலகட்டி எம் காலம் தாண்டினோம்!
கண்கள் துஞ்சிடாக் கனவில் தூங்கினோம்!
தோலகட்டி மண் தொட்டு மீளவே
தொஞ்சும் உள்ளமே தோளில் தாங்கினோம்!

# பாரதியும் ஆன்மிகமும்

மகாகவி பாரதி பற்றி பல ஆய்வுகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. மகாகவியின் ஆன்மிக சிந்தனைகள் பற்றி சில விடயங்களைத் தொட்டுச் செல்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். பாரதியின் பக்திப்பாடல்கள், ஞானப்பாடல்கள் மூலம் ஓரளவு அவரது ஆன்மிக ஈடுபாட்டையும் ஆன்மிகம் தொடர்பான அவரது பார்வையையும் கண்டுகொள்ள முயலலாம்.

மகாகவியின் பக்தி, ஞானப்பாடல்கள் ஊடாக அவரது ஆன்மிகப் பார்வையை ஒவ்வொரு பாடல்கள் மூலமாக பார்க்காவிட்டாலும் அவரது பொதுவான ஆன்மிகம் பற்றிய சிந்தனையை காணலாம். காளி மீது அதீத பக்தி கொண்டவன் பாரதி என்பதை நிறைய அவரது பாடல்கள் சான்றாகும். எல்லாம் சக்தியின் வடிவம் என்பதை அவன் நம்பினான் விநாயகர், முருகன் மீதான பாடல்கள் பாடப்பட்டிருந்தாலும் அவன் சக்தியை வேண்டுபவனாகவே காணப் பட்டான். காணி நிலம் வேண்டும் என்றபோது பராசக்தியையே,

காணிநிலம் வேண்டும் - பாராசக்தி.

'காணிநிலம் வேண்டும்…' என்பான்.

இரஷ்யா புரட்சி 1917 இல் வெடித்த வேளை

'மாகாளி பராசக்தி உருசிய நாட்டினிற் கடைக்கண் வைத்தான்'' என்கிறார்.

மோகத்தைக்கொன்று விடு அல்லாலென்றன் மூச்சை நிறுத்திவிடு'' என்பார்.

சக்திக்கு ஆத்ம சமர்ப்பணம் எனும் பாடல்களில் உடல் முழுவதையும் சக்திக்கே சமர்ப்பணம் செய்கிறார்.

'யாதுமாகி நின்றாய்-காளீ-எங்கும் நீ நிறைந்தாய்' என்கிறான்.

கண்ணன்பால் பாரதி தீராத காதலும், பக்தியும் கொண்டிருந்தான்.

'காக்கைச் சிறகினிலே நந்தலாலா! நின்றன் கரியநிறந் தோன்றுதையே நந்தலாலா'' என்கிறார்.

''இறைவன் தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான்'' என்கிறது இந்து மதம். பாரதியும் உலகின் யாவற்றிலும் இறைவனை கண்டவனே



**மொழிவரதன்**

இயேசு கிறிஸ்து, அல்லா அல்லா எனப் பாடியவன் அவர்கள் பெருமையை பாடாமல் விடவில்லை.

'விட்டு விடுதலையாகி நிற்பாயிந்தச்
சிட்டுக்குருவியைப் போலே' என்பான்.

எல்லாப் பற்றுதல்களிலிருந்தும் விடுதலை யாகி சிட்டுக்குருவி போல் மனிதனை வாழ வேண்டுகின்றார் அப்படி வாழ்பவன்,

'காலா உனை நான் சிறு புல்லென மதிக்கிறேன்- என்றன்
காலருகே வாடா சற்றே உனை மிதிக்கிறேன் - அட (காலா)

என்பதும்

'அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே என்பதும்

'செத்தபிறகு சிவலோகம் வைகுந்தம்
சேர்ந்திடலாமென்றே எண்ணியிருப்பார்
பித்த மனிதர் அவர் சொலுஞ் சாத்திரம்
பேயுரையாமென்றிங்கூடதேடா சங்கம்

என்பதும்

ஆயிரந் தெய்வங்கள் உண்டென்று தேடி
அலையும் அறிவிலிகான் - பல்
லாயிரம் வேதம் அறிவொன்றே தெய்வமுண்
டாமெனல் கேளீரோ' என்கிறார்.

நான்கு வர்ணங்களையும் பாரதி தூற்ற வில்லை என்றொரு பக்கம் பாரதிக்குண்டு. எனினும்,

'நாலு வகுப்பும் இங்கொன்றே' என்பது அவனது மாற்றுச் சிந்தனையைக் கூறுகிறது.

பாரதி பழைமையான பாரம்பரிய ஆன்மிகச் சிந்தனையை கொண்டிருக்கவில்லை. சனாதனதர்ம சிந்தனைகளை எவர் எப்படி எடுத்துக்கொண்டாலும் பாரதி சாதிமுறைகளை வெறுத்தார். அவர் தாழ்த்தப்பட்ட அல்லது பிராமணன் அல்லாத ஒருவனுக்கு பூணூல் அணிவித்தமை எல்லோருக்கும் விடுதலை என முழங்கியமை பாரம்பரிய இந்து ஆன்மீக நடைமுறைகளிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டவனாகவே காணப்பட்டான். மொத்தத்தில் அவன் ஒரு மாற்றுக் கருத்துக்களுடனான ஆன்மிகவாதியாகவே மிளிர்ந்தான் எனத் துணியலாம்.

சிறுகதை



# கோடை மழையின் முதற் துளிகள்

சுதாராஜ்

பொட்டுப் பொட்டாக மழைத்துளிகள் விழத் தொடங்கியிருந்தது.

கால்களை விரைவுபடுத்தி நடந்தேன். மழை பெருத்து அடிப்பதற்குமுன் வீடு போய்ச் சேர்ந்துவிடவேண்டும். மனைவி, குழந்தையுடன் தனிமையிலிருக்கிறாள். குழந்தை பிறந்து ஓரிரு கிழமைகள் வேலைக்கு லீவு போட்டு அவளுடன் கூட இருந்தேன். பிள்ளைப்பேற்றின் பின்னர் அவளுக்குத் தேவையான சகல தேவைகளையும் கவனிக்கவேண்டியிருந்தது.

தொழில் காரணமாக மலைநாட்டுப் பக்கமிருந்து கொழும்புக்கு வந்து வேலை தேடி அலைந்த காலங்களிற்தான் கவிதாவின் பழக்கமேற்பட்டு, பின்னர் மணமுடித்துக் கொண்டேன். கொழும்பு நகரை அண்மித்த ஒரு பகுதியில் குறைந்த வாடகையில் ஒரு வீடு எடுத்து எங்கள் குடித்தனம் போய்க் கொண்டிருக்கிறது.

கட்டடங்களை நிர்மாணிக்கும் நிறுவனமொன்றில் கட்டுமான வேலைக்காரனாக சேர்ந்திருந்தேன். நிரந்தரமில்லாத அந்த வேலையில் நீண்ட காலமாகவே பணி செய்து கிடந்தேன்.

மேலதிக லீவு எடுக்காது வேலைக்குப் போகவேண்டியுமிருந்தது. போனால் சம்பள அட்வான்ஸ் அது இது என்று ஏதாவது எடுத்தாவது நிலைமையைச் சமாளிக்கலாம். நிலைமை மோசமாகிக்கொண்டிருந்தது. பொருட்களின் விலைகளெல்லாம் நாளுக்கு நாள் எகிறிப் போய்க்கொண்டிருந்தது. விலைகள் அதிகரித்தாலும் பொருட்கள் கிடைக்கும் வசதியுமில்லை. என்போன்ற கீழ் மட்ட சம்பளமெடுக்கும் ஊழியனுக்கு இதற்கெல்லாம் முகம் கொடுத்து எதிர் கொள்ளும் சாத்தியமுமில்லை. கையிற் கிடைக்கும் சம்பளப் பணத்தில் அன்றாடச் சாப்பாட்டுத் தேவைகளைச் சமாளிக்கமுடியாது திணறும் நிலை. இந்த நாட்டிலுள்ள ஏனையோருக்கும் நேர்ந்த கதிதான் எனக்கும் ஏற்பட்டிருந்தது. குறிப்பிட்டளவு கடன் தொகையை கூட வேலை செய்யும் தொழிலாளர்களிடம் கை மாறியிருந்தாலும் நிலைமை சரிக்கட்ட முடியாதிருந்தது. பிள்ளைக்குப் பாலூட்டும் தாயின் வயிற்றை நிரப்புவதற்குக்கூட வக்கில்லாத தன்மை நெஞ்சிற்குள் நெருப்பை மூட்டிக் கொண்டிருந்தது.

யாரை நோவது? யாரிடம் முறையிடுவது? அல்லது பாதையிலிறங்கி கோசமிட்டு நியாயம் கேட்கும் மக்களுடன் போய்ச் சேர்ந்து கொள்ளலாமா? அரசியலாளர்கள் தங்களது தவறான கையாடல்களால் எங்கள் நாட்டை நாசமாகக்கிவிட்டார்கள் என்ற ஆதங்கம் மற்றவர்களைப்போலவே எனக்குமுள்ளது.

காலையில் புறப்படுவதற்கு முன்னர் மனைவிக்கு காலை உணவு மதிய உணவு என சமையல் செய்துவிடுவேன்.அவளுக்கு குளிப்பாட்டுவதற்காக வெந்நீர் தயார் செய்வேன். உடுதுணிகளைக் கழுவி கொடிக் கயிற்றில் உலர்த்திப் போட்டுவிடுவேன். குட்டிப் பெண்ணையும் மடியிலெடுத்துக் குளிப்பாட்டி உச்சி மோந்து பிரிய முடியாத பாசத்துடன் தாயின் கையிற் கொடுத்து விட்டு வெளியேறினாலும் திரும்ப மாலையில் வந்து சேரும்வரை மனது ஒரு நிலைப்பட்டு நிற்காது. குழந்தையின்



சுதாராஜ்

பசுமையான ஆழ்ந்த உறக்கம், மெல்லக் கண் களைத் திறந்து திறந்து கைகளையும் விரல் களையும் காற்றிலசைத்து இயற்கையுடன் இயல்பாகும் முயற்சி... எல்லாம் என் மனக் கண்ணில் வந்துகொண்டேயிருக்கும்.

வானம் இருட்டிக்கொண்டு வந்து காற்று குளிரடித்து வீசியது.

சடுதியாக பொழுது மாறி நேரம் ஐந்து மணிப் பொழுதிலிருந்து ஏழு மணியை அண்மித்தது போலிருந்தது. கால்களை விரைவு படுத்தி நடந்தேன். இரவுச் சாப்பாட்டிற்காக சாமான் சக்கட்டு ஏதாவது வாங்கவேண்டும். வீட்டிற்கு அண்மையிலுள்ள பண்டார மஹத்தயாவின் கடையில் கடன் கணக்கு வைத்திருந்தேன். தேவையான பொருட்களை அவ்வப்போது வாங்கிக் கொள்வது... பின்னர் பண்டார நெருக்குதல் செய்யும்போது எங்காவது ரோலிங் செய்து கடனை அடைப்பது, இந்த மாதிரித்தான் அன்றாட சீவியம் போய்க்கொண்டிருக்கிறது!

பொட்டுப் பொட்டாக விழுந்துகொண்டிருந்த மழை சடுதியாக புயலடிக்கும் வேகத்துடன் ஒரு விரைவு ரயில் வருவது போன்ற சத்தத்துடன் ஹோவென கூச்சலிட்டு வந்தது.

மழை இரக்கமற்றது என்றே எனக்குத் தோன்றியது.

இந்த மழைக்கு ஒதுங்கி நின்றால் நேரம் கடந்துவிடும்... பண்டார மஹத்தயாவும் கடையைப் பூட்டிவிட்டுப் போய்விடுவார்!

தங்கள் தங்கள் பணி முடிந்து பஸ்களில் வந்திறங்கி வீடு நோக்கி விரைந்து செல்லும் மனிதர்களைப் பார்க்கக் கவலையாயிருந்தது. உடலிறுக்க ஜீன்ஸ்களில் அழகழகான நடை பயின்று செல்லும் இளவட்டப் பெண்களின் நளினங்களை ரசிக்கும் மனநிலை இப்போது எனக்கு இல்லை. சில முதியவர்கள் விரைவாக நடக்கமுடியாது சிரமப்படுவதைக் காண இரக்கமா யிருந்தது. எனினும் மழை அவர்களையெல்லாம் விரட்டியடித்தது. அவரவர் அவசர காரியங்கள் ஏதும் மழைக்குத் தெரிவதில்லை. இரவில் எல்லோரும் படுத்து உறங்கியபின் இந்த மழை வந்திருக்கலாம். ஏன் இப்படி நேரம் கெடாத நேரத்தில் வந்து எல்லோருக்கும் இடைஞ்சல் செய்கிறது?

மழை யாருடைய ஆதங்கத்தையும் பொருட் படுத்தாமல் அடித்துக்கொட்டியது.

வேறு வழியில்லை. ஒரு பக்கமாகப் பார்த்து ஒதுங்க வேண்டியதுதான். பாதையோரத்துக் கடை வாசல்களிலும் தாழ்வாரங்களிலும் அவர வராக ஓடி ஓடி ஒதுங்கிக்கொண்டார்கள். நானும் அவ்வாறே!

கடைக்காரன் சட சடவென ஒருவித தாள லயத்துடன் கொத்துரொட்டி போட்டுக் கொண்டி ருந்தான். அதன் வாசனை ஏற்கனவே என் வயிற்றில் சமிக்ஞை செய்துகொண்டிருந்த பசியை இன்னும் அதிகரித்தது.

ஏற்கனவே தயார் செய்து கொத்துக் கொத்தாக வெட்டி வைத்திருந்த ரொட்டித் துண்டுகளை இரண்டு தடைவை கைகளிலெடுத்து அடுப்பில் கொதித்துக்கொண்டிருந்த தட்டில் போட்டான். லீக்ஸ், வெண்காயம், பச்சை மிளகாய், கோவா, கரட் ஆகியவற்றை அதன் மேல் தூவினான். இரண்டு முட்டைகளை உடைத்து ஊற்றி சட சட எனத் தன் கையிலிருந்த குத்துக் கத்தியினால் கொத்திக் கலவை செய்தான். இந்தக் கட்டத் திலேயே எனக்கு நாக்கு ஊறல் எடுத்தது. முடிஞ்சுதா என நான் பார்த்துக்கொண்டிருக்க, இன்னும் கோழி இறைச்சித் துண்டுகள், மசாலா குழம்பு, மற்றும் எதோ ஒரு வகையான எண்ணெய் போன்றவற்றைக் கலவை செய்து பிரட்டி எடுத்தான். ஒரு பார்சல் கொத்து ரொட்டியை வாங்கிச் சென்று கவிதாவுக்குக் கொடுப்பதற்கும் வக்கில்லையே என்று தோன்றியது. மனதார்ந்த அந்த ஆசை எங்களுக்கெல்லாம் சாத்தியமாகாமல் வெறும் ஆசையாக மட்டுமே துளிர்த்துவிட்டுப் போய்விடுகிறது... கொத்து ரொட்டியின் புதிய விலையை ஒரு பலகைத் துண்டில் எழுதிக் காட்சிப்படுத்தியிருந்தார்கள். ஏனைய பொருட்களைப்போலவே கொத்து ரொட்டியும் வழமையான விலையை விட மூன்று மடங்கு ஏறியிருந்தது!

என்போன்ற சிலர் வந்து மழைக்கு ஒதுங்கியது கடைக்காரருக்கு ஒத்துக்கொள்ளவில்லை போலிருந்தது. 'அந்தப் பக்கம் போங்க...! யாவாரத்தைத் தடுக்கவேணாம்..!' என அடுப்பு வெக்கையை என்னிடம் கொட்டினார்.

எந்தப் பக்கம் போவது என்று தெரியாது நான் தயங்கினேன்.

அந்தப் பக்கமும் இந்தப் பக்கமும் எந்தப் பக்கமுமானாலும் மழை எல்லோரையும் தாழ்வாரங்களில் ஒதுக்கியிருந்தது. மழை அந்த அளவிற்கு மனிதர்களைப் பயமுறுத்தும் சக்தியா?

இப்போதைக்கு மழை தணியுமா என வானத்தை நிமிர்ந்து பார்த்தேன். தென்னை மரங்களும் வேறு பல மரங்களும் கொட்டும் மழையில் நனைந்து தலையசைத்துச் சுழன்றாடி மகிழ்வெய்திக்கொண்டிருந்தன. மனித சென்மங்களின் கலக்கங்களும் ஏக்கங்களும் அவற்றுக்கு இல்லை.

ஓங்கி வளர்ந்திருந்த பெரு மரமொன்று மழைக்கு மரியாதை செய்வதுபோல தலையைக் குனிந்து தன் மனம்போலக் குளித்துக்கொண்டு நின்றது. ஓர் ஆட்டம் அசைவு இல்லை!

எனக்கு எல்லாமே பிரமிப்பாயிருந்தது. கோடை வெக்கையிற் காய்ந்துபோயிருந்த மரங்களையெல்லாம் குளிர்விப்பதற்காகவே மழை இப்படி அட்டகாசமாக வந்து பெய்கிறதா! இந்த மரங்களையும் செடிகளையும் புல் பூண்டுகளையும் பட்டினி போடாது செளிப்பாக வைத்திருக்கவே மழை விரும்புகிறது!

மழைதான் இந்த இயற்கையை நிர்வகிக்கும் அரசு!

பாதையோரத்து வடிகால் கான்களில் ஓடிவந்த வெள்ளப்பெருக்கு இந்த நாற்சந்தியில் சுழன்ற டித்து வேறு போக்கிடமில்லாது வீதியெல்லாம் நிரம்பத் தொடங்கியது. வாகனங்கள் வெள்ளத்துள் அமிழ்ந்து சென்றன. சில வாகனங்கள் விக்கித்து நகரமுடியாது நின்றன.

என் மனம் திடுமெனத் துணுக்குற்றது.

ஒரு குழந்தையின் அழுகை போலவே ஒரு சத்தம் இந்த மழையினூடு என் காதுகளில் கேட்கிறது. அது என்னைக் கலவரப்படுத்தியது. இது எனது மனப் பிரமையா அல்லது மரங் களையும் மழையையும் ஊடறுத்து வீசும் காற்றின் ஒலியா என்றும் தெரியவில்லை.

மழை இப்போதைக்கு விடும்பாடாகத் தெரியவில்லை.

எனது நெஞ்சு அடித்துக்கொண்டிருப்பதை எனது ஒவ்வொரு அவயவங்களிலும் உணர்ந்தேன். கவிதா, என் இளம் மனைவி இப்போது கலங்கிப் போயிருப்பாள். இந்த மழையில் நான் நனைந்து வரப்போகிறேனோ அல்லது வந்து சேருவேனோ எனக் குழம்பிப்போயிருப்பாள். பிள்ளையின் வீரிட்ட அழுகைக்குக் காரணம் புரியாது கவலையிலிருப்பாள்.

அந்த நினைவு வந்ததும் நான் மழையில் இறங்கி நடக்கத் தொடங்கினேன். நீண்ட தூரம் நடக்கவேண்டும். பிரதான வீதியிலிருந்து இறங்கி சில முடுக்குப் பாதைகளைக் கடந்து வீடு போய்ச் சேரவேண்டும். குறைந்த வாடகைக்கு வீடு தேடியபோது நகரத்தின் ஓரமான பகுதியிற் தான் வீடு கிடைத்திருந்தது.

நன்றாக இருட்டியிருந்தது. மின்தடையில் வீதி விளக்குகளெல்லாம் அணைந்திருந்தது. நாட்டின் அபிவிருத்திக்கு இன்றியமையாத தொழிற்சாலைகள் பொருளாதார மையங்கள் என எல்லாம் இருண்டுபோய்விடுகிறது. மின்தடை செய்யும் காலநேரம் இன்னும் அதிகரிக்கப் படக்கூடும் என பயம் காட்டுகிறார்கள்! நாட்டை ஆட்சியாள்பவர்களின் தவறான எடுப்புகளாற் தான் நாங்களெல்லாம் இந்த நிலைமைக் குள்ளாகினோம் என நானும் நம்பினேன்.

தட்டுத் தடுமாறி நடந்தேன். வீட்டிலும் லைட் போயிருக்கும். மழை வேகமெடுத்து காற்றுடன் முகத்திலடித்தது. வெள்ளம் கால்களைத் தழுவி விளையாடியது. இது விளையாடும் நேரமல்ல! வெள்ளத்திற்கு உதைகள் போட்டு நடந்தேன். அந்தக் கணமே இது சரியில்லாத வேலை என மனம் துணுக்குற்றது. வெள்ளத்தின் தழுவல்கள் என் மனநிலைமையை இலகுவாக்குவது போன்றிருந்தது. ஆனால் நான் என் கால்களால் அதை உதைத்திருக்கிறேன்! எவ்வளவு பெரிய பாவம்! இந்த அடாத்துச் செய்கையினால் மனைவிக்கோ குழந்தைக்கோ ஏதும் விபரீதம் நிகழ்ந்துவிடக்கூடாது என தலை குனிந்து தண்ணீரைக் கைகளிலெடுத்து வணங்கினேன்.

கால்களை இன்னும் விரைவு படுத்தி நடந்து போய்க்கொண்டிருந்தேன்.

மணமுடித்து மூன்று வருடங்களின் பின்னர்தான் குழந்தை கிடைத்திருந்தாள்.

'ஏன் இன்னும் ஒரு குழந்தையைப் பெற்றெடுக்கவில்லை...? ஏதாவது குடும்பக் கட்டுப்பாடா?' எனத் தன் உறவினர்கள் கேட்பதாகக் கவிதா அப்போதெல்லாம் முறைப்படுவாள்.

நான் அதற்கெல்லாம் பெரிதும் அலட்டிக் கொள்ளாமலிருந்தேன். தனது தாயாரும் அடிக்கடி அதுபற்றி விசாரிப்பதாக கவிதா என்மேல் குறைப்பட்டுக்கொண்டிருந்தாள். ஏதோ நான் என் கையில் வைத்திருக்கும் குழந்தைப் பாக்கியத்தைக் கொடுக்காமலிருப்பதுபோல அவளது முறைப்பாடுகளைத் தாக்காட்ட வேண்டியிருந்தது. அம்மாக்கள் கூறுகிற சில நாட்டு வைத்தியங்களையும் கவிதா கடைப்பிடித்தாள். ஆனால் ஒவ்வொருமுறை எதிர்பார்ப்பின் பின்னரும் கவிதாவின் விசும்பல்களை எதிர்கொள்ளவேண்டியிருந்தது.

எங்களது ஏக்கங்கள் எதிர்பார்ப்பு எல்லாம் ஒரு கட்டத்தில் சரிப்பட்டு வந்தது. எங்கள் ஆசைக் கனவுகளின் மனோசக்தி வேலை செய்திருக்கிறது.

ஒருமுறை பஸ்ஸிற் பயணித்து வந்தபோது 'தாய் பேண் நிலையம்' என ஓர் அடையாளப் பலகை கண்களிற் பட்டது. கவிதாவை அழைத்துப் போனேன்.

ஆதரவான லேடி டொக்டரின் ஆலோசனை களும் சிகிச்சை முறைகளும் கைகூடி வந்தன. கவிதா பூரிப்புடன் மலர்ந்தாள். அந்தச் சங்கதியை கவிதா கூறியதும் என்னைப் பிடிக்கமுடியவில்லை. எனக்குள் துள்ளிக் குதித்து ஆடினேன். அவளது கன்னத்தில் முத்தமிடுவதா வயிற்றில் முத்தமிடுவதா என துருதுருப்பு ஏற்பட்டது. நாளாக ஆக, அவளது உடல்நிலை மாற்றங்களைக் காண எனக்கு சந்தோசமா கவலையா என்றுகூடப் புரியவில்லை. வயிற்றில் வளரும் குழந்தையின் அசைவுகளையும் சுமையையும் கவிதா எப்படித் தாங்கிக்கொள்வாள் என்பதுதான் என் கவலை. மற்றப்படி என்னுள் ஓர் உற்சாகம் ஏற்பட்டிருந்தது. குழந்தை வந்து பிறப்பதற்கு முன்னரே என்னை ஒருவித பரவசம் ஆட்கொண்டிருந்தது. மனைவியை எப்படிப் பராமரிக்கலாம் குழந்தை யின் ஆரோக்கியமான வளர்ச்சிக்காக என்ன மாதிரியான உணவு வகைகளைக் கொடுக் கலாம் என்றெல்லாம் சிந்தனைகள். ஏற்கனவே டொக்ரர் இவற்றைப்பற்றிய விளக்கங்களைத் தந்திருந்தாலும் எனது கற்பனைகள்... ஆசைகள் அல்லது கரிசனை டொக்டரின் விதந்து ரைப்பிற்கும் மேலாக ஓடிக்கொண்டிருந்தது.

என் மனைவிக்கு எல்லாமுமாகியிருந்த நான் இன்னும் எல்லாமுமாகினேன்.

கரு தங்கும்வரை சில மாதங்களுக்கு அவள் ஓய்வெடுக்கவேண்டுமென டொக்ரர் கூறியிருந்தார். அவள் எழுவதற்கும் நடப்பதற்கும் உதவியாக அணைத்தெடுத்து நோகவிடாமற் தாங்கினேன். மாதமாக ஆக அவளது கால்களில் சற்று வீக்கமெடுத்தது. 'பெரிதாக ஒன்றும் அலட்டிக்கொள்ளவேண்டாம்... அமர்ந் திருக்கும்போது இன்னொரு கதிரையில் கால்களை உயர்த்தி வைத்து அமர்ந்திருங்கள்...' என டொக்ரர் ஆலோசனை தந்தார். ஆனாலும் நான் அலட்டிக்கொண்டேன்.

அவளுக்கு வாய்க்கு இதமான சமையல் செய்து கொடுக்கவேண்டுமே என்ற ஏக்கம் என்னுள் இருந்தது. தனியறை வாசியாக இருந்த காலங்களில் சமையற் கலையில் பெற்ற ஓரளவு முன் அனுபவம் கை கொடுத்தது. இப்போது இன்னும் சில சோதனை முயற்சிகளாக விதவிதமான உணவு வகைகளைத் தயார் செய்தேன். சமையல் மணம் வந்தாலே அவளுக்கு ஓங்காளம் எடுக்கிறதாம். எனது சமையல் எனக்கே ஓங்காளம் எடுப்பது என்பது வேறு விடயம்! ஆனால் இதையெல்லாம் கவிதா சமாளித்துக்கொண்டாள் என்றுதான் சொல்லவேண்டும்.

'எப்படி சமையல்...?' என்று கேட்டால், 'நல்லாயிருக்கு...!' என அவளிடமிருந்து பதில் வரும்.

என் மனம் நோகக்கூடாது என்று அப்படிச் சொல்கிறாளா அல்லது வயிற்றுப் பசிக்காக எதையாவது கொடுப்பதை சாப்பிட்டு அஜஸ்ட் பண்ணிக்கொள்கிறாளா என்று தோன்றும். எப்படியோ நான் இந்தக் கைங்கரியத்தை சமாளித்துக்கொண்டிருந்தேன்.

'புளியங்காய் சாப்பிட விருப்பமாயிருக்கு... எங்காவது எடுத்து வருவீங்களா...?' என ஒருநாள் கவிதா கேட்டபோது அதை எங்கே போய்த் தேடலாம் என யோசனையாயிருந்தது. அவள் இப்படி எதையாவது ஒருபோதும் ஆசைப்பட்டுக் கேட்பதில்லை. சேலை, சட்டை, நகைநட்டு என்று 'இது வேணும் அது வேணும்...' என எந்த வேண்டுகோளும் ஒருபோதும் வைத்த தில்லை. கர்ப்பமாயிருக்கும் என் மனைவி புளிப்பு சுவைக்கு ஆசைப்படுகிறாள். இந்தக் கொழும்பு மாநகரில் புளியங்காயை எங்கு போய்த் தேடுவேன்?

வழக்கமாகச் சென்றுவரும் இடங்களி லெல்லாம் எங்காவது புளியமரங்களைக் கண்டிருக்கிறேனா என எனது ஞாபக சக்தியைத் தட்டிவிட்டுப் பார்த்தேன். எனது தொழிலக நண்பர்களிடம் இதுபற்றி விசாரித்தேன். அவர்களுக்கும் பிடிபடவில்லை. அதன் சிங்களப் பெயர் எனக்குத் தெரிந்திருக்கவில்லை. எனவே ஒரு தாளில் புளியங்காயை படமாக வரைந்து காட்டினேன்.

'ஓ... அதுவா!' என ஒரு நண்பன் அந்தக் கணமே மார்க்கட்டிற்குப் போய் ஒரு கிலோ கத்தரிக்காயை வாங்கி வந்தான். அவனைக் குறை சொல்ல முடியாது... ஓவியக் கலையில் எனது வல்லமை அந்த அளவிற்குத்தானிருந்தது!

கவிதா புளியங்காய் சமாச்சாரத்தை மறந்து விடுவாள் என்றுதான் நினைத்திருந்தேன். ஆனால் இரண்டொரு நாட்களில் மீண்டும் புளியமரத்தைத் தேடிப் போகவேண்டியிருந்தது. நானும் எனது நண்பனுமாகச் சேர்ந்து ஒரு திட்டம் தீட்டினோம். ஆட்டோ ஒன்றை ஒழுங்கு செய்து அதில் நானும் நண்பனுமாக கொழும்பு நகர்ப்புறத்தைத் தாண்டி சில வீதிகளில் போவோமாம். புளியமரத்தைக் கண்டதும் நான், 'நில்லு.. நில்லு!' என்று கத்துவேனாம். பிறகென்ன? புளியங்காய் சமாச்சாரத்துக்கு தீர்வு கிட்டியமாதிரித்தான்.

மட்டக்குளிப் பக்கம் கடந்து கரையோரப் பாதையில் ஓடிக்கொண்டிருந்தபோது சில புளியமரங்கள் தென்பட்டன. ஆனால் அவற்றில் பூவும் இல்லை… புளியங்காயும் இல்லை. நான் சோர்ந்துபோனேன். ஆனால் ஆட்டோக்காரன் இப்போது தெம்பாகியிருந்தான். ஒன்றுக்கும் கவலைப்படவேண்டாம்… என 'யாமிருக்கப் பயமேன்' என்ற ஸ்டைலில் அபயம் அளித்துக்கொண்டு இன்னும் சில வீதிகளைச் சுற்றிவந்தான். அவன் சொன்னது சரி. புளியங்காய் கிடைத்தது. அத்தோடு அவனது ரேட்டும் நாலு புளியங்காய்களுக்கு நானூற்றுச்சொச்சத்துக்கும் மேல் என்ற கணக்கில் மரத்திலேறி பத்துப் பன்னிரண்டு புளியங்காய்களை பிடுங்கி வந்தான். என்ன இது? நாட்டின் பணவீக்கம் புளியங்காய் விடயத்திலும் ஏறிவிட்டதா என்று தோன்றியது!

கரு உண்டாகியிருக்கும் காலத்தில் மனைவி வயிற்றுக் குமட்டல் ஓங்காளம் போன்ற பக்கவிளைவுகளுக்கு ஆட்படுவாள்… அதற்கு உவப்பாக விதம் விதமான உணவு வகைகளை விரும்புவாள் என எனக்குத் தெரிந்திருக்கவில்லை.

பக்கத்து வீட்டு ஜயசிங்காவின் மனைவி ஒருநாள் வீட்டு வாசலில் வந்து நின்று திறந்திருந்த கதவைத் தட்டினார். கவிதா எழுந்து போனாள். அறையுள்ளிருந்து நான் அவதானித்துக்கொண்டிருந்தேன்.

'உங்க மஹத்தயா இருக்கிறாரா…?' என தயக்கத்துடன் கேட்டார்.

'ஏன்… சொல்லுங்க…!'

'மகள்… நாங்க எப்பவும் உங்கள பார்க்கிறது… நீங்க எனது மகளைப்போல…! சிசு உண்டாகியிருக்கிற இந்த நேரத்தில வாய்க்கு ருசியான சாப்பாடு வேணும்தானே? என்ன செய்றீங்களோ என்று நாங்க கவலைப்படுறது… இந்த சாப்பாடு உங்களுக்காக ஆக்கிக் கொண்டுவந்தது… உங்க மஹத்தயா இருந்தால் ஏசுவாங்களோ என்று பயம்…!'

'இல்ல அவர் ஏசமாட்டார்… உள்ள வாங்க அன்டி…! மிச்ச சந்தோசம்…!' கவிதா அவரிட மிருந்து அதைப் பெற்றுக்கொண்டு வந்தாள்.

இந்த உரையாடல்கள் சிங்கள மொழியிற் தான் நிகழ்ந்தது. மனைவி சரளமாக சிங்கள மொழி பேசுவாள். நானும் கேட்டுக் கொண்டிருந்தேன். எனக்கு ஓரளவு புரிந்து கொள்ளக்கூடியதாயிருக்கும்.

'உங்களுக்கு மனுசரோடு பேசத் தெரியாது… பாருங்க…!' என எனக்கு மனைவியிடமிருந்து ஒரு டோசும் விழுந்தது.

ஜயசிங்காவுடன் எனக்கு ஏற்கனவே ஒரு முறுகல் ஏற்பட்டிருந்தது. யாரோ குப்பைக் கழிவுகளை அவரது வீட்டிற்கு முன்னே கொட்டிவிட்டுப் போய்விட்டார்கள். அந்த வேலையை நான்தான் செய்தது என அவர் சண்டைக்கு வந்திருந்தார்.

'இல்லை… நான் அதைச் செய்யவில்லை!' எனக் கூறினேன். 'நீங்க பொய் சொல்றீங்க…!' என சத்தம் போட்டார்.

என்னை நோக்கி அந்த 'பொய்..!' என்ற வார்த்தையைக் கூறியதும் எனக்கு உச்சத்தில் ஏறிவிட்டது. அவரை உண்டு இல்லை என ஏசித் தள்ளிவிட்டேன்.

பாஷை ஒரு பெரிய பிரச்சினை!

எனக்குத் தெரிந்த அரை குறை சிங்கள மொழி பரிச்சயத்தில் அவரை ஏதாவது ஏறுக்கு மாறாக ஏசிவிட்டேனோ என்றும் தெரியவில்லை. அதன் பின்னர் அவர்களோடு எங்களுக்கு எந்தவித கொடுக்கல் வாங்கல்களும் இல்லை. முகப் பார்ப்பும் இருக்கவில்லை. முன்னுக்குப் பின் காண நேர்ந்தால் முகங்களை அந்தப் பக்கமும் இந்தப் பக்கமுமாகத் திருப்பிக்கொண்டு போய்விடுவோம்.

ஜயசிங்க நோனாவின் தயக்கத்திற்கு அதுதான் காரணம்.

ஒரு தாயின் பரிவுடன் அவரது செய்கை என்னையும் நெகிழ்த்தியிருந்தாலும் தொடர்ந்து நாங்களும் பேசவில்லை. அவர்கள் வந்து போவதுமில்லை. 'அந்த தமிழ் ஆள் பொல்லாத மனுசன்…' என என்னைப்பற்றி ஜயசிங்க

மனைவியை எச்சரிக்கை செய்திருக்கக்கூடும் என்றே நினைத்தேன்.

மழை அடித்து ஓயவில்லை. தோய்ந்து வடிந்து நடந்துகொண்டிருந்தேன்.

பிள்ளைப்பேற்றுக்காக டொக்ரர் குறிப்பிட்ட திகதி கடந்த பின்னரும் கவிதாவிடம் எந்த அசுமாத்தமும் தென்படவில்லை. கவிதா பயப்படத் தொடங்கியிருந்தாள். டொக்ரரிடம் அழைத்துப் போனேன். பொது வைத்தியசாலையில் இலக்கத் துண்டு எடுத்து காத்து நின்று அவரைக் காண்பதற்கு நீண்ட நேரமெடுத்தது.

'இது முதற் பிரசவம்தானே... அதனாற்தான் பயம் ஏற்படுகிறது... உங்களுக்குத் துணையாக அன்பான கணவன் இருக்கிறார்... பிறகு ஏன் பயப்படுறீங்க...!' என கவிதாவை ஆறுதற் படுத்தினார். ஆனால் அன்பான கணவனான நான் பயப்பட்டேன். மனதில் பிரார்த்தனைகள் செய்தேன். பொதுவாக பிரார்த்தனை செய்வது என்பது பற்றியெல்லாம் நான் பெரிதுபடுத்துவதில்லை. இப்போது பெரிதுபடுத்தினேன்.

நாட்கள் இன்னும் சில கடந்தன. திரும்பவும் வைத்தியசாலைக்குப் போனோம். அடுத்த நாளே அட்மிட் ஆகுமாறு டொக்ரர் கூறினார்.

'தேவைப்படின் சிசேரியன் செய்து குழந்தையை எடுக்கலாம்... பயப்பட ஒன்றுமில்லை...'

எனினும் நான் மனம் குழம்பினேன். சிசேரியன் என்றால் கவிதாவின் வயிற்றைக் கிழித்து குழந்தையை எடுக்கப்போகிறார்களா? வயிற்றை வெட்டிக் கிழிப்பதென்பது சாதாரண விடயமா? அதை, அந்த வலியை கவிதா தாங்கிக்கொள்வாளா? அதன் பின் காயப்பட்ட அவளது வயிறு சரியாகிச் சுகம் பெற எவ்வளவு நாட்களாகும்?

டொக்ரர் குறிப்பிட்ட நாளில் மாலை நேரம் தேசிய வைத்தியசாலையில் கவிதாவை அட்மிட் ஆக்கினேன். கூட நிற்பதற்குக்கூட எனக்கு அனுமதி இல்லை. வைத்தியசாலைக்கு வெளியே அலை மோதும் மனச் சஞ்சலங்களுடன் காத்திருந்தேன். இரவு நேரம் கடந்து கொண்டிருந்தது. மனது கடவுளை வேண்டிக் கொண்டிருந்தது. ஒரு தருணத்தில் தாதி வந்து அழைத்தார்.

'உங்கள் மனைவியைப் போய்ப் பார்க்கலாம்... அவர் உங்களை வரச் சொல்கிறார்...'

கவிதாவுக்கு அண்மையிற் போனேன். அவளது நெற்றியைத் தடவியவாறு, 'என்னம்மா...?' என்று கேட்டேன்.

அவள் தன் வயிற்றைத் தொட்டுக் காட்டினாள்... 'நோகுது...!'

எனக்குள் பரபரப்பு ஏற்பட்டது. இது பிரசவ வலி என ஊகித்தாலும், ஒருவித சந்தோசமோ கவலையோ மனதில் ஆர்ப்பரித்தது. கவிதாவின் வயிற்றைத் தடவிக் கொடுத்தேன்.

'அம்ம்மா...!'

மணமுடித்து மூன்று வருடங்களாகியும் நாங்கள் இன்னும் பெற்றோரைப் பார்க்க ஊருக்குச் செல்லவில்லை.

'அம்ம்மா...!'

கவிதாவின் முனகல்கள் பிரசவ வலி காரணமாக இயல்பாகவே வெளிப்படுகிறதா அல்லது அவள் இந்த வேளையில் தனது அம்மாவின் அரவணைப்பைத் தேடுகிறாளா எனக் கவலையாயிருந்தது. கவிதாவை அவளது பெற்றோரிடம் அழைத்துச் செல்லாத குறை மனதை உறுத்தியது. எப்போதும் கையைக் கடித்துக்கொண்டிருக்கும் நிதி நிலைமையும் நாட்டு நெருக்கடி நிலைமைகளும் இதையெல்லாம் சாத்தியப்படுத்தவில்லை.

'அம்ம்மா...!'

அவளது நோவு தணிந்த பாடில்லை. வெளியே ஓடி தாதியிடம் கூறினேன். அவர் வந்து பார்த்து, கவிதாவிடம் பேசினார்.

'பிரசவ வலி இப்போதுதான் தொடங்கியிருக்கு... நேரமாகும்...'

அந்த நேரம் எப்போது ஆகும் என நான் விழித்துக்கொண்டு நின்றேன்.

'காலையில் வந்து பாருங்கள்... ஏதாவது தேவைப்பட்டால் அழைக்கிறோம்... இப்போது நீங்கள் போகலாம், நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்.!' என்பது போன்ற ஒரு பதிலைக் கூறிவிட்டு அவர் போனார்.

இரவு முழுதும் நான் கண் துஞ்சாது வைத்தியசாலைக்கு வெளியே வீதியிற் காத்திருந்தேன். அடியொரு தடைவை விசாரணைப் பீடத்திற்குச் சென்று விசாரித்தேன். காலையில் உள் வர அனுமதி தந்தார்கள். தாதிமார் கவிதாவை ஆயத்தங்கள் செய்து பிரசவ அறைக்கு அழைத்துச் செல்வதற்கு முன் கணவனாகிய எனக்கு அப்படி ஒரு சலுகை கிடைத்தது. ஒரு பெண்ணிற்குக் கணவனாயிருப்பது எவ்வளவு கௌரவமான விடயம் என மனம் பூரித்தது.

டொக்ரர் பிரசவ அறையிலிருந்து வந்தபோது, 'சில சமயம் இரத்தம் தேவைப்படலாம்... பி ப்ளஸ்... இங்கு கையிருப்பில் இல்லை... ஒழுங்கு செய்து வைத்திருங்கள்..!' எனக் கூறியதும் உசாரடைந்தேன். வேறு யாரோ ஒருவருடைய இரத்தத்தை என் மனைவியின் உடலுட் செலுத்துவதை மனது மறுத்தது.

ஒருமுறை நான் இரத்த தானம் செய்தபோது, எனது இரத்தம் பி ப்ளஸ் என சான்றிதழ் தந்தது நினைவில் வந்தது. 'டொக்ரர்... எனது இரத்தமும் பி ப்ளஸ்...' என்றேன்.

ஒரு புன்முறுவலுடன், 'நல்லது...!' என்றார்.

நான் வெளியே நின்று குழந்தை பிறக்கப் போகும் தருணத்தை எதிர்பார்த்திருந்தேன். குழந்தை பிறந்ததும் அழுகைக் குரல் கேட்கும். பிரசவ அறையை அண்மித்து காது கொடுத்துக்கொண்டிருந்தேன். குழந்தை எந்த விக்கினமும் இல்லாது பிறந்திடவேண்டும்... அங்க அவயவங்களில் ஏதும் குறைபாடின்றிப் பிறக்கவேண்டும் என காரணமற்ற மனத் தவிப்பு டனும் பிரார்த்தனையுடனும் நேரம் கடந்து கொண்டிருந்தது.

குழந்தையின் அழுகைக் குரல் கேட்ட அதே நேரத்தில் கோடை மழையின் முதற் துளிகள் விழத் தொடங்கியிருந்தது.

பின்னர் வருவதும் போவதுமாக மகளின் அழுகைச் சத்தம் கேட்கும்போதெல்லாம் மழை வந்து போய்க்கொண்டிருந்தது. இவ்வாறு இந்த உலகத்தில் ஒவ்வோர் உயிர்களின் பிறப்பாக் கத்துடன் இயற்கையின் உயிர்ப்பும் கலந்துள் ளதா?

வீட்டை நெருங்கி வந்தபோது, தேவையான சாமான் சக்கட்டுக்களையும் இன்று வாங்க முடியாமற் போய்விட்டதே என மனம் கலவர மடைந்தது. அதற்கு இன்னொரு காரணமும் இருந்தது... பணம்! கைச் செலவுக்கு ஏதும் கையிலிருக்கவேண்டுமே? பண்டார மஹத்தயாவின் கடையைத்தான் தஞ்சமென எண்ணி வந்திருந்தேன். கடை பூட்டப்பட்டிருந்தது. மழை அவரையும் விரட்டியடித்திருக்கிறது!

இரவுச் சமையலுக்கு ஏதாவது வீட்டி லிருக்குமா என்ற எண்ணம் ஓடியது. உருளைக் கிழங்கு, சில தக்காளிப்பழங்கள் அது இது என சில சரக்குச் சாமான்களை மிச்சம் பிடித்து வைத்திருந்தேன். முதல்நாள் மீதிப்பட்ட பாண் துண்டுகளும் இருந்தது... ஒருவாறு சமாளித்துக் கொள்ளலாம் என்று தோன்றியது.

என் நெஞ்சு நிறைந்த மகளின் நினைவுகள் இவ்வாறான கையாலாகாத கவலைகளையும் மழையின் அகோரத்தையும் துச்சமாக்கின. வீட்டுக்குப் போய் பிள்ளையின் தரிசனம் கிடைத்துவிட்டால் வேறு எந்தக் கவலைகளும் எனக்குத் தோன்றாமற் போய்விடும்.

வீடு சற்று தாள்நிலப் பகுதியில் அமைந் திருந்தது. தூரத்து வெள்ளமெல்லாம் இங்கு வந்து சேர்ந்துகொண்டிருந்தது. ஒரு சிறிய மழைக்கே வெள்ளம் கட்டும் பகுதி இது! கொஞ்சம் கொஞ்சமாக சில நாட்கள் பெய்துகொண்டிருந்த மழை இப்போது இப்படி அடித்துக் கொட்டுகிறதே! வீட்டுக்குள்ளேயே வெள்ளம் புகுந்துவிடுமோ என்ற பயத்துடன்தான் வீட்டை அடைந்தேன்.

மனைவிக்கான இரவுச் சாப்பாட்டை தயார் செய்வதற்கு என்ன செய்யலாம் எனும் யோசனையுடன் வெளிப்பக்கமும் மழை ஓய்கிறதா என நோட்டமிட்டுக்கொண்டிருந்தேன்.

மழையின் வேகத்தை விட வெள்ளப் பெருக்கின் வேகம் அதிகமாயிருந்தது. ஒதுக்கிடம் தேடும் ஒரு சர்ப்பத்தைப் போல வாசற் கதவின் கீழ் இடுக்கினூடு வெள்ளம் தன் நாக்குகளைச் செலுத்தி வேவு பார்த்தது. பார்த்துக்கொண்டிருக்கும்போதே சட்டென வீட்டிற்குள் புகுந்து ஓடி வந்தது. உள்ள வேலைகளையெல்லாம் விட்டு, உடுதுணிகளை யும் ஏனைய பொருட்களையும் எடுத்து மேசையின் மேலும் கபேர்ட்டின் மேலும் வைத்தேன்.

மனைவி பசித்திருப்பாள் என்ற நினைவுடன் ஏதாவது சமையல் செய்ய முனைந்தேன்.

உள் வந்த வெள்ளம் அவளது அறையை எட்டிப் பார்த்தது. கட்டிலின் அடியில் விறு விறு என ஓடியது. அது என் மகளைத்தான் தேடிப் போகிறதோ எனக் கலவரமடைந்தேன். சீக்கிரமாகவே கட்டிலையும் மூடி அமிழ்த்தி விடுமளவிற்கு வெள்ளம் வரக்கூடுமோ எனப் பயந்தேன்.

மனம் தாங்கமுடியாது, 'கடவுளே...!' என்றேன்.

மழை தணிந்தது! பிரார்த்தனை இவ்வளவு சீக்கிரகமாக வேலை செய்யுமா என்று தோன்றியது. அல்லது மனம் தாங்கமுடியாத என் வேண்டுதல் அந்தக் கடவுளுக்கும் மழைக்கும் கேட்டிருக்குமோ?

மழை நின்று போனாலும் வெள்ளம் ஓடி வந்துகொண்டிருந்தது. கவிதாவும் குழந்தையும் படுத்திருந்த கட்டிலின் உயரத்தையும் வெள்ளம் நிரம்பும் வேகத்தையும் கணக்கெடுத்து இன்னும் எவ்வளவு நேரத்தில் இது கட்டிலையும் மூழ்கடிக்கக்கூடுமோ எனத் தவித்துக் கொண்டிருந்தேன். வெள்ளம் கட்டிலின் முனைவரை வந்தது. பின் தயங்கி அதற்கும் மேல் ஏறாமல் நின்றது.

நேரமாகிக் கொண்டிருந்தது. ஆனால் வெள்ளம் அதற்கு மேல் ஒரு இன்ஞ் ஏனும் ஏறாமல் நின்றது.

இந்த வெள்ளம் வழிந்தோட இன்னும் எத்தனை நாட்களாகும்... அதுவரை எப்படிச் சமாளிப்பது என்ற சிந்தனைகளுடன் இரவு எனக்கு நீண்டு கழிந்தது.

காலையில் ஜயசிங்க தன் மனைவியுடன் வந்திருந்தார். வீட்டினுள்ளே வந்து பார்த்தார்கள்.

'குழந்தையுடன் இங்க இருப்பது கரைச்சல் தானே...? எனது மகன்ட வீட்டுப்பக்கம் வெள்ளம் இல்ல... நீங்க அங்க போய் இருங்க..! அவர் தன்ட நோனா வீட்டில போய் தங்குவார். வெள்ளம் வற்றியதும் திரும்ப வரலாம்தானே..!'

அவர் முன்னே வாய்ப்பேச்சற்று நின்றேன். நன்றிப் பெருக்கில் அவரைக் கையெடுத்துக் கும்பிடும் உள்ளுணர்வு ஏற்பட்டது. சிங்களவர்கள் தமிழர்கள் என இன வாதம் பேசி இந்த நாட்டு மக்களையெல்லாம் குழப்பிவிட்டிருக்கும் அரசியல்மீது எரிச்சல் ஏற்பட்டது.

ஒரு சிறிய ட்றக் ரக வாகனத்தைத் தள்ளிக் கொண்டுவந்தார்கள். வெள்ளம் இடுப்பளவுக்கும் மேல் உயர்ந்திருந்தமையால் என்ஜினை இயக்கமுடியவில்லை. ஜயசிங்க அயலவர்களின் உதவியுடன் இந்த ஒழுங்குகளைச் செய்திருந்தார். என் மனைவியை ஒரு கதிரையில் உட்கார வைத்து அப்படியே தூக்கிவந்து வாகனத்தின் பின் பெட்டியில் அமர்த்தினார்கள். வாகனத்தைச் சிலர் தள்ளிக்கொண்டு போக, நான் அதன் பின்னே மகளைத் தூக்கி அணைத்துக்கொண்டு நடந்தேன்.

மழைத்துளிகள் பிள்ளையின் மேல் விழாது ஜயசிங்க எங்களுக்குக் குடை பிடித்து வந்தார். இன்னொருவர் வாகனத்தில் கவிதாவுக்குக் குடை பிடித்து நின்றார்.

பிரதான வீதிக்கு வந்ததும் ஜயசிங்கவின் மகன் இன்னொரு காரில் காத்து நின்று எங்களை அழைத்துச் சென்றார். புதிய இடத்தில் அஜஸ்ட் செய்து சமாளித்தோம். இரவானதும் சலிப்புணர்வு இன்னும் அதிகரித்தது. இப்படியெல்லாம் அலைக்கழியவேண்டி வந்ததே என மனம் சோர்வடைந்தது.

மனைவி அறையினுள் குழந்தையுடன் தூங்கிக் கொண்டிருந்தாள்.

பின்னிரவு தாண்டிய வேளை. வெளியே சோ.ஃ.பாவில் அமர்ந்திருந்த நானும் அப்படியே அயர்ந்து தூங்கிவிட்டேன் போலிருக்கிறது. பிள்ளையின் அழுகைச் சத்தம் கேட்டது. வீரிட்ட அழுகை. சட்டென எழுந்து அறைக்குள் ஓடினேன்.

'ஏன் பிள்ளை அழுகிறாள்...?'

மனைவியிடமிருந்து பதிலில்லை.

மழைக் குளிரில் பிள்ளைக்கு சொகுசாக உறங்கமுடியவில்லையோ என்று தோன்றியது. வயிற்றுக் குழப்பமாயிருக்குமா... அல்லது பிள்ளைக்குப் பசிக்கிறதா...?

'பிள்ளைக்குப் பால் குடுத்தீங்களா கவிதா?'

'ஆனமான சாப்பாடு சாப்பிட்டாற்தானே பால் சுரக்கும்? உமிஞ்சு உமிஞ்சு பாத்திட்டு தள்ளிவிட்டிட்டு அழுகிறாள்!'

என்னுள் ஒரு குண்டு வெடித்து நான் சிதறிப்போவதை உணர்ந்தேன். இது எனது கையாலாகாத்தனமா அல்லது நாட்டை அரசாட்சி செய்யும் அரசாங்கத்தின் கையாலாகாத்தனமா என்றும் புரியவில்லை!

பிள்ளையைத் தூக்கியெடுத்து நெஞ்சுடன் அணைத்துக்கொண்டேன். ஓராட்டியபடி அங்குமிங்குமென நடந்தேன். எனது அணைப்பின் சுகத்தில் பிள்ளை ஆழ்ந்து உறங்கினாள். பெரியவர்களைப்போலவே இந்தக் குழந்தையும் பசியை அஜஸ்ட் செய்து தாங்கிக்கொள்கிறாளா?

அவளது கை என் விரலைப் பற்றிக் கொண்டிருந்தது. அது எதேச்சையாக நிகழ்ந்ததா அல்லது அவள் என்னை உணர்ந்துகொண்டு கையைப் பற்றிக்கொண்டாளா என்று தெரியவில்லை.

அந்தக் கணத்தில் என் கண்களில் உகுத்து வரும் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியவில்லை. குழந்தை பிறந்து பன்னிரண்டாவது நாளான இந்த இரவில் என்னுள் அவளுக்காகக் காரணம் புரியாத அல்லது காரணம் புரிந்த அழுகை கிளர்ந்துகொண்டிருந்தது.

❍❍❍

# யாழ் நூலின் தோற்றம்



செங்கதிரோன்
த.கோபாலகிருஸ்ணன்

சுவாமி விபுலானந்த அடிகளாரைப் பற்றிய வாசிப்பு அனுபவங்களினூடாகப் பயணிக்கும் போது யாழ்நூலின் தோற்றத்திற்கு அடிகோலிய இரண்டு காரணிகளை எம்மால் உணர்ந்து கொள்ள முடியும். ஒன்று 'சிலப்பதிகாரம்' மீது அடிகளாருக்கு இருந்த அதீதபற்று. மற்றது மட்டக்களப்பு வாவியின் 'பாடும்மீன்' இசையில் அடிகளார் தன் மனதைப் பறிகொடுத்தமை.

கிழக்கிலங்கையில் அடிகளார் பிறந்த பூமியான காரைதீவுக் கிராமத்தில் அமைந்துள்ள 'கண்ணகை அம்மன் ஆலயம்' பிரசித்தமானது. இளமைப்பருவத்தில் தன் தாயாரான கண்ணம்மை யுடன் இவ்வாலயத்திற்குச் சென்று வழிபட்டதோடு வருடாவருடம் நடைபெறும் திருவிழாவிலே - கண்ணகை அம்மன் குளுர்த்திச் சடங்கிலே பாடப்பெறும் 'கண்ணகிவழக்குரைக் காதை'ப் பாடல்களில் தோய்ந்தார். மட்டுமல்லாமல் திருவிழாக்காலங்களிலே நிகழ்த்தப்பெறும் சிலப்பதிகாரச் சொற்பொழிவுகளையும் மாந்தி மகிழ்ந்தார்.

சிலப்பதிகார ஓலைச்சுவடியைத் தேடி எடுத்து அதனை உ.வே.சாமிநாதஐயர் அச்சில் பதிப்பித்த 1892ஆம் ஆண்டிலேயே அடிகளார் பிறந்தார். அடிகளாரின் தந்தையின் பெயர் சாமித்தம்பி. தாயின் பெயர் கண்ணம்மை. பெயர்ப் பொருத்தங்களும் பொருந்துமாறு அமைந்த மையும் கவனத்தைப் பெறுகிறது. இந்தப் பின்புலத்தில் இளமைப் பராயத்திலிருந்தே அடிகளாருக்குச் சிலப்பதிகாரத்தின்மீது அதீத பற்று ஏற்பட்டிருந்தது. (யாழ்நூல் அரங்கேற்றத்தின்போது கைலாயபிள்ளை எனும் அறிஞரிடம் சிலப்பதிகாரம் பயின்றபோது தமக்கு யாழில் மனம் சென்றதாக அடிகளார் கூறியுள்ளார்) பின்பு மதுரைத்தமிழ்ச்சங்கப் பண்டித பட்டமும், விஞ்ஞானத்தில் பி.எஸ்.சி.பட்டமும் பெற்றபோது அடிகளாரின் அறிவுப் புலம் ஆழமும் அகலமும் பெற்றது.

அடிகளார் சிலப்பதிகாரத்தைக் கற்று ஆய்ந்து அதில் தோய்ந்தபோது சிலப்பதி காரத்தில் இசைநுட்பம் செறிந்த பகுதிகளுக்குக் குறிப்பாக 'அரங்கேற்றுகாதை'ப் பகுதிக்கு முழுமையான உரை இருக்கவில்லை என்பதை உணர்ந்தார். இசை நுட்பங் களைக் கூறும் பண்டைக் காலத்தில் இருந்த தாகக் கருதப்படுகின்ற-முதுநாரை, முதுகுருகு, பஞ்சமரபு, பஞ்சபாரதீயம், பதினாறுபடலம், இந்திரகாளியம், வாய்ப்பியம் முதலிய இசைத்தமிழ்நூல்கள் மறைந்து போயிருந்தன. சிலப்பதிகார உரையாசிரியர்களின் காலத்தில் வழக்கிலிருந்ததாக அறியப்படுகின்ற 'இசை நுணுக்கம்' எனும் நூலும் பின்னாளில் இல்லாமற் போய்விட்டது. இந்நூல்களின் துணைகொண்டு அடியார்க்கு நல்லார் எழுதிய இசைநுட்பங்களை விளக்கும் உரைப்பகுதிகளும் கிடைத்தில. இந்தப் பின்புலத்தில்தான் சிலப்பதி காரத்தில் அரங்கேற்றுகாதையில் இளங்கோ வடிகளால் இசைநுட்பம் தெரிந்தவனாகக் கருதப்படும் யாழாசிரியன் கூறும் பாடல் வரிகளுக்கு உரையெழுத சுவாமி விபுலானந்த அடிகளார் துணிந்தார்.

அடிகளாருக்கு இயல்பாகவே இசைத்தமிழ் மீது ஈடுபாடு இருந்தது. இதனை அவர் 1942ஆம் ஆண்டு ஆகஸ்ட் 01ஆம் திகதி மதுரையில் நடைபெற்ற முத்தமிழ் மாநாட்டில் இயற்றமிழ் அரங்கிற்குத் தலைமைத்தாங்கிய போது 'இயல் இசை நாடகம்' எனும் பொருளில், நிகழ்த்திய தலைமையுரையிலிருந்து தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். அந்த உரையின் இசைத் தமிழ் குறித்த பகுதிகள் வருமாறு.

**"பாரத நாட்டு இசையினை குறித்து ஆங்கிலத்திலே நூலெழுதிய 'பக்ஸ் ஸ்டிராங்கு வேய்ஸ்' என்னும் பேறிஞரும் பிறரும் வட மொழியிசை நூல் களையே குறிப்பிட்டுச் சென்றனர். தமிழராகிய யாம் நமது இசைக் கலையினைக் குறித்து அவர் போன்றோருக்கு அறிவித்திலே மாதலின், சாரங்கதேவர் இயற்றிய சங்கீதரத்திநாகரம் தேவாரத்திற் பொதிந்த தெய்வ இசையினைப் பெருகக் குறிப்பிடுகின்றதென அறிந்திருந்தும் நம்மவருள் ஒரு சாரார் அவ்வுண்மையினை உலகிற்குணர்த்தாது மறைக்க முயல்கின்றனர்"**

**"வடமொழிப்பரதமும் சங்கீதரத்திநாகரமும் சிறந்த முறையிலே தமிழில் மொழி பெயர்க்கப்படுமாயின் அம்மொழிபெயர்ப்பு நூல்கள் தமிழிசையின் மறு மலர்ச்சிக்குப் பெரிதும் உதவுவதென்பது எனது கருத்து"**

**"கழிந்த பத்தாண்டுகளாகப் பழந்தமிழிசை மரபினை யாம் ஆராய்ந்து கொண்டுவருதலை இப்பேரவையானது நன்கறியும். ஆதலினாலே பழந்தமிழிசை மரபு விரைவிலே நூல்களாக வரலாம்"**

அடிகளார் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றிய காலத்தில் (1931 - 1933) அங்குள்ள இசைக்கல்லூரியையும் மேற்பார்வை செய்யும் பொறுப்பினையும் ஏற்றிருந்தார். அப்போது அங்கு இசைக்கல்லூரி ஆசிரியராகவிருந்த இசைப் பேரறிஞர் சங்கீத கலாநிதி. பொன்னையா பிள்ளை அவர்களிடம் கர்நாடக சங்கீதம் என அழைக்கப்பெற்ற இசையின் அமைப்பினைச் சீராக அறிந்துகொண்டு இசைத்தமிழ் ஆராய்ச்சி யில் ஈடுபடத் தொடங்கினார். பண்டைய இசைத் தமிழ் நூல்களெல்லாம் என்றோ மறைந்து போய்விட்ட நிலையில் தனது கணித அறிவினதும் ஒலி பற்றிய விஞ்ஞான அறிவினதும் துணை கொண்டு சிலப்பதிகார அரங்கேற்று காதையில் இசைநுட்பம் பொதிந்த இருபத்தைந்து பாடல் வரிகளுக்கு விளக்கவுரை கண்டார்.

அடிகளார் தனது இசை ஆராய்ச்சியின் போது பல்வகை யாழ் இனங்களையும் வீணை களையும் அடையாளம் கண்டார். முளரி, யாழ் போன்ற யாழினங்களையும் - சுருதிவீணை, பாரிசாத வீணை, சதுர்தண்டி வீணை முதலியவற்றையும் கண்டறிந்து அவற்றை சங்கீதகலாநிதி க.பொன்னையாபிள்ளை அவர்களின் புதல்வன் சங்கீதபூஷணம் சிவானந்தம்பிள்ளை அவர்களின் மூலம் ஒலிக்கவும் செய்தார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் பதவியை 1933இல் துறந்த அடிகளார் 'பிரபுத்தபாரத' எனும் ஆங்கிலச் சஞ்சிகைக்கு ஆசிரியராகப் பொறுப்பேற்பதற்காக இந்தியா வின் வடக்கே இமயமலைச்சாரலில் அமைந்த மாயாவதி எனும் இடத்திற்குச் சென்றார். அங்கு கைலாய தரிசனம் முடிந்தபின் இசைத்துறை ஆராய்ச்சியைத் தொடர்வதற்காக வடக்கிலிருந்து தென்னாட்டிற்கு மீண்டார்.

தென்னாட்டிலிருந்து தமிழ்ப்பணி - ஆன்மீகப் பணி-சமூகப்பணி ஆற்றிக்கொண்டிருந்த காலத்தில் தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச்சங்கத்துடன் நெருங்கிய இணைப்பை ஏற்படுத்தினார்.

1934இல் கரந்தைத் தமிழ்ச்சங்க ஆண்டு விழாவுக்குத் தலைமை தாங்கினார். அடிகளாரின் இசைத்தமிழ் ஆய்வுக்கட்டுரைகள் கரந்தைத் தமிழ்ச்சங்கம் வெளியிட்ட 'தமிழ்ப்பொழில்' எனும் திங்கள் ஏட்டில் வெளிவரத் தொடங்கின. 'செந்தமிழ்', 'விடுதலை' ஆகிய ஏடுகளிலும் இக் கட்டுரைகள் பிரசுரம் கண்டன. சென்னைப் பல்கலைக்கழகம் 1936ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் அடிகளாரை அழைத்து இசைத்தமிழ்பற்றி ஆறுநாட்கள் பேருரை நிகழ்த்த வைத்தது.

அடிகளார் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்குத் தமிழ்த்துறைப் பேராசிரியராகப் பதவியேற்கச் செல்லுமுன்னர், இலங்கையில் இராமகிருஷ்ணமிசன் பாடசாலைகளின் முகாமையாளராகவும் மட்டக்களப்பு கல்லடி, சிவானந்தா வித்தியாலய அதிபராகவும் விளங்கினார். அக்காலத்திலேயே தனது இசைத் தமிழ் ஆராய்ச்சியை ஆரம்பித்தும் இருந்தார். கல்லடி சிவானந்தா வித்தியாலய வளாகத்தில் 'சிவபுரி' எனும் கட்டிடத்தை அமைத்து அதில் தான் தங்கியிருந்து 'யாழ்நூல்' ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தார். இக்காலத்தில் சுவாமி அவர்கள் வீணையொன்றைத் தான் தங்கியிருந்த இடத்தில் வைத்து மீட்டுவதை அவரது மாணவர்கள் பலர் கண்டுள்ளனர்.

இந்தியாவிலிருந்து வந்து அடிகளார் அவர்களுடன் தங்கியிருந்த ஒரு சுவாமியும் அடிகளாரும் ஒருநாள் பூரண நிலவிலே மட்டக்களப்பு வாவியிலே 'பாடும்மீன்' ஓசையைக் கேட்பதற்காகச் சென்றுள்ளனர். மட்டக்களப்பு வாவி கடலொடு கலப்பதால் அங்கு ஒருவகைச் சங்கு வாழ்வதற்குச் சாத்தியமாகிற்று. சங்குகள் முரல்வதானாலே ஏற்படும் ஓசையின் சேர்க்கை இசைத்தன்மை பெற்று யாழின் ஓசையை ஒத்திருப்பது உண்மையே. இதுவே 'பாடும்மீன்' என வர்ணிக்கப்படுகிறது என்பதே விபுலானந்த அடிகள் தந்துள்ள விளக்கமாகும். மட்டுமல்லாமல், இப் 'பாடும்மீன்' களைக் கற்பனயில் பெண்ணாக உருவகித்து அதற்கு 'நீரரமகளிர்' எனப் பெயர்சூட்டி,

**"நீல வானிலே நிலவு வீசவே**
**மாலை வேளையே மலைவு தீருவோம்!**
**சாலநாடியே சலதி நீருளே**
**பாலைபாடியே பலரோடாடுவோம்!**
**நிலவு வீசவே மலைவு தீருவோம்!**
**சலதி நீருளே பலரோடாடுவோம்!"**

என்ற பாடலையும் யாத்தார்.

கற்பனையில் தான் வடித்த நீராமகளிரின் வடிவத்தை தோற்றத்தை,

**"பைம்புனலின் மேற்படர்ந்த பாசி நிகர் கூந்தலார்**
**அம் பொன்னின்மேனி அரையின் கீழ் மீன்வடிவம்**
**செங்கமலம் போற்கரங்கள் திங்கள் முகத்திற்**
**பொங்கிய புன் முறுவல் பூத்தார் புலமையார்"**

எனக் காட்டியுள்ளார். இச் செய்யுள்கள் தஞ்சைக் கரத்தைத்தமிழ்ச்சங்க வெளியீடான 'தமிழ்ப்பொழில்' ஏட்டில் 1940இல் வெளிவந்தது. (யாழ்நூல் சிறப்புப் பாயிரத்திலும் இதனை அடிகளார் மேற்கொள் காட்டியுள்ளார்)

மட்டக்களப்பு வாவியிலே மட்டக்களப்புக் கோட்டைக்கும் (தற்போது கச்சேரி) கல்லடிப் பாலத்திற்கும் இடைப்பட்ட பகுதிதான் 'பாடும்மீன்' இசை கேட்பதற்குப் பொருத்தமான இடம் சித்திரை, வைகாசி, ஆனி மாதங்களில் மட்டக்களப்பு வாவி பூரண நிலவொளியில் இந்தப் 'பாடும்மீன்' ஒலியில் நிறைந்திருக்கும். ஆரவாரங்கள் அடங்கிய நள்ளிரவின் அமைதியான நேரத்தில் இவ்வொலியைக் கேட்கமுடியும். இதனையும் அடிகளாரின் பாடலொன்று எடுத்துக் கூறும். அப்பாடல் இதுதான்.

**"அஞ்சிறைய புள்ளொலியும்**
**ஆன் கன்றின் கழுத்தில்**
**அணிமணியின் இன்னொலியும்**
**அடங்கியபின் நகரார்**
**பஞ்சியைந்த அணை சேருமிடை**
**யாமப் பொழுதிற்**
**பாணொடும் தோணிமிசை**
**படர்ந்தனனோர் புலவன்**
**தேனிலவு மலர்ப் பொழிலிற்**
**சிறை வண்டு துயிலச்**
**செழுந்தரங்கத் தீம்புனலுள்**
**நந்தினங்கள் துயில**
**மீனலவன் செலவின்றி**
**வெண்ணிலவில் துயில**
**விளங்குமட்டு நீர்நிலையில்**
**எழுந்ததொரு நாதம்"**

இற்றைக்குச் சுமார் 5500 ஆண்டுகளுக்கு முன்னர் சிந்து நதிதீரத்தில் வாழ்ந்த ஆதித்திரா விட மக்கள் 'யாழ்' எனும் இசைக்கருவியைப் பயன்படுத்தினர் என்ற அகழ்வாராய்ச்சித் தகவலை உள்வாங்கியே அதுபற்றிய ஆராய்ச்சி யிலும் அத்தகைய யாழின் மீளுருவாக்கத்திலும் அடிகளார் ஈடுபட்டார்.

இலங்கைப் பல்கலைக்கழகத்திற்கு (தற்போது பேராதனைப்பல்கலைக்கழகம்) முதல் தமிழ்ப் பேராசிரியராகக் கடமையேற்பதற்கு இந்தியா விலிருந்து 1941இல் இலங்கைக்கு வந்த அடிகளாருக்குத் தனது ஆராய்ச்சியைத் தொடர் வதற்கும் ஆராய்ச்சி நூலான யாழ் நூலை அச்சிட்டு வெளியிடுவதற்குமான முழுச் செலவையும் பொறுப்பேற்பதற்குத் தமிழ்நாடு புதுக்கோட்டையில் வாழ்ந்த கோனூர் ஜமீன்தார் பெ.ரா.ராமசிதம்பரம் செட்டியார் உதவ முன்வந்தார். இலங்கையில் 'றோசல்ல' எனும் இடத்தில் அமைந்த 'ஊவூட்ரொக்ஸ்' எனும் தனது மாளிகையை அடிகளார் தங்கியிருந்து யாழ்நூல் எழுதுவதற்காக அனுமதித்தார்.

யாழ்நூலின் பகுதிகளை எழுதிமுடித்த அடிகளாருக்கு இறுதியில் ஆயிரம் நரம்பு யாழின் நுட்பங்களை விளக்குவதே மீதியாகவிருந்தது. ஈற்றில் அதனையும் கண்டறிந்து அதனை எழுதிமுடித்தார். யாழ்நூலை எழுதி நிறைவு செய்யும்போது அடிகளாருடன் கூட இருந்தவர் சுவாமி நடராஜானந்தர் ஆவார்.

ஈற்றில் யாழ்நூலை அச்சிடும் பொறுப்பைக் கரந்தைத் தமிழ்ச்சங்கமே ஏற்றது. கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் காரியதரிசியான கந்தசாமி அவர்களின் முகவுரையுடனும் அடிகளாரின் மாணாக்கரும் கரந்தைத் தமிழ்ச்சங்கம் நடாத்தி வந்த கரந்தைப் புலவர் கல்லூரியின் ஆசிரிய ருமான வித்துவான் க.வெள்ளைவாரணன் அவர்களின் சிறப்புப்பாயிரத்துடனும் யாழ்நூல் அச்சாகியது.

1947ஆம் ஆண்டு யூன்மாதம் 5ஆம் 6ஆம் திகதிகளில் அப்போதைய சென்னை மாகாணக் கல்வி மந்திரி டி.எஸ். அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்களின் தலைமையிலே இந்தியாவிலே திருக்கொளம்புதூரில் நாச்சியார் ஆலய முன்றலில் 'யாழ்நூல்' அரங்கேற்றம் கண்டது. அடிகளாரின் ஆராய்ச்சியில் உருவான மூளியாழ், பாரிசாதவீணை, சுருதிவீணை, சதுர்த்தி தண்டிவீணை ஆகிய கருவிகளைத் தாங்கிய தொண்டர்கள் புடைசூழ சங்கீதவித்துவான்கள் கலைஞர்கள் அணிசேர்க்க அடிகளாரையும் யாழ்நூலையும் யானையின் மீதேற்றி ஊர் வலமாக ஆலய முன்றலையடைந்து அங்கே 'யாழ்நூல்' அரங்கேறியது.

சிலப்பதிகாரத்திலும் மட்டக்களப்பு வாவியின் நீராமகளிரின் பாடுமீன் இசையிலேயும் (பாடும்மீன்) மனதைப் பறிகொடுத்த சுவாமி விபுலானந்தர் பண்டைத் தமிழர்களுடைய இசைப் பாரம்பரியத்தில் பாவனையிலிருந்து அழிந்துபோன 'யாழ்' எனும் இசைக் கருவியை 'யாழ்நூல்' மூலம் மீளுருவாக்கம் செய்தார்.

# மலையகம் 200 மகிழ்ச்சியா ? சோகமா?



இணுவையூர் கலாபூஷணம் ஆ. இரகுபதிபாலஸ்ரீதரன்

தென்னிந்தியாவிலிருந்து தமிழர்கள் இலங்கைக்கு, மலையகத்திற்குக் குடிவந்து இருநூறு வருடங்களாகின்றன- இது குறித்துப் பலவேறு கூட்டங்களும் கருத்தரங்கு களும் நடைபெற்று வருகின்றன.

இதுவே ஒரு தமிழ்த் திரைப்படமாக இருந்தால் 200 நாட்கள் தியேட்டர்களில் ஓடி யிருந்தால் பட்டாசு கொழுத்தி, 'கட்டவுட்' வைத்து பாலாபிஷேகம் செய்து கொண்டாடி யிருப்பார்கள். தமிழ்நாட்டில் பல பகுதிகளி லிருந்து அழைத்துவரப்பட்டவர்கள் தான் இந்த மலையகத் தமிழர்கள். மன்னாரிலிருந்து நடைபவனியாகவே மலையகத்துக்கு இழுத்து வரப்பட்டவர்கள். வழியிலே பல்வேறு நோய்களாலும், காய்ச்சலாலும் பீடிக்கப்பட்டு பாதிப்பேர் செத்தொழிய மீதிப்பேர் இருநூ று மைல்கள் நடந்தே வந்து காடு, மேடு வெட்டி மலையகத்தை கோப்பி, தேயிலை நட்டு மலர வைத்தவர்கள்.

முதலில் நாடற்றவர்களாக்கப்பட்டார்கள்.. கடலையே காணாதவர்களை 'கள்ளத் தோணி' என்றார்கள். உழைத்து உழைத்து தேய்ந்தவர்களை 'தோட்டக்காட்டான்' என்றார்கள்.

இரத்தும் குதறும் அட்டையை அலட்சியம் செய்து உடலையும் உயிரையும் பின்னியெடுக்கும் பனியைப்பாராது கொட்டும் மழையைச் சட்டை செய்யாது, கொதிக்கும் வெய்யிலைப் பொருட்படுத்தாது தேசத்தின் வளர்ச்சியே தனது வளர்ச்சி என்று உடம்பு தேய ஊக்கமே பெரிது, அதன் ஆக்கமே எல்லாம் என்று ஓடி ஓடி உழைத்தவனுக்கு சொந்த வீடில்லை.

ஈழம் பொன் கொழிக்கும் பூமியாக வேண்டும், பாரிலுள்ள பாமரரும் படித்தவரும் எமது இலங்கையைப்போற்ற வேண்டும் என்ற பரந்த நோக்குடன் படாதபாடு பட்டவனுக்கு ஒரு துண்டு காணியில்லை!

அவர்களது வியர்வையிலே வளர்ந்த தேயிலைச் செடி ஒவ்வொன்றும் அவர்கள்பட்ட பாட்டை, உழைத்த உழைப்பை நல்லெண்ணத்தைப்பற்றி கதை கதையாகச் சொல்லும். அது கேட்டுக் கருங்கல்லும் உருகுமே! அவர்கள் மட்டுமா ஓடி ஓடி உழைத்து உருக்குலைந்து போனார்கள்? அவர் களது மூதாதையர்கள் கூட உழைத்து உழைத்து ஓடாய்ப் போனவர்களே.! ஒரு மாதிரி கொஞ்சப்பேரை இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பி கொஞ்சப்பேருக்கு வேண்டா வெறுப்பாக இங்கு பிரஜா உரிமை கொடுத்து பிரச்சனையை ஒருவாறு தீர்த்து(?) வைத்தார் கள்.

அந்தக் கொஞ்சப்பேருக்காவது நல்ல வாழ்வு அளித்தார்களா? சொந்த வீடில்லை, ஒரு துண்டு காணி சொந்தமாக இல்லை, நல்ல பாடசாலை இல்லை, பல்கலைக்கழகம் ஒன்றில்லை. இப்படி எத்தனையோ ஏராள மான 'இல்லை'கள்

ஒரு அறை மாத்திரம் கொண்ட 'லயன்' என்ற வசிப்பிடம்

ஆயிரம் ரூபா சம்பளத்திற்கு ஆயிரம் போராட்டங்கள்!

இதைவிடக் கொடுமை என்ன வென்றால் மலையகத் தமிழனுக் கென்று நிரந்தர முகவரி இல்லை. உலகத்தில் எங்குமே இல்லாத கொடுமையிது.! 'மலையகம் 200' நிகழ்வுக்கென்று இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் நிகழ்ச்சி நடத்த ஹட்டன் மாநகருக்கு நிகழ்ச்சிக்குச் செல்லாதது கேவலம், வெட்கக்கேடு!

இந்நிலையில் எதிர்காலத்தில் ' மலையகம் 300' '400' என்று கூட்டங்கள் கருத்தரங்குகள் நடத்தப்போகிறோமா? என்ன செய்யப் போகிறோம்? மொத்தத்தில் 'மலையகம் 200' அறவே மகிழ்ச்சி இல்லை!

சோகம்தான்! சோகம்தான்! சொகம்தான்!

இனியாவது எழுந்து நிற்போம்

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத மலையகம் என்று முழங்குவோம்.



# பாரதியாரெனும் மகாகவி

சமூகமானது தன்னிலை தனை இழக்கையில், அச்சமூகம் தனை உய்யச் செய்திடும் வகையில், மானுட குலத்திற்கே பொதுவானதாய், ஒரு பண்பாட்டுக்கு அடித்தளமாய், எப்போதும் அர்த்தங்கள் முளைத்துக்கொண்டே இருக்கும் ஒரு அந்தரங்க படிமவெளியை உருவாக்கும் படியாக, எக்காலத்திற்கும் உரிய பெரும் படைப்புக்களை படைப்பவனே மகாகவி எனப் படுபவனாவான்.

**'யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்**
**வள்ளுவர் போல் இளங்கோவைப் போல்**
**பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை**
**உண்மை வெறும் புகழ்ச்சியில்லை'**

என பாரதியாரே, தமிழ்நாட்டில் தோன்றிய மாபெரும் புலவர்களான கம்பன், வள்ளுவன், இளங்கோ ஆகிய மூவரையும் சிறப்பித்துப் பாடியிருக்கிறார். "கர்ணனோடு கொடை போயிற்று உயர் கம்ப நாடனுடன் கவிதை போயிற்று" எனும் கூற்று கல்வியிற் பெரிய கம்பனின் கவிதா விலாசத்திற்கான சான்றாகும். வான்புகழ் வள்ளுவனின் சிந்தனை வளத்திற்கு காலத்தை வென்று நிற்கும் அவரின் திருக்குறள் என்ற பொதுமறை கட்டியங் கூறும். இளங்கோ அடிகளின் முத்தமிழ்ப் புலமைக்கு அவர் இயற்றிய முத்தமிழ் காப்பியமான சிலப்பதிகாரம் ஆகச்சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இவ்வரிசையில் "ஓராயிரம் ஆண்டுகள் ஓய்ந்து கிடந்த பின்னர் வாராது போல் வந்த ஒரு மாமணி" என்பதற்கமைய கம்பன், வள்ளுவன், இளங்கோ இவர்களோடு வைத்துப் போற்றக்கூடிய இன்னொரு புலவனும் உண்டாம். அவரே மகாகவி பாரதியார். பழைமைப் புழுதியில் புரண்டு கொண்டும், மகா பண்டிதர்களின் புரியாத கடின தமிழ் நடையில் சொற்களைக் கோத்து, புலவர்களுக்கு மட்டும் பொருள் விளங்கும் செய்யுள்களை இயற்றிக்கொண்டு தமிழறிஞர்கள் வாழ்ந்து கொண்டிருந்த இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழ்நாட்டின் மொழி இருளை நீக்க இப்புவிதனில் பிறந்து முப்பத்தொன்பது அகவை மட்டுமே வாழ்ந்து மறைந்த மகாகவியே இவராவார்.

வேறு யாரிடமும் காணப்படாத கவிதா சக்தியானது தன்னிடம் இருப்பதை உணர்ந்து கொண்டு கவிதை படைத்தவரே பாரதியார். இல்லையெனில்,

**'புவியனைத்தும் போற்றிடுவான் புகழ்படைத்து**
**தமிழ் மொழியை புகழிலேற்றும்**
**கவியரசர் தமிழ்நாட்டுக் கில்லையெனும்**
**வசையென்னாற் கழிந்ததன்றே'**

என மார்த்தட்டி கூறி இருக்க முடியாது. அவ்வகையில் ஆகச்சிறந்த கவிதைகளை பண்டிதனுக்கு மட்டுமன்றி பாமரனுக்கும் கொண்டு சேர்த்திட்ட பெருமை இவரைச் சாரும் என்பதால் மகாகவி என இவரை சிறப்பிப்பதில் தவறேதும் இல்லை எனலாம்.

ஒரு மொழியானது உயிர்ப்போடு சிலிர்த்தெழ வேண்டுமானால் புதுப்புது சொற்கள், புதிய புதிய இலக்கியங்கள், பிற மொழியிலிருந்து பெயர்த்துக் கொணர்ந்த புத்தம்புதிய மொழியாக்கங்கள் இவைகளைக் கொண்டு நாளுக்கு நாள் மொழியின் கட்டமைப்பை இளமைத் துடிப்போடு வைத்திருக்க வேண்டும். அப்பணியை தொடங்கி வைத்த பெருமை மகாகவி எனக் கூறப்படும் பாரதிக்கு உரித்தாகும்.



**கஜனி சிவராஜா**
தமிழ்த்துறை மாணவி
பேராதனைப் பல்கலைக்கழகம்

உண்மையில், தமிழென்பது நிலைபேறற்று பண்டிதர்கள், மடாலயங்கள், மடத்தலைவர்கள் எனக் குறிப்பிட்ட வரையறைக்குள் இருந்த காலகட்டம்தனில் பேதங்கள் கொள்ளாது, வேறெதனையும் யோசியாது 'சுவை புதிது பொருள் புதிது வளம் புதிது சொற் புதிது சோதி மிக்க நவகவிதை எந்நாளும் அழியாத மகா கவிதை' என இலகு நடையில், எளிய சொற்களைக் கையாண்டு அனைத்துத் தரப்பு மக்களிடத்தும் தன் கவிதைகளைக் கொண்டு சேர்த்திட்டார்.

அத்தோடு, எத்தனையோ கவிஞர்கள் வருவார்கள், போவார்கள் ஆனால் ஒரு சிலரே அழியா நிலை பெறுவார்கள். அத்தகையதாய் காலங்காலமாக இருந்து வந்த செய்யுள் நடை கவிதை அமைப்பை மாற்றி, புதுக்கவிதைகளுக்கு வித்திட்டு புதுநெறி காட்டிய புலவன் பாரதி என்பதால் அவன் மகாகவி எனப்படுகின்றான். அதுமட்டுமின்றி முண்டாசுக் கவியவன் தன் கவிதைகளில் தான் எழுதிடாத விடயங்களே இல்லை எனும் படியாக தேசப்பற்று, தேச விடுதலை, தீண்டாமை, தமிழ், தமிழர் நலன், சமயப்பொதுமை, சமத்துவம், பெண் விடுதலை, சமயம், காதல், நாட்டுப்பற்று, சமுதாயப் பொதுமை என சமூகத்திற்கு கவிதைகளை அள்ளி வழங்கியமையானது, ஒரு குறிப்பிட்ட பரப்புக்குள் மாத்திரம் தன்னை சுருக்கிடாது மக்களுக்காக, மக்களின் நலனுக்காக அனைத்தையும் பேசியவராக மகாகவி பாரதியார் திகழ்கிறார்.

அந்தந்தக் காலத்து பிரச்சினைகளைப் பேசுபவர்கள் என்பதைத் தாண்டி எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னரே காலம் கடந்து எதிர்காலத்தில் நடக்க இருப்பவற்றை தன் எழுத்துக்கள் மூலம் அறிவிப்பவனை பொதுவில் மகாகவி என்பர். அவ்வகையில் பாரதியார் வாழ்ந்த காலம் தனில் தேசத்திற்கான சுதந்திரமோ, விடுதலையோ அன்றி போராட்டங்களே இடம்பெற்றன. ஆனால் பாரதி அக்காலத்திலேயே

**'ஆடுவோமே பள்ளு பாடுவோமே**
**ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம்'**

என சுதந்திரம் பற்றி எடுத்துரைத்த தீர்க்கதரிசியாக எடுத்துக்காட்டப்படுகிறார்.

மேலை நாடுகளில் ஏற்பட்ட அறிவியல் வளர்ச்சியானது பாரதியாரின் கவிதைகளிலும் தாக்கம் தனை ஏற்படுத்தியது. ஆதலாலேயே மேலைத்தேயத்தவரால் கண்டுபிடிக்கப்பட்ட வானொலியானது, தேச விடுதலை பற்றி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த பயன்படும் என 'காசிநகர்ப் புலவர் பேசும் உரைதான் காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்' என்றார். பத்திரிகை வழி மக்களுக்கு விடுதலை உணர்வை கொடுத்திட பத்திரிகைக்குரிய காகித ஆலையை உருவாக்கிட வேண்டும் என்றார். இதனையே 'ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம் ஆலைகள் வைப்போம் கல்விச்சாலைகள் வைப்போம்' என்று உரைத்தார். இவற்றையெல்லாம் யோசித்து கவிகளை அமைத்திட்டவரை மகாகவி என்னாது வேறென்ன உரைத்திட முடியும்.

'வங்கத்திலே ஓடிவரும் நீரின் மிகையால் மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்', 'குடைகள் செய்வோம் உழு படைகள் செய்வோம்', 'கோணிகள் செய்வோம் இரும்பாணிகள் செய்வோம்', 'வானையளப்போம் கடல் மீனை அளப்போம்', 'சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்' என்றவாறாக தன்னுடைய நாடானது தன்னிறைவு பெற்று விளங்கிட வேண்டும் என பற்பல அறிவியல் ரீதியான, அரசியல் பொருளாதார ரீதியான எதிர்ப்பார்ப்புக்களை முன்மொழிந்தவராக பாரதி காணப்படுகின்றார்.

சுதந்திரப் போராட்டத்திற்காக அனைவரையும் அழைத்ததோடு, தேசப்பற்றை மக்களிடத்தில் விதைத்து சுதேச மக்களை தன் எழுத்தின் மூலம் கிளர்ந்தெழச் செய்த வையத்து மகாகவிஞன் இவராவார். அத்தோடு தேசப்பற்றை அனைவரிடத்தும் விதைத்திடும் வகையில் தாம் ஒரே நாட்டைச் சேர்ந்தவர், தம்முடைய இனம் தமிழே, அனைவரும் ஆங்கே சகோதரர்கள் என எடுத்துரைத்த இவர் தன்மை மகாகவிக்கு உரித்தானது.

ஏன் சமூகத்தில் புரையோடி இருந்த எல்லா அடிமைத்தனத்தையும் உடைத்தெறிந்தவர் பாரதி என்ற வகையில் அவர் பேசு பொருளாகக் கொண்ட பெண் விடுதலை அவரை மகாகவி எனக் கொண்டாடியது. உண்மையில் பெண்களின் வாழ்வியலை பாரதிக்கு முன், பாரதிக்கு

பின் என்றே பிரித்து நோக்கிட வேண்டும். பண்போடும், பணிவோடும், பகுக்கப்பட்ட பட்டறிவோடும் பெண்ணையும் போற்றுகின்ற பகுத்தறிவினை வளரச் செய்து பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தை பாலித்திட வேண்டும் என்று எழுச்சியுறப் பாடியவர் பாரதியார்.

காலம் காலமாக தொடர்ந்து வந்த மூட நம்பிக்கை, சாதிய ஒடுக்கம், பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் தீண்டாமை போன்றவற்றுக்கு எதிராக குரல் கொடுத்த பாரதி தனது சொற்கணைகளால் அடக்குமுறைகளை உடைத்து எறிந்தார். தீண்டாமை ஒழிப்பு பற்றி 'சாதிகள் இல்லையடி பாப்பா குலத்தாழ்ச்சி உயர்வு கொள்ளல் பாவம்' என்று எடுத்துரைத்தார். பெண்ணை தன் கவிகளில் ஆணாக்கிய பாரதி 'பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்' என பெண்ணுரிமையைப் பேசியதோடு 'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமை தன்னை கொளுத்திடுவோம்' என பெண் விடுதலைக்காக பெண்களைத் தூண்டினார். அதுமட்டுமின்றி பாரத நாட்டை 'பாரத மாதா' என்றும் திருக்கோயில் தெய்வங்களை 'சுதந்திர தேவி' என்றும் தான் வணங்கிடும் கடவுள் 'பராசக்தி' என்றும் பெண்களை முன்னிலைப்படுத்தி பேசிய பைந்தமிழ் கவிஞன் இவர் ஆவார்.

மேலும் சமூக விடுதலை பற்றி எடுத்துரைத்திடும் பாரதியின் கவிதைகளில் பொதுவுடைமை கருத்துக்களின் ஆதிக்கம் அதிகமாகவே பிரதிபலித்திடும்.

**'முப்பதுகோடி ஜனங்களின் சங்கம்**
**முழுமைக்கும் பொதுவுடமை',**
**'தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை எனில்**
**இந்த ஜகத்தினை அழித்திடுவோம்'**

என்று பொதுவுடைமையை பேசியவரும் பாரதியே. உலகின் எந்த மூலையில் எந்த நாட்டில் தொழிலாள வர்க்கங்களுக்கு பிரச்சனைகள் ஏற்படுமாயினும் ஆங்கே தன் கவி வரிகளால் முன்னிற்பவர் பாரதியே. சோசலிச கருத்துக்கள், புரட்சிகள், இத்தாலிப் புரட்சி, பீஜித் தீவு கரும்புத் தோட்ட தொழிலாளர்களின் புரட்சி என அனைத்தையும், தான் வாழ்ந்த சமகாலத்து மக்கள் விடயங்களையும் கவிதை வடிவில் வெளிப்படுத்தியவர் இவர். கடந்த தலைமுறைகளில் ஆகச்சிறந்த சமூகப்பற்றுக்கொண்ட ஒப்பற்ற கவிஞர் இவர் என்றால் மிகையில்லை.

அதுமட்டுமின்றி 'பூமியிலே கண்டம் ஆய்ந்து மதங்கள் கோடி புத்த மதம் சமணமதம் பார்ஸி மார்க்கம் சாமியென, யேசு பதம் போற்றும் மார்க்கம்' என சமயப்பொதுமையையும் விலக்கிடாது பேசியவர் பாரதியார். இவரை மகாகவி என்று அழைக்காது விடுவதுதான் பெருந்தவறெனலாம். அத்தோடு 14 மொழிகளில் புலமை கொண்ட பாரதி 'இருந்தமிழே உன்னால் இருந்தேன் உம்பர் விருந்தமுதம் என்றாலும் வேண்டேன்' என அதீதமாய் தமிழைக் காதலித்தார். அதனால் தமிழ் மொழியின் பெருமையை பறைசாற்றிடும் முகமாக 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்' என்று உரைத்திட்டார்.

பாரதியே முதன் முதலில் புரட்சி, அக்கினிக் குஞ்சு போன்ற சொற்களையும் பிற இன்னோரன்ன தமிழ்ச் சொற்களையும் தமிழுக்கு அறிமுகப்படுத்தினார். முழுதுமாய் சிந்துப்பா வடிவில் கவி இயற்றிய முதல் நபராக திகழ்ந்ததோடு சுயசரிதை, காவியம், கேலிச்சித்திரங்கள், ஹைக்கூ, வசன கவிதை என புதிய வடிவங்களையும் தமிழுக்கு அறிமுகப்படுத்தினார். தமிழ்ப் பத்திரிகைகளில் தமிழ்த் திகதி, மாதம், வருடம் ஆகியவற்றை பதித்து வெளியிட்டார். வார்த்தை ஜாலங்களை பரவவிட்ட மகா காவியமாக குயில்பாட்டை படைத்தார், வீர ரசம் கொண்ட ஒரு படைப்பாக பாஞ்சாலி சபதத்தைப் பேசினார். சிறுகதைகள், கதைகள், கட்டுரைகள் என இலக்கியப் படைப்புகள் அனைத்திலும் புதுமையைப் புகுத்தினார். இத்தகையதாக பாரதியை மகாகவி என்று ஆதாரப்படுத்திடும் சான்றாதாரங்கள் அதிகமே.

அவ்வகையில் மகாகவி என்பவர் கொடையளிப்பவர் ஆக, முண்டாசுக்கவி தமிழ் உலகத்திற்கு கொடைகளை அள்ளி அள்ளி வழங்கிவிட்டுச் சென்றவர் என்பதால் மகாகவி என இலக்கிய உலகில் புகழாரம் சூட்டப் படுகின்றார்.

❍❍❍

# எழுதத் தூண்டும் எண்ணங்கள்



பேராசிரியர் துரை மனோகரன்

## இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும்

"உண்மைக்கு ஒருபோதும் அழிவில்லை" என்று சொல்வார்கள். அது அண்மையில் நீதியின் வாயிலாக நிரூபிக்கப்பட்டு விட்டது. அரசியல் வேடத்தில் நாட்டைக் கொள்ளை யடித்துக் குட்டிச் சுவராக்கிய குடும்பத்தினருக்கும், அவர்களது சகபாடிகளுக்கும் எதிராக இலங்கை உயர்நீதிமன்றம் அதிசிறந்த தீர்ப்பொன்றை வழங்கியிருக்கிறது. காலங்காலமாக இலங்கை வரலாற்றில் பதிவுபெறப்போகின்ற உன்னத மான தீர்ப்பு, அது. எப்போதும் நாட்டின் பொருளா தாரத்தை நாசமாக்கி, நாட்டை மோசமாக்கிய பழியைப் பிறர்மீதே போட்டுவந்த குழுவினர், தம்மீதே அப்பழி வந்துசேரும் என்று கனவிலும் நினைத்திருக்கமாட்டார்கள். தமது நடிப்புத் திறமையால் இனவாதரீதியாகப் பெரும்பான்மை இன மக்களை மயக்கி, அடுத்த கட்டக் கொள்ளைக்குத் தயாராகியிருந்த வேளையிலே இத்தீர்ப்பு அவர்களுக்கு எதிராக வந்திருக்கிறது.

நமது நாடு சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்து, நேர்மையான ஆட்சியாளர் எவரையும் இதுவரை காணமுடிந்ததில்லை. இனவாதத்தைப் பொன்போல் பேணிவளர்ப்பவர்கள், தாம் கையெழுத்திட்ட உடன்படிக்கையையே, பிறரின் எதிர்ப்பைக் கண்டு அஞ்சிக் கிழித்தெறிந்த கோழைகள், பிறநாட்டுடன் உடன்படிக்கை செய்து கையெழுத்திட்ட பின்பும், அதனை முழுமையாக நிறைவேற்றத் தவறும் சந்தர்ப்பவாதிகள், கொலைபாதகங்களுக்கும் அஞ்சாத பாவி களாக இருப்பதோடு, தமது குடும்ப நன்மைக் காக அரசியல் செய்து நாட்டையே கொள்ளை யடித்துச் சொத்துச் சேர்க்கும் கொள்ளைக் காரர்கள், முட்டாள் தனத்தையே தமது அரசியல் கொள்கையாக வரித்துக் கொண்டு செயல்பட்ட மந்த புத்திக்காரர்கள், யாரோ அரசியல் வேடத்தில் நாட்டைக் கொள்ளையடிக்க, அதன் சுமையை மக்கள்மீது திணிக்கும் தந்திரசாலிகள் – இவர்கள்தான் மக்களின் எசமானர்களாக, நாட்டை ஆளும் ஆட்சியாளர் களாகக் காலம்தோறும் நமது நாட்டில் வலம்வந்து கொண்டிருக்கிறார்கள். தேர்தல்களின்போது, பெரும்பான்மை இனப் பெரும்பாலான மக்களும் தமக்கே இயல்பான பாமரத்தனத்தோடு இவர் களைத் தான் காலம்தோறும் அரியணை ஏற்றி அழகுபார்த்துக்கொண்டிருக்கிறார்கள்!

இத்தகைய ஒரு நிலையிலேயே ஓர் அரிய நீதிமன்றத் தீர்ப்பு அண்மையில் வெளிவந்தி ருக்கிறது. இந்தத் தீர்ப்பு வெளிவந்த நிலையில், அதன் பிரதிபலிப்பை நாடாளுமன்ற நடவடிக்கை களிலும் அவதானிக்க முடிந்தது. நாடாளுமன்றத்தில் பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல, நாட்டின் பொருளாதார நெருக்கடிகளுக்குக் காரணமாக விளங்கும் குறிப்பிட்ட ஏழு பேரிடம் இருந்தும், பாதிக்கப்பட்ட 22 மில்லியன் மக்களில் ஒவ்வொருவரும் ஒன்றரை இலட்சம் வீதம் நஷ்டஈட்டைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று குறிப்பிட்டுள்ளார். சட்டரீதியாக அவ்வாறு ஒரு முயற்சி செய்யப்பட்டால், அது வரவேற்கக் கூடியதே. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, குறிப்பிட்டவர்களிடம் இருந்து நாட்டுமக்கள் அனைவரும் இழப்பீட்டைக் கோரவேண்டும் என்று தெரிவித்துள்ளார். கலாநிதி ஹரஷ் டி சில்வா, இன்னும் ஒருபடி மேலே சென்று, குறிப்பிட்ட ஏழு பேரையும் 'பொருளாதாரக் கொலையாளிகள்' என நாமம் சூட்டிக் குறிப்பிட்டார். அத்தோடு, குறிப்பிட்ட ஏழு பேரின் குடியுரிமை குறித்து நாடாளுமன்றத்தின் நிலைப்பாடு என்ன என்பதையும் கேள்வியாக எழுப்பியிருந்தார். பாட்டலி சம்பிக்க ரணவக்க, நாட்டின் பொருளாதார நெருக்கடிக்குக் காரணமானவர்களுக்கு நீதிமன்றத்தின் ஊடாகத் தண்டனை பெற்றுக்கொடுக்கவேண்டும் என்று குறிப்பிட்டார். இவர்கள் அத்தனை பேரின் கருத்துகளும் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கவையே.

அதேவேளை, நாட்டைப் பொருளாதார ரீதியில் குட்டிச்சுவராக்கிய குறிப்பிட்ட ஏழு பேரிடம் இருந்தும் சட்டரீதியான முறையில் இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுக்கொள்ளவும், அவர்களுக்குச் சட்டரீதியான முறையில் தண்டனை பெற்றுக்கொடுக்கவும் சட்டரீதியிலான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக

அறிய முடிகிறது. உண்மையில், அவர்கள் தொடர்பாக இத்தகைய நட்வடிக்கைகள் நிச்சயம் எடுக்கப்படவேண்டும். அப்போதுதான், அரசியல் வேடத்தில் நாட்டைக் கொள்ளையடித்தவர்களின் கொட்டம் அடங்கும். எதிர்கால அரசியல் கொள்ளைக்காரர்களுக்கும் ஒரு நல்ல பாடமாக அமையும்.

**குறிஞ்சிமலைச் சாரலிலே...**

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம் அண்மையில் கண்டி இந்துக் கலாசார மண்டபத்தில் குறிஞ்சிச்சாரல் என்ற குதூகல நிகழ்வை நடத்தியது. இதற்கு முன்னர் ஹற்றன், திருகோணமலை, யாழ்ப்பாணம் முதலான இடங்களில் இந்நிகழ்ச்சி நடத்தப் பட்டு வந்திருக்கிறது. கொரோனாவின் கொடுமை யால் இடையிலே சிலகாலம் இந்நிகழ்ச்சியை நடத்த முடியாமல் போய் விட்டது. பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத்தலைவரும், தமிழ்ச்சங்கப் பெருந்தலைவருமான பேராசிரியர் ஸ்ரீ. பிரசாந்தனின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பேராதனைப் பல்கலைக்கழகப் பிரதம நூலகர் இரா.மகேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். நிகழ்வின் தொடக்கத்தில் பல்கலைக்கழக மாணவியரின் நர்த்தனாஞ்சலி என்ற வரவேற்பு நடனத்துடன் சங்க வரலாற்றுக் காணொளியும் காண்பிக்கப் பட்டது.

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தினால் வழங்கப்படும் சங்கச் சான்றோர் விருதினை, இம்முறை இலங்கையின் பிரபல எழுத்தாளர் மு. சிவலிங்கம் பெற்றுக்கொண்டார். அவரின் எழுத்தாளுமையைப் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கம் கௌரவித்தமை, மனத்துக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தந்தது. பேராதனைப் பல்கலைக்கழக மாணவ, மாணவியர் கலந்துகொண்ட 'தமிழர் வாழ்வில் அதிக முக்கியத்துவம் பெறுவது உறவே, கல்வியே, அறமே, காதலே' என்ற தலைப்பிலான சொற்போர் எனது தலைமையில் நடைபெற்றது. சொற்போரில் பங்குபற்றிய மாணவர் அனைவரும் தத்தமது வாதத்திறமைகளினால் நிகழ்ச்சிகு வலுவூட்டினர்.

கண்டி மோப்ரே கல்லூரி மாணவிகள் வழங்கிய தமிழிசைக்கானம் என்ற நிகழ்ச்சி அனைவரையும் கவரக்கூடிய முறையில் இடம் பெற்றது. இந்துமாமன்றம் கண்டி அறக்கட்டளை சார்பில் இடம்பெற்ற வீணை இசை, மாலை நேரத்து மயக்கும்பொழுதை இனிமையாக்கியது. ஆனால், நிகழ்ச்சியின் நீளத்தைக் குறைத்திருக் கலாம். பேராதனைப் பல்கலைக்கழக மாணவ, மாணவியரின் இசைச்சாரல் நிகழ்ச்சி, இயல் பாகவே மனத்தைக் கொள்ளைகொண்டு விட்டது. கண்டி திரித்துவக் கல்லூரி மாணவர் கள் வழங்கிய வில்லுப்பாட்டு நிகழ்ச்சியும், அக்கல்லூரி மாணவர்களின் கலைத்திறமையை வெளிப்படுத்தியது.

குறிஞ்சிச்சாரல் நிகழ்ச்சியில் இடம்பெற்ற நடன நிகழ்ச்சிகளும் பார்வையாளர்களை இயல் பாகவே கவர்ந்திழுக்கக்கூடியனவாக இருந்தன. நிருத்யக்ஷேத்ரா வழங்கிய சிவதாண்டவம், கலைத்துவச் சிறப்புடன் அழகுற அமைக்கப் பட்டிருந்தது. பேராதனைப் பல்கலைக்கழக மாணவ, மாணவியர் நிகழ்த்திய சங்கநிலச் சங்கமம் என்ற ஐவகை நிலம் சார்ந்த நடனம், அவர்களின் கலைத்திறமைக்கு ஒரு சிறந்த சான்றாக விளங்கியது. ஐவகை நிலங்களின் வாழ்வியலையும் பார்வையாளர் கண்முன் கொண்டுவந்து நிறுத்திய ஓர் அருமையான நிகழ்ச்சி, அது. பேராதனைப் பல்கலைக்கழக மாணவிகள் வழங்கிய மண்வாசனை என்ற நடனமும் பார்வையாளர் கண்களையும், மனங்களையும் ஒருசேரக் கவர்ந்தது. கண்டி விகாரமகாதேவி பெண்கள் கல்லூரியின் காளி நடனம், கண்களுக்குச் சிறந்த காட்சி கொடுத்த இன்னோர் அருமையான நிகழ்ச்சியாக விளங்கியது.

நிகழ்ச்சியில் பேராதனைப் பல்கலைக்கழக மாணவ, மாணவிகள் வழங்கிய விடியலை நோக்கி... என்ற நாடகமும் பார்வையாளர்களை நன்கு கவர்ந்தது. நிலக்சன், சுவிஸ்ரன் ஆகியோர் எழுதிய இந்நாடகத்தை நிலக்சன் இயக்கியிருந்தார். இந்நாடகத்தில் பங்குகொண்ட அனைவரும் தமது நடிப்புத்திறனைச் சிறப்புற வெளிப்படுத்தினர். சிறந்தவொரு நாடகத்தைப் பார்த்து அனுபவித்த பெரும் திருப்தி எனக்கு ஏற்பட்டது.

வினோ தலைமையில் இயங்கும் தற்போதைய தமிழ்ச்சங்கக் குழுவும் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது. அக்குழுவினருக்கு எனது பாராட்டுகள்! தமிழ்ச்சங்கத்தின் வளர்ச்சியோடு இணைந்து செயல்படும் அனைவரும் எமது வாழ்த்துக்குரியவர்கள்.

❍❍❍

**கலாபூஷணம் கே.பொன்னுத்துரை**



# சம கால கலை இலக்கிய நிகழ்வுகள்



## மூத்த நாதஸ்வரக் கலைஞருக்கான வாழ்நாள் சாதனையாளர் கௌரவம்

இலங்கைவங்கியின் யாழ் முதல்தர கிளையின் கலைமகள் விழாவில் யாழ்ப்பாணத்தின் புகழ் பூத்த மூத்த நாதஸ்வரக் கலைஞர்களான திருவாளர்கள் கே. ஆர்.சுந்தர மூர்த்தி,வி.கே. பஞ்சமூர்த்தி ஆகியோர், வங்கியின் பிரதம முகாமையாளர் திரு கே. சிவஞானசுந்தரம் அவர்கள் தலைமையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்களான பேராசிரியர் பொன். பாலசுந்தரம் பிள்ளை, பேராசிரியர் என் .சண்முகலிங்கன் ஆகியோரினால் கௌரவிக்கப் பெற்றமையை இங்கு காணலாம்.

❍❍❍

## 25ஆவது வெள்ளி விழா தேசிய கொடகே தேசிய சாகித்திய விழா 2023

*25ஆவது வெள்ளி விழா தேசிய கொடகே தேசிய சாகித்திய விழா 2023 கடந்த நவம்பர்-15 அன்று பிற்பகல் 2.30 மணிக்கு கொழும்பு-7யில் அமைந்துள்ள தேசிய நூலக சேவைகள் சபை கேட்போர் கூடத்தில் ˙நடந்த விழாவின் படங்கள்*







சென்ற இதழிலே ஒல்லாந்தர் காலத்து இலங்கை நாணயங்களில் பயன்படுத்தப்பெற்ற சிங்கள இலக்கங்களைப் பார்த்தோம். மேலும் 'அரை' என்னும் பின்ன இலக்கத்துக்கு இலங்கை நாணயங்களிலே பயன்படுத்தப்பெற்றிருந்த தமிழ்க் குறியீட்டையும் குறிப்பிட்டோம். இலங்கை நாணயங்களிலே தமிழ் இலக்கங்களின் பயன்பாடு 1950களின் பிற்பகுதிவரை இருந்தமை குறிப்பிடத் தக்கது. இதுசார்ந்த சில நாணயங்களை இங்கு நோக்குவோம்.

### (33) 'கால்' சத நாணயங்கள்

ஆங்கிலேய ஆட்சிக்காலத்திலே விக்டோரியா ராணி, எட்வேர்ட் 7ஆம் மன்னன், ஜோர்ஜ் 5ஆம் மன்னன், ஜோர்ஜ் 6ஆம் மன்னன் மற்றும் எலிசபெத் 2ஆம் ராணி ஆகிய ஐவரின் அடையாளங்களுடன் வெளிவந்த நாணயங்களில் தமிழ் இலக்கங்களைக் குறிப்பதற்கான குறியீடுகள் பயன்படுத்தப்பெற்றுள்ளன. 2ஆம் எலிசபெத் ராணிக்குப் பின்னர் (1950களின் பிற்பகுதி) வெளியான நாணயங்களிலே தமிழ் இலக்கக் குறியீடுகள் அற்றுப்போய் தற்கால சாதாரண இலக்கங்கள் பயன்பாட்டில் கொண்டுவரப்பெற்றுள்ளன.



விக்டோரியா ராணி (1870) மற்றும் எட்வேர்ட் - 7 மன்னன் (1904) ஆகியோரின் ஆட்சிக் காலங்களில் இலங்கையில் புழக்கத்திலிருந்த 'கால்' சதம். இவற்றிலே 'வ' என்னும் தமிழ்ப் பின்னக் குறியீட்டைக் காணலாம்.



ஆங்கிலேய ஆட்சிக் காலத்திலே வெளியாகிய 'அரை' மற்றும் 'ஒரு' சத நாணயங்கள். இவற்றிலே 'அரை' பெறுமானத்தைக் குறிக்க, ௨ தமிழ் இலக்க குறியீடு பயன்படுத்தப்பட்டுள்ளது.

'கால்' சதத்தைப் பொறுத்தவரையிலே விக்டோரியா ராணி, மற்றும் எட்வேர்ட் 7ஆம் மன்னன் ஆகியோரின் காலங்களில் மாத்திரமே வெளிவந்துள்ளன. கி.பி.1909க்குப் பின்னர் 'கால்' சதத்தின் பெறுமதி குறைந்தவுடன் இவை வெளியிடப்படவில்லை. ஆனால், எலிசபெத் 2ஆம் ராணி தவிர்ந்த ஏனையோரின் காலங்களில் 'அரை' சதம் மற்றும் 'ஒரு' சத நாணயங்கள் வெளியாகியுள்ளன. 'ஒரு' சத நாணயங்களிலே இலக்கம் ஒன்றைக் குறிப்பதற்கான 'க' என்ற குறியீடு பயன்படுத்தப்படாமல் 'சதம்' என்று எழுத்துக்களால் மாத்திரம் குறிக்கப்பெற்றுள்ளமை கவனிக்கத்தக்கது.

### (34) 'இரண்டு' சத நாணயங்கள்

ஜோர்ஜ் 6ஆம் மன்னன் மற்றும் 2ஆம் எலிசபெத் ராணி ஆகியோரின் 'இரண்டு' சத நாணயங்கள் இலங்கையிலே வெளியிடப்பட்டுள்ளன. இவை நிக்கல்-பித்தளை உலோகக் கலப்பால் ஆனவை என்பது குறிப்பிடத்தக்கது. ஜோர்ஜ் 6ஆம் மன்னன் காலத்திலே வெளியாகிய 'இரண்டு' மற்றும் 'பத்து' சத நாணயங்கள் முதன்முறையாக இலங்கை நாணய வரலாற்றிலே புதியதொரு வடிவத்தைக் கொண்டவையாக அமைந்தன. இவை 8 இதழ்கள் கொண்ட மலர் போன்ற அமைப்பிலே அமைந்தன.



ஜோர்ஜ் 6ஆம் மன்னன், மற்றும் எலிசபெத் 2ஆம் ராணி ஆகியோரின் 'இரண்டு' சத நாணயங்கள். இவற்றிலே இரண்டு என்பதைக் குறிக்கத் தமிழ் இலக்கக் குறியீடு பயன்பட்டிருப்பதைக் காணலாம்.

(குறிப்பு : இக்கட்டுரையில் காட்டப்பட்ட நாணயங்கள் யாவும் ஆசிரியரின் தனிப்பட்ட சேகரிப்பிலிருந்து)

## (35) 'ஐந்து' சத நாணயங்கள்

தமிழ் எண்களுக்கான குறியீடுகளைத் தாங்கி இரண்டு வகையான ஐந்து சத நாணயங்கள் இலங்கையிலே வெளிவந்துள்ளன. சாதாரண வட்ட வடிவத்தில் அமைந்த விக்டோரியா ராணியின் நாணயமும், வட்ட வடிவத்திலேயிருந்து மாறு பட்டு சதுர வடிவமாக அமைந்த ஏனைய மன்னர்களின் நாணயங்களும் ஆங்கில ஆட்சிக்காலத்திலே வெளியிடப்பட்டுள்ளன.












சதுர வடிவத்தில் அமைந்த இந்த ஐந்து சத நாணயங்கள் நிக்கல்-செப்பு மற்றும் நிக்கல்-பித்தளை ஆகிய கலப்பு உலோகங்களாலானவை. விக்டோரியா ராணியின் ஐந்து சத நாணயம் ஏறத்தாழ 3.5 சென்றிமீற்றர் விட்டத்துடன் 18.5 கிராம் நிறையுடன் அமைந்த கனதியான நாணயமாக உள்ளது.

தமிழ் எண்களுக்கான குறியீடுகளைத் தாங்கி கால், அரை, இரண்டு, ஐந்து, பத்து, இருபத்தைந்து மற்றும் ஐம்பது சத நாணயங்களை 1950களின் பிற்பகுதிவரை ஆங்கிலேயர்கள் வெளியிட்டனர். ஒரு சத நாணயங்களில் தமிழ்க் குறியீடு இல்லை. இவை, செப்பு, வெள்ளி, நிக்கல்–பித்தளை, நிக்கல்–செப்பு ஆகிய உலோகங்களாலானவை. மேலும், வட்ட வடிவம், மலர் வடிவம், சதுர வடிவம் ஆகிய வடிவங்களிலும் அமைந்துள்ளன.




| | விக்டோரியா | எட்வேர்ட் - 7 | ஜோர்ஜ் - 5 | ஜோர்ஜ் - 6 | எலிசபெத் - 2 |
|---|---|---|---|---|---|
| கால் சதம் | ஆம் | ஆம் | | | |
| அரை சதம் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் | |
| ஒரு சதம் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் | |
| 2 சதம் | | | | ஆம் | ஆம் |
| 5 சதம் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் | |
| 10 சதம் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் | |
| 25 சதம் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் | |
| 50 சதம் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் | |

GNANAM - Registered in the Department of Post of Sri Lanka under No. DOP/News/60/2023

## (36) 10, 25,50 சத வெள்ளி நாணயங்கள்




பத்து என்னும் இலக்கத்தை ‘க0’ என்று தமிழில் குறித்து இரண்டு விதமான பத்து சத நாணயங்களை ஆங்கிலேயர்கள் வெளியிட்டனர். இவற்றிலே ஒன்று மலர் போன்ற அமைப்பிலும் மற்றையது வட்ட வடிவிலும் அமைந்துள்ளன. வட்ட வடிவத்திலே அமைந்த பத்து சத நாணயங்கள் முழுவதும் தனி வெள்ளியில் ஆக்கப்பெற்றவை. 1900களின் ஆரம்பங்களில் வெளிவந்த கால், அரை, ஒரு, ஐந்து சதங்கள் செப்பு உலோகங்களில் இருக்க 10, 25, 50 சத நாணயங்கள் தனி வெள்ளி உலோகத்திலே அமைந்துள்ளமை பயன்பாட்டிலே இந்நாணயங்கள் கொண்டிருந்த முகப்பெறுமதியை எமக்குக் காட்டுகின்றன.

அத்துடன் செப்பு நாணயங்களில் காணப்பெற்ற பனை மரத்திலும் சற்று மாறு பாடான வடிவம்கொண்ட பனை மரத்தை இந்த வெள்ளி நாணயங்கள் கொண்டி ருக்கின்றன.




மலர் வடிவத்தில் அமைந்த பத்து சத நிக்கல்-பித்தளை நாணயம்.






ஒரே காலத்தில் வெளியான செப்பு நாணயங் களிலும் வெள்ளி நாணயங்களிலும் வேறுபாடான பனை மரங்கள்.







இத்த நாணயத் தொடரிலே 273ஆம் இதழிலே குறிப்பிட்டதற்கமைய 1800களில் ஆங்கிலேயர்கள் வெளியிட்ட நாணயங்களில் பலவிதமான யானைகளின் வடிவங்கள் இருப்பதைப்போன்று 1900களில் வெளியிட்ட நாணயங்களிலே பலவிதமான பனை மரங்களின் வடிவங்கள் காணப்பெறுகின்றன. ஆங்கிலேயர்களைப் பொறுத்தவரையில் இலங்கையில் பரவலாகக் காணப் பெற்ற யானைகளையும் பனை மரங்களையுமே இலங்கையின் அடையாளமாகக் கொண்டனர். அவர்கள் இலங்கை யிலே எங்கேயுமே சாதாரணமாகக் காணமுடியாத சிங்கங்களின் உருவத்தை நாணயங்களில் பொறிக்கவில்லை.

தொடரும்

ISSN 2478-0340
9 772478 034009